O-,85
N24
67902

உ

சிவமயம்.

பெரியபுராணம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில்
ஒருவராகிய
திருநாளைப்போவார் என்னும்

# நந்தனார்சரித்திரக் கீர்த்தனை.

சிதம்பரக்கும்மி,

8-ஐதீகபடங்களுடன் மகா சிதம்பரசக்கரமும்
சேர்ந்திருக்கிறது.

இவை
ஆனைதாண்டபுரம்
பாரதி-கோபாலகிருஷ்ணை...
இயற்றப்பட்டு

சுத்தப் ... பாயித்
பதிப்பு ... திருப்பணி
... வாளும்

சென்னை-சௌக்கார்ப்பேட் [redacted]

பூ-ரா-அப்பாதுரைமு [redacted]
பிரசுரிக்கப்பட்டது.

[redacted]

சென்னை
ஸ்ரீ ஆதிமூலம்பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

திவிலை] 1923. [அணா 12.

16 FEB 1924

894.8113
3185

67902

O-7.8F
N21

18 FEB 1921

உ

திருச்சிற்றம்பலம்.

# நந்தனார் சரித்திரவசனம்.

திருவெண்ணீறுதரித்த பராசக்தியாகிய உமாதேவியார் சகிதம் பரமசிவன் திருக்கொலுவீற்றிருக்கும் வெள்ளிமலையானது, இமயமலையின் பக்கத்தி லிருக்கின்றது, அது, பெரியோர்கள் பரிசுத்தமனம்போலும் படிகம்போலும், பலவுலகிற் புண்ணியங்களெல்லாந் திரண்டுருண்டொரு வடிவாகப் பிரகாசிப்பதுபோலு மிருக்கின்றது. அதில், இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களினோசையும், வித்தியாதரர்கள் வீணையோசையும், யானைகளுடைய முழக்கமும், வானதுந்துபி முழக்கமும், இடைவிடாதொலிக்கின்றன. அன்றியும், தேவர்கள் சாமாலைகளும், கற்பகமாலைகளும், கண்டெப்பலமுனிவர்க ளஞ்சலிசெய்து அம்மலைப்பக்கலில் நெருங்கியிருக்கின்றனர். அது, அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசிகள், போகபூமியர் என்னும் பதினெண்கணங்களுந் துதிக்கத்தக்கது. அக்கயிலாயமலையின்மேல், கோடிசூரியர் பிரகாசிப்பதுபோலும் விளங்குகின்ற நவமணிகள் பதிக்கப்பட்ட திருக்கோயிலின் முதற்கோபுரவாயிற் காவற்றலைவராயிருப்பவர் நந்திதேவர். அவர், பரமசிவனுடைய திருப்பணிகளுக்கும் திருக்கொலுவிற்கும் அதிகாரத்தலைவர். இவர், உடைவாளும் திருப்பிரம்பும் பெற்றுக் கைலையைக்காக்கப்பட்டவர். தேவர் முதலான யாவருக்கு மேலானவர், பரமசிவனிடத்து அதிகபக்தியும் அன்புமுடையவர். இவரால், இரவும் பகலும் இடைவிடாது காக்கப்பட்ட வெள்ளிமலை யென்னும் கைலாயத்தின் அடிவாரத்தில், எச்சமயத்தினும் மேலான சமயம் சைவ சமயமென்றும், எக்கடவுளிலும் பரமசிவனே மெய்க்கடவுளென்றும் அறிந்தவர் உபமன்னியமகாமுனிவர். இவர், கிருஷ்ணபகவானுடைய சிரசின்மேல் தம்முடைய திருவடிகளால் தீக்ஷைசெய்வித்தவர், இறப்பற்றிருக்கின்றவர், சிவபிரானுடைய கிருபையால் திருப்பாற்கடலைக்குடித்தவர், சிவனிடத் திடைவிடாதன்புள்ளவர்.

இந்த உபமன்னியமகாமுனிவர் தம்மிடத்தில் அடியார்களும், பெரியோர்களும், முனிவர்களும் புடைசூழ்ந்திருக்கின்ற சமயத்தில், அவ்விடத்தில் ஆயிரஞ்சூரியகிரணங்கள் ஒன்றாகத் திரண்டாற்போலும் ஒருபிரகாசந் திரண்டுதோன்ற அங்கிருந்தவர்களெல்லோரும் உபமன்னிய மகாமுனிவரை நோக்கி, இதென்ன ஆச்சரியம் இப்படிப்பட்ட பிரகாசந்தோன்ற வேண்டிய காரணமென்னவென்றுகேட்க, உபமன்னியர் சிவபிரானைத் தியானித்துச


சொல்லுகின்றார். தென்றிசையில் ஆதனூரில் அவதரித்த திருநாளைப்போவாரென்னுந் திருநாமம் பெற்றவர் சிவனது திருவருளால் வருகிறாரென்று இதனை முன்னமேயே உணர்ந்த அத்திசையை நோக்கி வந்தனஞ்செய்து ஆனந்தக்கண்ணீர் அங்கமெங்குஞ்சிந்த உபமன்னியர் துதிக்கும்போது மற்றவர்கள், தங்களுக்குண்டாகிய சந்தேகந்தீரும்படி அம்முனிவரைப்பணிந்து கேட்கத் தொடங்கினார்கள்.


எங்களாண்டவராகிய முனிவரே! சிவபிரானுடைய திருவடிகளையன்றி மற்றொரு தெய்வத்தையும் வணங்கமாட்டீரே இப்பொழுது வணங்கவேண்டிய காரணமென்னவென்று முனிவர்கள் கேட்க, உபமன்னியர் சொல்லுகின்றார். கேளுங்கள் முனிவர்களே? பரமசிவன் தரிக்கப்பட்ட திருமாலையும், திருவெண்ணீற்றினையும் அணிகின்றவர் என்னிடமிடையில்லாது கொண்டிட்டிருந்த சோழவளநாட்டிலிருக்கும் மேற்கா நாட்டில் ஆதனூரில் தீண்டப்படாதவர் குலத்தில் சேற்றிற் செந்தாமரை யுற்பவமாகுதற் போலும் நந்தனாரென்பவ ரொருவர் பிறந்தார். அவர் விவேகமுடைமையும், வெட்டிமைத்தனமாகிய காணியாட்சியும், சிவபணிவிடைகளில் மாட்சியும், சிவனடியாரைக் காணும் கண்காட்சியும் உடையவர். இவர், குலாசாரத்தன்மையுஞ் செய்து வைசெய்து நாள்தோறும் பூசைசெய்து சிவாலயங்களுக்கு அதையும் பேரிகை மத்தளங்களுக்குத் தோலும் வாரும் யாழுக்கு நரம்பும், சுவாமிக்குக் கோரோசனையும் முறையாகவும், இறையாகவுங் கொடுத்து வருவார் சிவாலயத்தில் அத்திக்கிரியைப்பொருட்டு தூரத்திலிருந்து மனங்களித்துருகிச் சிவனைப்பாடி யாடி வருகின்றவர். திருப்புன்கூரில் பரமசிவனைத் தரிசிக்க ஆதனூரிலிருந்துவந்து திருக்கோயிலின் திருவாயிலினின்று சிவலிங்க தரிசனைகாண ஆவலாகவும் சேவைகவும் வணங்கிப் பணிகையில், பரமசிவனார் சந்நிதிக்கு முன்னிருக்கும் நந்திதேவரை விலகும்படிசெய்து காட்சிகொடுத்தருளினார்.

நந்தனார். சுவாமிதரிசனைசெய்து வரும்வழியில் ஒருபள்ளத்தைக்கண்டு (அதைப் பெருங்குளமாகவெட்டித்) தம்முடைய ஆதனூரென்னுஞ் சேரிக்குப் போனார். இவ்வாறு பலதலங்களையும் வலஞ்செய்து தொழுதுக்கொண்டு சிதம்பரத்திற்குச் செல்ல மனம்வைத்து தம்முடைய சாதிக்கோயிலுக்குப்போக யோக்கியமில்லையென்று விசனமடைந்து நாளைக்குப்போவோமென்று சொல்லியிருந்தார். சிவபணிவிடையாதுக் தன்னை யடிமைகொண்டிருந்த வேதியருத்தரவு தடையினாலும் போகக்கூடாமல் அநேக நாட்கள் சென்றபடியால், அவருக்குத் திருநாளைப்போவாரென்ற பெயர் வந்தது. அதன் பிறகு, திருநாளைப்போவார் சிதம்பரம்வந்ததும் சுவாமி அவருக்குக் காட்சிதந்ததும் ஆகிய சரித்திரங்களை உபமன்னியமகா முனிவர் சொல்லக்கேட்டு யாவரும் பேரானந்த மடைந்தனர். இனிமேல் வரும் கொண்டிச் சிந்தினால் அச் சரித்திர விவரங்களைத் தெரிந்துகொள்ளலாம்.



தேவியந்திர சக்தி மகா [illegible]





## திருநாளைப்போவார்

என்னும்

# நந்தனார்சரித்திரக்கீர்த்தனை.

### கற்பகவிநாயகர் துதி.

காப்பு-வெண்பா.

கந்தன்றனையளித்த காதலனாற்பேறுபெற்ற
நந்தன்சரித்திரத்தை நானியம்பச்-சுந்தரஞ்சேர்
தில்லைமணிகோபுரத்திற் றேடிவளர்கற்பகத்தாள்
அல்லும்பகற்றுணை யேயாம்.

### முக்குறுணிவிநாயகர் துதி.

விருத்தம்.

நந்தனிகரத்தான்றில்லை நாயகனருளால்வந்த
நந்தன்முக்குறுணியான்றன் னளினபொற்றாள்வணங்கி
நந்தன்பேரருட்பாலுண்ட நற்புகழ்சொலிப்பின்பேரா
நந்தமுற்றுலகினோரும் நலமுடன்வாழ்குவேனே.

### சபாபதிதோத்திரம்.

கலி-விருத்தம்.

தக்கசீர்த்திகொள் நந்தன்சரித்திரம்
இக்கதையையெடுத்தே யியம்பிட

## திருநாளைப்போவாரென்னும்

செக்கர்மேனியன் தில்லைச்சபைதனிற்
றக்கத்தோமெனுந் தாள்தன்சிரங்கொள்வாம்.

## சிவகாமவல்லிதோத்திரம்.

விருத்தம்.

பாம்பினைத்தந்தையாகப் படைத்துப்பின்பெவருங்காணப்
பாம்பினைப்பணியாய்க்கொண்ட பரையருட்பாதமேத்திப்
பாம்பினிற்புலியும்பாம்பும் பார்த்திடநந்தனார்க்கன்
பாம்படிமுத்திதந்த பழங்கதைப்பகருவேனே.

## சுப்பிரமணியர்-தெய்வானை-சரஸ்வதி

### இலக்ஷ்மி-விஷ்ணு-இவர்கள் துதி.

விருத்தம்.

சச்சிதாநந்தசதாசிவனருளைச்சார்ந்த நித்தியானந்தநந்தன்
உச்சிதக்கதையைக்கீர்த்தனையாக வுலகெலாந்துதித்திடச்சொல்ல
அச்சிலைவேற்கையறுமுகன்தெய்வ யானைசெங்கலைமகள்மாலை
பச்சைமான்மற்றும்பரவியதேவர் பாதபங்கயம்பணிகுவனே.

---

## திருத்தொண்டர்முதலியதில்லைமூவாயிரவர் துதி.

விருத்தம்.

வாதவூரடியாரோடு மற்றறுபத்துமூவர்
பாதமேவணங்கித்தில்லை பதிதனிலுறுமேவும்
போதமூவாயிரத்தோர் பொன்னடிக்கமலமுன்னி
யோதுநந்தனார்சரிதை யுரைத்திடத்துணிந்ததாமே.

---

## அவையடக்கம்.

விருத்தம்.

சிற்பிகள்காண்போர்சிந்தையுமுவக்கச் செப்புநல்லின்புறத்தீட்டும்
விற்பனங்கண்டவறிவிலானெழுதும் விதமெனமுத்தமிழென்னுஞ்
சொற்புகழ்கல்வித்துறையெலாந்தெரிந்ததூயநற்புலவர் முன்கருதி
பொற்புறவிசைக்குங்கீர்த்தனமிதனைப் புவிமிசைமதிப்பர்களம்மா

## விநாயகர் துதி.

### இராகம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

கணநாதாசரணம் காத்தருள்
கணநாதாசரணம்,



அநுபல்லவி.

பணமார்சேஷன்றாங்கியபார்மீதினிலே நேருங்
குணமார்நந்தன்சரித்திரங்கூறகிருபைக்கண்பாருங். (கண)

சரணங்கள்.

சொல்லும்ப்ரணவமூலா தூயவேதாந்த நாதா
துலங்குமுனிவர்மனத்துகளறுத்தருட் போதா
லமோதகமுதல்நாடிநுகர்வி ஞேதா
நாயேன்சொலுந்தமிழைநாடிரக்ஷிக்குந் தாதா (கண)

அம்பரமானமன்றுளாடும்பர னளிக்க
அன்பர்நொடியினில்வலமாகிமனங் களிக்க
உம்பர்பிரானுகந்துவுயர்மாங்கனி யளிக்க
உளந்தளராமலுண்முதல்வாதய ரொளிக்க (கண)

தேஜோங்குநவரத்நச்சிகரமேலைக்கோ புரத்
தேவீற்றிருக்குமெங்கள் தேவாகுண்ட லாதா
பூஜித்தவர்க்குவரம் புரிந்தருளு மாதார
பூமிசைநாடகஞ்செய்புநிதவோ மாகர, (கண)

## புராணிகர்-விருத்தம்.

வளம்பெருந்தருமமோங்கியஆத
னூரினில்வாழ்ந்திடும்புலையர்
உளமகிழ்ந்தெங்கள்குடிப்பெயர்விளங்க
வுதித்தநற்றீபமேமணியே
களங்கிலாக்கதிரேயெனப்புகழ்ந்தோதக்
கதித்தசீர்நந்தனார்சரிதம்
விளம்பிடமுதலிற்றோடயம்படித்து
மேன்மையுமிகப்படைத்தனனே.

## தோடயம்.

### இராகம்-நாட்டை-ஆதிதாளம்.

திருவளர்தருமாத னூரர்-செறிபுலைக்குடிலவதாரர்
தருமநெறிநந்தனார்ப் பேரர்-சரித்திரமதனைச்சொலவே-ஆ-ஆ
அருள்வளர்கஜமுக சாமி-அம்பிகைதந்தருளுஞ்சாமி
அங்குசக்கரதல சாமி-அம்புயத்தாணிதந் துணையே-ஜெ
வண்டணிமாமலர்த் தாரன்-மண்டலம்வாழ்த்தியதீரன்
அண்டமெளியற்கு தாரன்-மன்னுங்கதைசொலவே-ஆ-ஆ

புண்டரீகபுரத் தீசன்-புராரியுளமகிழ்நேசன்
தண்டலர்மாமண வாசன்-தாமரைத்தாள்துணையே - ஜெய

---

## மங்களம்.

### விருத்தம்.

சங்கரன்றனக்குஞ்சண்முகன்றனக்குஞ்சதுர்முகப்பிரமனார்தனக்கும்
பங்கயமாற்குமவர்மனையாட்கும் பார்மகட்பாவலர்தமக்கும்
தங்கியவட்டவசுக்களானவர்க்கும் சதுர்மறையோதுமந்தணர்க்கும்
பொங்கியமூவாயிரநந்தணர்க்கும் பொதுப்படமங்களம்புகல்வாம்.

**இராகம்-அசாவேரி-அடதாளம்.**

### பல்லவி.

ஆதிமத்தியாந்தனுக்குமங்களம் எங்கள்
ஆநந்தநந்தனார்க்கு மங்களம்.

### அநுபல்லவி.

பாதிமதிநதியும் பாம்பும்புலி யுரியும்
சோதிக்குழையணியுந் துலங்கவருட்புரியும். (ஆதி)

### சரணங்கள்.

சிலையைவடிவழகிற் சிறந்தவொருபெண் ணாக்கி
சிலைவளைத்தபரசுராமன்கெர்வத்தைப் போக்கி
மலையைச்சுமந்துபெருமடுவிலொருகாற் றாக்கி
மாநடனங்கள்செய்த மாயமானினையெய்த (ஆதிமத்)

குருபரநாதருக்குங் குறமகட்பாக ருக்கும்
அருணகிரிநாதனுக் கருள்செய்விசாக ருக்கும்
ஒருமுருகாவென வுளங்களித்தவ ருக்கும்
உம்பர்கோனுக்குகந்த வுயரரசிதனைத்தந்த (ஆதிமத்)

சக்கரைமுக்கனியவல் தனைநுகர் நாதருக்கும்
சகலதேவர்தமக்குஞ் சகலவசுக் களுக்கும்
பக்குவமாகவிதைப் பாடுஞ்சங்கீத ருக்கும்
பார்மகட்கும்பங்கயம் பாவையவர்க்கும்விஜய. (ஆதிமத்)

## பெரியபுராணச்செய்யுள்-விருத்தம்.

திருமறையோர்புராணமவைபதின்மூன்றுசிவவே
தியரானவழிபட்டபுராணமீரிரண்டு
குரைகழன்மாமாத்திரரொன்றறுவர்முடிமன்னர்
குறுநிலமன்னவரைவர்வணிகர்குலத்தைவ



திருமைநெறிவேளாளர் பதின்மூவரிடைய
திருவர்சாலியர்குயவர் தயிலவினையாளர்
பரதவர்சான்றோர்வண்ணார்சிலமறவர்சீசர்
பாணரிவரோரொருவராம்பகருங்காலே.

## உபமன்னியபகவான்

### ரிஷிகளுக்குச்சொல்லிய - வசனம்.

இவ்வுலகில், பெரிதாகிய வேதசாஸ்திரங்களுக்குள்ளே மிக அநுசாரமாகிய பரசிவபத்தியை யுண்டுபண்ணுகின்ற பக்தவிலாசந்தை (உபமன்னியபகவானானவர்) அநேகரிஷிகள்கேட்கச்சொல்லுகின்றார். (பெரியபுராண) மென்றுசொல்லப்பட்ட நூல் சேக்கிழார் சுவாமிகளாலே செய்யப்பட்டது, ஸ்காந்தபுராணத்திலும், இன்னமனேகபுராணங்களிலுஞ் சொல்லப்பட்ட பத்திமார்க்கங்களாகிற கடலிலே நீரைக்கையாலள்ளிக்குடித்ததுபோலச் சிலதுகீர்த்தனங்களினாலும், விருத்தங்களினாலும், சிவபக்தர்கள் சரித்திரங்களைக்கொண்டாடுவதுபோல உளறினேனென்று, ஆனைதாண்டவபுரம்கோபால கிருஷ்ணையன் பெரியோர் அடிவணங்கி ஆனந்தம் பெருகிச்சொல்லிய திருநாளைப்போவார் சரித்திரத்தை யாவரும் விசாலிக்கேட்கும்படி சிரம்வணங்கி விளம்பினேன், பாரதம் பாகவதம், பகவற்கீதை, சிவரகசியம், ஸ்காந்தமுதலாகிய புத்திஞான வைராக்கிய சாஸ்திரங்களிலே மிகவுஞ்சாரமாகிய பரசிவபக்தி பண்ணாமல், இச்சரவேத பராங்கதனுபிநக்கின்ற பிராமணனைப்பார்க்கிலும், பரமசிவபாதாரவிந்த பத்திபண்ணுகிறவன் பறையனாயிருந்தாலும், பதினான்கு லோகத்தையும் பரிசுத்தம் பண்ணுவானென்று உபமன்னியபகவான் சொல்ல, அதற்கு ரிஷிகள்சொல்லுகின்றார்கள். பத்திஞான வைராக்கியங்களை தெரியப்படுத்தாநின்ற வேத புராணங்களைப்பார்க்க அரியாராம். அந்தியில் அவிவேகிகளாயிருக்கிற சண்டாளர்களுக்கு எப்போது பத்திவருமென்று ரிஷிகள்கேட்க உபமன்னியபகவான் சொல்லுகின்றார்.

## உபமன்னியபகவான் ரிஷிகளுக்குச்சொல்லுகின்ற

### தோண்டிச்சிந்து - ராகம் - புன்னாகவராளி.

பழனமருங்கனையும்-புலைப் - பாடியுமூ றைவீடுதனில்-கரை
யார் படர்ந்திருக்கும்-அதைச்-சுற்றிலும் நாய்கள் குலைத்திருக்கும்
[illegible]நாடிவட்டமிடும்-இளம்-பக்ஷைப்பிள்ளை மேலிச்சைகொண்டு
[illegible]-சொல்லியபறைகளில் வெள்ளொலும்

பும்-நரம்புங்குவிந்திருக்கும் - பல-நெட்டிமிதந்திடுங் குட்டைகளில் நண்டோகுடியிருக்கும் - சிறுநத்தைகமடம்வலுத்திருக்கும்-தோலுருங்கேணிகளில் - வெகு - தொல்லைப்படும்வாடை சொல்லறியாப் பரம்போ அடித்திருக்கும்-வயற்-பக்கங்களில் மெத்தநொக்கெலும்பும்-கிழித்தோல்நரம்புகளும் - அவர்க் - கினமில்லைசிறு மீனுலறும் தெருவில்விளையாடிக்கொண்டு-அவர்-தெந்தினம்பாடுவர்சுந்தரமாய் இலுப்பைமணியரையில்-கட்டி - இண்டந்தலைகளில் பூண்டிருக்கும் சங்குதோடுகாதணியும்-அருந் - தாவடமேயவர் தூவிடமாம்-மணியோதரித்திருப்பார் - தெரு - வாசற்புறத்தினி லேஸிக்கொண்டு கொண்டு-கொண்டாட்டமாயிருப்பார்-கையைக்கொட்டிக்கொண்டு தனக்கிஷ்டமுடன்-மதுவுண்டு கெக்கலிப்பார் - பறை-வாத்தியமும் வெகுநேத்தியுடன்-இருக்கும்புலைப்பாடி - அதில்-ஈசன்திருவடிநேசமுடன்; சாரும்-ஒருபுலையர் - அவர், சாதிமுறைத்தவறாதவராம் நந்தனாரவர்பெயராம-வெகு-நல்லவராமிந்தத்தொல்லுலகில்அவரே சிவனடியார் - அவர்க்-காருமெதிரில்லைத் தாரணியில்-கோடிகோடி சென்மங்களோ - முன்னங் - குற்றமறச்செய்தநற்றவமே-அவதாரமானதுவோ-ஈசன்-அன்புபுரியும் பேரின்பசுகம்-கொள்ளைகொள்ளவோபிறந்தார் - திருக் - கோவில்வலம்வந்தாராவலுடன்.- செய்யும் பணிவிடைகள்-ஈசன்-சிந்தைமகிழ்ந்து குளிர்ந்திடவே-மத்தளபேரிகைக்கும்-இசை-வார்கொடுத்தப்புறந்தோல்கொடுத்து-மறவாமலே தினமும்-நல்ல-வாசம் பெருகுங்கோரோசனையும் - தேவலாயங்கள் தோறும்-தந்து-சித்தமுருகிய பத்திவெள்ளம்-புரண்டோடிக்கங்கு கரை - என்று-புகலரிய வொண்ணாதுகண்டீர் - சாதியிலீனவர்-பேணிச் - சாருமுறவின்முறையாருடனே - திருப்புன் கூர்ச்சென்றரனைக்-கண்டு - சேவித்திசைபாடிபாவித்தபின-தில்லைச்சிதம்பரத்தைக்-கண்டு - சேவிக்கவேண்டுமென்றுவலுடன் - நாளைப்போவேனென்றாராம் - தன்னை - நாடும்பறையர்களோடிவந்து - அண்ணே நீபோகாதே-நமக்-காண்கிடபொல்லாதவன்வேண்டிக்கொள்ளான் பார்ப்பாரசாதியுண்டே-அதென்ன-பாடுபடுமுழக்காடுமங்கே-நமக்குத் திருநாளோ-அந்த-ஞாயமுண்டோ யென்னமாயமிது-வென்றே தடைசெய்தார்-சிவன்வேடிக்கைதானென்று-நாடிக்கொண்டேஅரியாதுபோலிருந்த - செம்பொன்-னம்பலத்தாடியைக்-கும்பிடவே-ஆதனூர்தனிலிருந்து - விடும் - அம்புபோலப்பறந்தையமின்றித் தில்லையருகில்வந்தார்-மனந்-தேறிக்கொண்டார்குறையாறிக்கொண்டார் கெண்டாமணியோசை-நாதில்-கேட்குதென்றாரதைப் பார்க்



வென்றே-கொண்டாட்டமாகிவந்தார்-கையைக்-குவித்துக் கொண்டே தனக்கம்பிட்டதோ-வென்றேமனமகிழ்ந்தார்-தெரு-வீதியிலே வந்துகாதலுடன்-கண்டார்களையாறி- இரு-கண்களிலாநந்தம்பொங்கிடவே-நின்றார்மதிற்புறத்தே-வெகு-நேத்தியென்றாரிதைப்பார்த்த தில்லை பணிந்தார்பரவசமாய்-நல்ல-பாக்கியசாலிக ளாகுமென்றார்-இதுதானோதில்லைப்பதி-என்று-எக்களித்தாரடிக் - கெக்கலித்தார்-ஐயாவுன்சந்நிதியோ-நான்-ஆசைகொண்டுவந்தேநேசமுடன் தெருவில்பொடித்தூளை-அள்ளித்-தேகமுழுதிலுந் தாகமுடன்-தரித்தார் திருநீறாய்-நாலு-சாஸ்திர வேதங்கள் பார்த்துணரும் - பெரியோரிருக்குமிடம்-இந்தப்-பேயனிருப்பது-ஞாயமல்ல - நானோபறைச்சாதி-தில்லை-நாதன் தரிசனமாதரவாய்ப்-பண்ணப்படுபாவி-இந்தப் பாரிலிருப்பதுசீரலவே - என்றேகுளத்தோரம்-புக்கி-ஏங்கினின்றார் துயர்நீங்கிநின்றார்-ஓயாப்பெருங்கவலை-கொண்டு - உள்ளங்குழைந்திட வெள்ளமெனக் - கண்ணீர்கரைபுரள - இரு-கைதொழுதாரவர் மெய்தொழுதார்-கீழேபுரண்டழுதார்-ஒன்றுங்-கேள்விமுறையில்லையோநாதா-வென்றேதலை குனிந்தார் - எந்தன்-வேதனையைக்கண்டு ஆதரிக்கும் - தெய்வங்கிடையாதோ - பாவி-சித்தந்தெளியவிரத்தி தந்து - வாவென்றழைப்பாரோ-விண்ணில் - வானவர்கள்போற்றூனமிலா-கனகசபைநடனம்-கண்ணிற் - காட்டக்களித்திடநாயடியேன்-வருந்தித்துதிப்பேனோ-எந்தன்-வாணாளொழிவது வீணெனவே-அடடாயிதென்னவென்று-சொல்லி-அந்நகர்வீதியை சுற்றிவந்தார்-இரவும்பகலோயா-ரதை-ஈசன்கண்டு விசுவாசமுடன் - பாலகிருஷ்ணனும் பணியும்-திருப்-பாதமுள்ள தில்லைநாயகனே - கனவிலுருவாகி-வந்து-காக்ஷிக்கொடுத்துக் கடாக்ஷித்தபின்-எரியினிடைமூழ்கி-வெகு-இன்பம்பெருகிய அன்பர்துதி-வேதமுனிவடிவாய்த் தில்லை-வேதியர்கண்டிருகைதொழுதார்-அங்கம்புளகிதமாய்ச்-செம்பொன்-னம்பலத்தாடிய சம்பிரமத்தைக்-கண்டாரறிந்திலரால்,

---

**இராகம், எதுகுலகாம்போதி-சாப்புதாளம்.**

பல்லவி.

நீசனாய்ப்பிறந்தாலும் போதும்
ஆசையுடனப்பலவனடியி லிருந்தாலும் (நீசனாய்ப்)

சரணங்கள்.

கோதிலாததவங்கள் புரிந்தாலும்-தங்கள்
குலவண்மைதவறாதநெறியி லிருந்தாலும்
வேதமுடியாவுமுணர்ந் தாலும்-மாயை
விலகாது ஒருநாளுந் துலையாதுதுன்பம் (நீசனாய்ப்)

களவுகொலைசெய்து வந்தாலும்-பழி
 காரருடன் என்னேரங்கூடியிருந் தாலும்
வளமறவேவாழ்வுகெட் டாலும்-நல்ல
 மனிதனவனிடமாகமறலியணு காது. (நீசனைப்)
எத்தகருமங்கள்செய் தாலும்-எங்கு
 மிடையாதகொடையாளியெனவிருந்தாலும்
கோத்திரக்கீர்த்திமிகுந் தாலும்-எங்கள்
 கோபாலகிருஷ்ணன்தொழும் பாதந்நினையாதோன். (நீச)

வசனம்.

இப்படியே பக்திசெய்தால்போதும் மற்றசாதி வருணாசிரமங்களினாலே ஒன்றும்பிரயோசனமில்லையென்றும், ஒரு இதிகாசத்தைச் சொல்லுகின்றார். பூர்வத்திலே, தில்லை வெட்டியானென்றும் பெற்றான், சாம்பனென்றும், ஆதனூர் நந்தசாம்பனென்கிற திருநாளைப்போவானென்றும் பெயர்பெற்ற இம் மூன்றுபேர்களுந் திருச்சிற்றம்பலத்தை யடைந்தார்கள். இம்மூன்றுபேர்களில், நந்தசாம்பனென்பவர் மாத்திரம் தில்லை மூவாயிரம் பேர்களும்பார்க்கச் சபாப்பிரவேசமானாரென்றுசொல்ல, ரிஷிகளெல்லாரும் ஆனந்தமடைந்து உபமன்னிய மகாரிஷியைப் பிரதக்ஷணஞ்செய்துப்பாடிவணங்கி அஞ்சலிசெய்து ஓய்சுவாமி, எல்லோரும் பார்த்திருக்கையில் முத்தியடைந்த திருநாளைப்போவாரென்று பெயர்படைத்துப் பேறுபெற்ற சிவபக்தருடையசரித்திரத்தைச் சொல்லுங்களென்று ரிஷிகள் பிரார்த்தித்துக் கேட்கும்போது, உபமன்னிய மகாரிஷியானவர் மிகவுஞ் சந்தோஷமடைந்து ஈஸ்வரனுடைய குணங்களை வருணிப்பதைப்பார்க்கிலும், ஈஸ்வரபக்தர்களுடைய குணங்களைச்சொல்லுகிறது மெத்தவும் புருஷார்த்தமென்று சொல்லத்தொடங்கினார். சிதம்பரத்திற்கு நாளைப்போவேனென்று சிலது நாள் நந்தன்சொல்லிவந்த படியால், நந்தனுக்கு நாளைப்போவாரென்று நாமதேயமுண்டாச்சுது, ஆகிலும், ஈஸ்வரனுடையகுணங்களைச் சொன்னாலுஞ் சொல்லலாம், பக்தர்களுடைய குணங்களைச் சொல்ல யாவருக்குந் தெரியாது, தெரிந்தமட்டுஞ் சொல்லுவோமென்று மயிர்சிலிர்த்து ஆனந்தக்கண்ணீர்வடித்து மனங்களித்துப் பரமசிவனை நினைத்து வாயால்துதித்து ஆத்துமா ஆத்துமிகளாயிருக்கின்ற தாபத்திரயங்களினாலே துன்பப்பட்டிருக்கின்ற செந்துக்களுக்கு அமிர்தவருஷம் வருஷித்தல்போல நந்தனாருடைய புண்ணிய கதாமிர்தத்தை வருட்சிக்கத் தொடங்கினார்.



இராகம், சங்கராபரணம் - ஆதிதாளம்.

பல்லவி.

நந்தன்சரித்திரமானந்தம்-ஆறுமுகத்தி
யந்தம்பக்திரசகெந்தஞ்-சொல்லச்சொல்ல. (நந்தன்)

நந்தன்சரித்திரம்வெகு அந்தஞ்-சிவனருக்குச்
சொந்தந்துலையும்பவ பந்தங்-கேட்டபேர்க்கு. (நந்தன்)

ஏதுயிவனைப்போலே சாது-பூமியிலிருக்
காது அரிது இருகாது-படைத்தபேர்க்கு. (நந்தன்)

வாடி மனதிளகிப் பாடி-அரகராவென்
றாடிகனகசபை நாடிச்-சேருவேனென்ற (நந்தன்)

அண்டர்கொண்டாடுஞ் சோழமண்டலநாதனைச்சூழக்
கொண்டமேற்காநாட்டில்விண்ட-ஆதனூரில்வாழ். (நந்தன்)

---

இராகம், கமாசு - ஆதிதாளம்.

பல்லவி.

திருநாளைப்போவான்-சரித்திரம்
தேனிலும்பாலினுமினியதுகண்டீர் (திருநா)

சித்தமுருகிய சிவயோகிகளுக்
கர்த்தமிதுவென்றனுதினம்பணியும் (திருநா)

மேதினிபுகழுமாதனூர்விளங்கவந்தமாதவஞ்சாதனைபெருகிய
பேதமிலாதவன்வேதகுருபரநாதனைப்பணியும் (திருநா)
மனதில்குற்றமில்லாதவனிந்தை வஞ்சனைமாய்கைசொல்லாதவன்
கனவிலும்நினைவிலும் சிவபதங்குருபதங்
கருத்துறைகளித்திடப் பெருத்திடவரசனும் (திருநா)
சாதிமுறைமைதவறாதவன்பவ சாகரத்திடைமுழுகாதவன்
பூதமாயாதிக ளாகியவுலகம்
பொய்யிதுமெய்யிது வல்லவென்றறிந்திடும் (திருநா)

## பெரியபுராணச்செய்யுள்.

விருத்தம்.

பகர்ந்துலகுசீர்போற்றும் பழையவளம் பதியாகுந்
திகழ்ந்தபுனற்கொள்ளிடம்பொன் செழுமணிக ளிரைக்கரத்தான்
முகந்துதரவிருமருங்கு முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணைநீர்நன்னாட்டுமேற்காநாட்டாதனூர்.

வசனம்.

கொள்ளிடத்துக்குச் சமீபமாகிய உலகமெல்லாம் புகழும்படிக் கீர்த்திபெற்றிருக்கின்ற அமராபதி, அளகாபுரி பட்டணத்தை

தோற்கச்செய்யும் மாடமாளிகை கூடகோபுரத்தோடும் அணிமாதி சித்திகள் நிறைந்துதிரண்ட செல்வத்தோடும் வேதவேதாந்த தத்துவஞானமறிந்து சாட்சாத்காரப்பெற்ற வேதியரோ மற்றமூன்று வருணாசிரமங்களாலே சூழப்பட்டு பூலோகத்தி லதிகமென்று சொல்லப்பட்ட ஆதனூரென்னும் கிராமத்தூர்கு வெளியில் நஞ்சைநிலங்களாலே சூழப்பட்டிருக்கின்ற கடைசாதியர் குடியிருக்குஞ் சேரியைக்கொண்டாடிச் சொல்லுவார், ஏனென்றால், ஸ்காந்த புராணத்தில் அஞ்சுபோககண்டத்திலே சிவபக்தன் குடியிருங்குஞ் சேரியைக் கைலாசமென்று வருணித்துச் சொன்னபடியால், உபமன்னியபகவான் மிகவுங்கொண்டாடிச்சொல்லுகின்றார்.

சிந்து.

பழனமருங்கணையும்-புலைப்-பாடிபது கூரைவீடுதனில், சுரையோபடர்ந்திருக்கும் - அதைச் - சுற்றிலுமநாய்கள் குலைத்திருக்கும் பரந்தோடிவட்டமிடும்-இளம் - பச்சைப்பிசிதமேலிச்சைகொண்டு, கோழிகூவுங்கூக்குரலும்-பாழுங்-கொல்லையருகினில் வெள்ளெலும்பும், நரம்புங்குவிந்திருக்கும்-பல-நெட்டிமிதந்திடும் குட்டைகளில், நண்டோ குடியிருக்கும் - சிறுநத்தைநமடம் வலுத்திருங்கும் - தோலுருங்கேணிகளில்-வெகு - தொலைப்படும்வாடை சொல்லறியாப், பரப்போ அடித்திருக்கும் - வயற்-பக்கங்களில்மெத்த நொக்கெலும்பும், கிழித்தோல் நரம்புகளும் - அவர்க் - கினமில்லை சிறுமீனுலரும்,தெருவில்விளையாடிக்கொண்டு-அவர்-தெந்தினம்பாடுவர் சுந்தரமாய், இலுப்பைமணியரையில்-கட்டி-இண்டந்தலைகளில்பூண்டிருக்கும், சங்குதோடுகாதணியும் - அருந்-தாவடமேயவர் தாவிடமாய், மணியோ தரித்திருப்பார் - தெரு - வாசற்புறந்தனி லேசிக்கொண்டு,கொண்டாட்டமாயிருப்பார் கையைக்-கொட்டிக்கொண்டு தனக்கிஷ்டமுடன், மதுவுண்டுகெக்கலிப்பார் - பற - வாத்தியமும் வெகுநேத்தியுடன், இருக்கும்புலைப்பாடி - அதில் - ஈசன்திருவடி நேசமுடன், தரிக்கு ஒருபுலையர்-அவர்-சாதிமுறைதவ றுதவராம், நந்தனாரவர்பெயராம்.

வசனம்.

இவ்விதமாய்க் கடையரிருப்பின் வரப்பினில்வாழ்வார் இப்பரிவுடன் சிவன்கழற்கேவிளைத்த வுணர்வோடு மந்தராபத்தி லூற்புலமையாண்ட தொழிலனுயத்திலொப்பிய நந்தனென் றொருவருண்டாயிருக்கும் புலைப்பாடியில் பரமசிவன் பாதாரவிந்தத்தில் மிகுந்த அந்தரங்கம் பொருந்தினவராகியநந்தனார் மிகுந்தபத்திபுரிந்திருந்தார் விச்சுடன் சேற்றில் விழுந்தாலும் பிள்ளைப் பூச்சிமே



லொட்டாது அத்தன்மைபோல், எத்தனைகாரியமிருக்கினும் முத்தியளிக்குங் கர்த்தனாகிய அத்தனை தனதுசுத்தமாகியசித்தத்தில் நித்தமும்வைத்து உத்தமபத்திபெற்றிருந்தார் மற்றதுமறந்தார் உற்றதுமுணர்ந்தார் இப்படியெல்லாமிருந்தும், நல்லகுண மில்லாமற் போனால், உலகம் பொல்லாங்கு சொல்லுமல்லவா.

சிந்து.

இவர்வெகு-நல்லவராமிந்தத் தொல்லுளகுல் அவரேசிவனடியார்.

வசனம்.

என்று ஆங்சரியங்கொண்டு சொன்னபடியினாலே, இவரைப்போல் பத்திமார்க்கத்தில் மிகுந்தவராயிருந்தவர் ஆரிருக்கிறார் ஆரிருப்பார் என்று இணைசொல்லப்போகா தணைகடந்த பரமசிவ பத்திமானென்று சொல்லப்படும்.

சிந்து.

அவர்க்-காருமெதிரில்லைத்தாரணியில் கோடிகோடிசென்மங்களோ
முன்னங்-குற்றமறச்செய்தநற்றவமே-அவதாரமானதுவோ-ஈசன்-
அன்புபுரியுபபேரின்பசுகம்-கொள்ளைக்கொள்ளவோ பிறந்தார்
திருக்-கோவில்வலஞ்சுழன்றுவலுடன் செய்யும்பணிவிடைகள்.

---

## பெரியபுராணச்செய்யுள்.

விருத்தம்

ஊரில்விடும்பறைத்துடவை யுணவுரிமையாக்கொண்டு
சார்பில்வருந்தொழில்செய்வார் தலைநின்றார்தொண்டினாற்
கூரியலையமுக்குடிமிப்படை யண்ணல்கோயிறொழும்
பேரிகையேமுதலாய முகக்கருவிபிறவினுக்கும்
போர்வைத்தோல்விசிவாரென் றினையனவும்புகலுமிசை
நேர்வைத்தவீணைக்கும் யாழுக்குநிலைவகையாற்
சேர்வுற்றதந்திரியுந் தேவர்பிரானர்ச்சனைகட்
கார்வத்தினுடல்கோரோ சனையுமிவையளித்துள்ளார்

வசனம்.

இந்தப்பிரகாரம்நந்தனார் சிவஸ்தலங்கள்தோறும்போய்சுவாமியைத் தோத்திரஞ்செய்கிற தெப்படி யென்றால்.

---

இராகம், காம்போதி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

செந்தாமரைமலர்சூழோடைகளுமேடையுஞ்
செறிந்தமாதர்க ளாட்டம்-சிறந்தயேனூர்
எந்தைபிரானுக்கபி-டேகக்கோரோசனைமற்
றீந்தொழிந்தார் மணவாட்டம்





சிவசரவணமூர்த்தி ஞானசம்பந்தரெனத்
திருவவதார மாக-வந்தசீர்காழி
புவனரட்சகன்றிரு நிலைநாயகியையேந்தி
பூரித்தார்வெகு வாக
ஒருபொற்புரபதி லோங்கியமாயூரத்
துவந்தவிஸ்வரா தீசரை-மிகத்தொழுது
ஒருமுகக்கருவிக்குந் தோல்நரம்பிசைதந்தா
ருலகிற்புகழவுந்தன் பெயரை
உமையொருபாகத்தி லுயர்ந்தபரன்றரும
னொருபசுவுங்கன் ருக-மாயவேடன்
சமைத்துப்பின்மனுநீதிச் சோழன்றனக்குக்காட்சித்
தந்தவாரூர்ச்சென்றூரன் பாக

வசனம்.

பின்னும் நந்தனர் தாம்செய்யுந் தருமமேதென்றால், இவர் புலையரானபடியால் சிவஸ்தலங்களுக்குப்போய் வீதியைச்சுற்றி சந்நிதியில்வந்து தடிவிழுந்ததுபோல் உடல்பணியப் பணிந்து புழுதியில்புரண்டு மயிர்சிலிர்ப்பக் கண்ணீருதிர்ப்பப வாய்குளறி உரைதடுமாறி ஒருதரமழுது ஒருதரந்தொழுது எக்களித்து கெக்கலித்து ஒருதரஞ்சிரித்து ஒருதரம்வெறுத்து சகமறந்து அகமிழந்து அனல்கண்டமெழுகதுபோ லுள்ளமுருகி ஆநந்தவெள்ளம்பெருகி கள்ளங்கருகிச் சிவன்சிவனேயென்று வாய்வலிக்கப்பேசி கைவலிக்கக்கொட்டி கால்வலிக்கக் கூத்தாடி நிற்பவ ரொருமுகூர்த்தஞ் சித்திரத்திலெழுதும் பதுமைபோல் கண்ணிமையாமல் வாயசையாமல் கையசையாமல் காலெழாமல் வாயசையாமல் ஓசைதெரியாமல் அலையடித்தோய்ந்த கடல்போல நிறைந்து தன்னைமறந்திருப்பார் தன்நினைவுவந்து பரவசந்தெளிந்து ஈசனைப்பணிந்துகொண்டு வந்தபணிவிடை செலுத்தக் கோவிலார்கேட்டுக் குப்பிடுபோட்டுச் சொல்லுவார்.

இராகம், ஆனந்தபைரவி -ரூபகதாளம்.

பல்லவி.

வாரிருக்குதுதோலிருக்குது வாங்கிக்கொள்ளுவீரே-மத்தளங்கள்
பேரிகைக்கும்வீணைக்கும்நல்ல விறுக்கிக்கட்டும்விசை (வாரிருக்)

பேரிருக்குதுபோதுஞ்சிவன் பெருமையைக்கொண்டாடிதினமும்
சீருறைக்கின்றதில்லைப்பதியில் சேருதற்குபாயந்தேட் (வாரிருக்)

சிரியவனுன்சாதியொன்று மறியாதவனேனைழ—சிவ
பெருமானுக்கடியேன்செய்யும் பணிவிடையிது (வாரிருக்)

வசனம்.

அன்பின்மிகுதியால் சிவலோகநாதனைச் சேவிப்போமென்று நெடுநாளாய்ச்சொல்லி நிச்சயஞ்செய்த நந்தனாருக்கும் பறையர்களுக்கு முண்டான வாக்குவாதம்

(அவர்கள்) தவஞ்செய்யுஞ் சடங்கிதுவல்லவோ பறையர்கள் செய்தால் பாவமேயென்றார்.

(நந்தன்) தேருந்திருநாளு மிருக்குது போவோம் வாரும் வாருமென்று வருந்தியுமழைத்தார்

(அவர்கள்) பொறும் பொறுமிது புண்ணியமல்ல எறிக்குப்போவேமென்றிவரையு மழைத்தார், சேரியைநீங்கிச் சிலருடேர்வந்தார்.

பதினொருபேர்கள் பண்புடன்வந்தார் நந்தன்மாரிபோல்ஞானமார்க்கம்பொழிந்து, தவமுனிபோலே தானங்கேகின்றார்.

(அவர்கள்) சிவலோகநாதனைச் சேவிப்போமென்றார் நந்தன் வெறுங்கையோடே போகலாகாதென்று

வாருடன்தோலும்வரிசையாய்க்கொண்டார் அவர்கள்சேரியிலுள்ள சீரிதுவென்றார்

(நந்தன்) வந்தபுலையருக்குப்பத்திபெருகவே நெத்தியில்நீறிட்டார்.

(அவர்கள்) சத்தியந்தானென்று மெத்தவுங்கும்பிட்டார்.

**இராகம், வராளி-சாப்புதாளம்.**

இவர்—சிங்காரமானபள்ளுபாடினார்
அவர்—அங்கங்குளிர்ந்துகொண்டாடினார்
இவர்—கோரோசனைப்பையையெடுத்தார்
அவர்—தாராளமாய்வாரிக்கொடுத்தார்
இவர்—சிவமந்திரஞ்சொல்லிச்சேவித்தார்
அவர்—தவமிஃதேயென்றுச்சரித்தார்
இவர்—ஆசைப்பெருங்கடல்தாண்டினார்
அவர்—ஓசைப்படாமலேவேண்டினார்
இவர்—அளவில்லானந்தமடைந்தார்
அவர்—அளவில்லாக்காட்சிப்பெற்றிருந்தார்
இவர்—திருப்புன்கூரீசனைப்பாடினார்
அவர்—விருப்பமோடிவரைக்கொண்டாடினார்.

---

வசனம்.

இப்படி எல்லோருங்கூடிச் சிவனை அடிக்கடி வணங்கி அரக... வென்றுரைத்திடுஞ்சத்தம் பரமனேயறிவார், இப்படி நந்தனார் ப... னொருபேர் பறையரோடு திருப்புன் கூர்வந்து சேர்ந்தார்.



சவாயி.

நலம்வந்துவீதி வலம்வந்துகண்கள்
சலம்வந்துசோரும் பலம்வந்துதெங்கள்
குலம்சுத்தமாச்சு மலம்வெந்துபோச்சு
நலங்கண்டோமென்று நிலங்கொண்டுநின்றார்.

வசனம்.

அந்தத்தலத்திலே நந்தி மிகவும் பெரிதானபடியினாலே சிவலிங்கதரிசனஞ்செய்வதற்கு நந்திமறைத்திருப்பதால், நந்தனார் துயரமடைந்து சொல்லுகின்றார்.

**இராகம்-சங்கராபரணம்-ஏகதாளம்.**

கண்ணிகள்.

அரகராதிரிபுராந்தசஜீவாதாரவெங்கள்
அம்பிகைபாரு பாகா
நிரந்தரமாயென்னுளெண்ணைபோலவிருந்து
நினைப்பவர்க்கருள் போகா
வெள்விடைமேல்வரும்விமலநமசிவாய
விளங்கும்வேத முடிவே நால்வர்க்குத்
தெள்ளுறச்சிவஞானபோதமளிக்கவந்த
சிறந்தமெய்த்தவ வடிவே
மானுமழுவுந்தமருகவாகுவலயமும்
மருவுஞ்சூல பாணி எளி
யேனுங்காணத்தரிசனைதரவுமையுட
னெழுந்தருள்வீரிங்கு தோணி
மன்னுஞ்சந்நிதிமுனம்மருவுமிடபதேவர்
மறைந்திருக்கநினைக் காணேனே
என்னவினைசெய்தேனோ கண்பெற்றபாவந்தானோ
இதையத்தில்மகிட்சி பூணேனே.

---

சவாயி.

சிவலோகநாதன் திருச்சந்நிதானம்
மலையாகிநந்தி மறைத்திடுதிங்கே
பலகாலஞ்செய்த பாழ்வினைகுவிந்து
மலையாகியிப்படி மறைத்ததோவென்றார்.

வசனம்.

என்று சொல்லிய நந்தனார் பின்னுஞ் சொல்லுகின்றார்.

இராகம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வழிமறைத் திருக்குதே மலைபோலே
ஒருமாடுபடுத் திருக்குதே. (வழி)

பாவிப்பறையனிந்தவூரில்வந் துமிவன்பாவந்தீரேனோ உந்தன்
பாதத்தில்சேரேனோயேறேனோசிவலோகநாதாமாடு (வழி)
தேரடியில்நின்றுதெரிசித்தாலும்போதும் கோவில்வரமாட்டேனே
ஐயே ஓரடிவிலகினால்போதுமங்கேநின்று
உற்றுப்பார்க்கச்சற்றேவிலகாதோமாடு (வழி)

வசனம்.

இப்படி நந்தனார் தரிசனங்காண ஓயாமல்மனவருந்தும்போது சுவாமி நந்தனார்மீதிரங்கி நந்தியை விலகச்சொன்னார்.

பெரியபுராணச்செய்யுள்.

விருத்தம்

சீரேறுமிசைபாடித்திருத்தொண்டர்திருவாயி
னேரேகும்பிடவேண்டுமெனநினைந்தார்க்கதுநேர்வார்
காரேறுமெய்யிற்புன்கூர்க்கண்ணுதலார்திருமுன்பு
போரேற்றைவிலகவருட்புரிந்தருளிப்புலப்படுத்தார்.

இராகம்-துக்கடா-ரூபகதாளம்.

ஒருநாளும்வாராதபத்தன் திருநாளைப்போவாரெனுஞ்சித்தன்
உலகெங்கும் பிரசித்தம்கண்டு ஒதுங்காமலிருந்தது குற்றம்.

---

இராகம்-அங்குசதாரணி-ரூபகதாளம்.

பல்லவி.

சற்றேவிலகியிருப்பிள்ளாய் சந்நிதானமறைக்குதாம் நீ (சற்)

அநுபல்லவி.

நற்றவம்புரியுகம்பிட திருநாளைப்போவார் வந்திருக்கிறார். (சற்)

சரணங்கள்.

சாதிமுறைமைபேசுறான் தன்னைமிகழ்ந்துமேசுறான்
கோதிலாதகுணமுடையோன்கோபங்கொண்டால்தாளமாட்டோம்
வேதகுலத்தைபோற்றுறான் விரும்பிவிரும்பியேற்றுறான்
பூதலத்திலிவனைப்போலேபுண்ணியபுருஷனொருவனில்லை. (சற்)
பத்தியில்கரைகண்டவன் பார்த்துப்பார்த்துவுண்டவன்
சித்தங்குறையில்லமது செல்வம்முற்றுங்குறையுந்தயவுசெய்து. (சற்)

---



வசனம்.

இப்படி சுவாமிசொல்ல நந்திவிலகினார்.

துக்கடா.

நந்திதூரவிலகினின்றார் தன்சாமிமனதைக்கண்டார்
இவன் நல்லபக்தனென்றார் அடங்காதவெட்கங்கொண்டார்.

இராகம் சாவேரி, ரூபகதாளம்.

பல்லவி.

மற்றதெல்லாம்பொறுப்பேன்
முக்தினாலும் கொடுப்பேன். (மற்ற)
பக்தனுக்குக்குற்றஞ்செய்தா
லதைப்பொறுக்கமாட்டேன். (மற்ற)
திடுக்கென்றவரை அடிக்கப்பேசி
அடிக்கப்பொறுக்கமாட்டேன். (மற்ற)
பசிக்குதென்றுவருகையிலொருவன்
புசிக்கபொறுக்கமாட்டேன். (மற்ற)

வசனம்.

இப்படி சுவாமி சொல்லும்போது நந்திமனதுகலங்கி தூர விலகினின்றார்.

நந்தன் சிந்தைகுளிர்ந்து அளவில்லாதஆனந்தமடைந்து குதித்தார் கெக்கலித்தார் கொண்டாடினார் துதித்தார் திருவடியுள்ளே பதித்தார் எங்குஞ் சிவமாகப் பாவித்தார்.

கடுக்கா.

குதித்தார்எக்கலித்தார் உள்ளங்களித்தார்
பள்ளுபடித்தார் கண்ணீர்வடித்தார் பற்களைக்கடித்தார்
ஒருதரந்துடித்தார் இருதரம்நடித்தார்
இப்படிதரிசனஞ்செய்தார் நந்தனார் தரிசனஞ்செய்தாரே.

துக்கடா-ஆதிதாளம்.

சட்டமாகசந்நிதானங்கண்டுதடை தட்டினார் கைகொட்டினார்
அஷ்டமூர்த்தியொருவர்க்குமென்று கூத்தாடினார் பண்பாடினார்
கஷ்டமானசமுசாரசாகரந் தாண்டினார் மெய்வேண்டினார்
இஷ்டதெய்வசிவலோகநாதனை எண்ணினாருள்ளநண்ணினார்
மட்டிலாதசந்தோஷங்கொண்டுதான் பட்டபாடுகளைப் பேசினார்
சென்மங்கெட்டதென்றுதன்னை யேசினார்
இஷ்டமானதன் சனங்களோடுஅவர் கட்டிமுத்தமிட் டுலாவினார்
சிங்கக்குட்டிபோலவே தாவினார்

இராகம்-கலியாணி, அடதாளம்.

பல்லவி.

தெரிசனஞ்செய்தாரே நந்தனர் தெரிசனஞ்செய்தாரே.

அநுபல்லவி.

தெரிசனஞ்செய்தார் தேன்மழைசொரிந்து
வரிசையுடன் அவர் வாழி வாழியென்று. (தெரிசனஞ்)

சரணங்கள்.

குதித்துக்குதித்துக்கையைக்கும்பிடுபோட்டுத்
துதித்துத்துதித்துத்தன் துன்பங்கள்தீர (தெரிசனஞ்)
போற்றிபோற்றியென்று பொன்னடிவணங்கிப்
பார்த்துப்பார்த்துப் பரமானந்தங்கொண்டு. (தெரிசனஞ்)
அச்சமறந்தவரறிவிலுணர்ந்து
இச்சைமறந்தவரேகாரமாய்நின்று (தெரிசனஞ்

*இராகம்-அபுருபம், ஆதிதாளம்.

பல்லவி.

சம்போ செங்காதரா சந்திரசேகரா ஹர.

அநுபல்லவி.

அம்பலவானரே ஆதிரை நாளரே
அடைக்கலமென்றுநம்பிவந்தேன் ஆதரிப்பதுன்பாரம்சொன்னேன்

சரணங்கள்,

தாயுந்தந்தையும்நீ உன்னைத்தவிரவேறே யொருவருமில்லை
மாயன் கோபாலகிருஷ்ணன்பணியும் மலரடிபணிந்தேன்பிறவியை
[த்தீரும். (சம்போ) *

வசனம்.

தெரிசனம் பண்ணியபின்பு கொண்டுவந்தபணிவிடைசெலுத்தி அவ்வீதியில்மட்டையூறுங் குட்டையை குளமாய் வெட்டவேணுமென்று விசாரமுற்றார், சுவாமி இதையறிந்துநாளைப்போவாராலே குளம்வெட்ட தாளப்போகாதென்று தன்பிள்ளையை ஆளாகப் போகச்சொன்னார்.

தக்கடா.

மாளாப்பிறவிபோக்கும் பிள்ளையார் வந்தார்.
நாளைப்போவார் நீயாரப்பா வென்றார்
பிள்ளையார் நானுன்னுளப்பாவந்தே னென்றார்
நாளைப்போவார் குட்டையைக்குளமாய்வெட்டுவே னென்றார்
பிள்ளையார் வெட்டினால்மிகுபுண்ணிய மென்றார்



சிவாலயத்தில் நந்திவிருப்பது குளம்வெட்டுதல் விநாயகர் கூலியா வேலைசெய்தல் நந்தனர் கூலியாக நெல்லைகொற்றதும் நந்தனர் பறையர்களோடு தெரிசித்தல்.

4

நாளைப்போவார்-அதெம்மட்டுமெட்டு                    மென்றார்
  பிள்ளையார்-குளம்வெட்டுவெட்டுவே                    மென்றார்
நாளைப்போவார்-அற்பமாய்பதக்குநெல்லைக்                    கொடுத்தார்
  பிள்ளையார்-அப்பனேயிதுபோதும்போதுமென்                    றுரைத்தார்
நாளைப்போவார்-களித்துதிருவிகற்பமா                    யிருந்தார்
  பிள்ளையார்குளத்தைவெட்டுதற்                    கிசைந்தார்.

இராகம் - மேகனம், ஆதிதாளம்.

பல்லவி:

தடாகமொன்றுண்டாக்கினார்-கணநாயகர்
தடாகமொன்றுண்டாக்கினார்.

அநுபல்லவி.

சடாமுகுடத்தான்-சாம்பவி                    யுடன்வர
  சகலமுனிவர்மனத்-தாமரையு                    மலர
கடாட்சமாக்குகன் கணமதியுடன்                    மன்ன
  காதலாலெவருந் தன்ன போதயனுசிதமென்ன.    (தடாக)

சரணங்கள்.

கந்தமுலாவியதாமரைப்பூத்து                    கதிக்க-மிகுந்திடுஞ்சேர்
  கண்டவராலுளுவைக்கண்மங்கு                    குதிக்க
  சுந்தரமிகுந்தபறவைகள்முழுதிலுஞ்                    சூழ
  சோமசூரியர்கள்சுகமுடன்வந்து                    தாழ
  விந்தையுடனேபலவேள்வியந்தணர்                    செய்ய
  விளங்குஞ்சங்கினமுய்யகளங்கமில்லாமற்                    றுய்ய.    (தடாக)
ஓதிடுவானதியானதுதான்மிக                    நாண-ஆம்பல்மலர்ந்து
  ஓதிமயங்குறுகின்குலமும்எதிற்                    காண
  சோதிமருவுந்தேவ-தாருநிழலும்                    கொடுக்க
  கரபிக்கடம்பைமானும்சூழ்ந்துஅக்கே                    அடுக்க
  மாதர்மலர்க்குழலார்-மகிழ்ந்துஅங்கே                    நீராட
  வல்வினைகளும்விட்டோட-வல்லவர்களுங்கொண்டாட.    (த)
வாசனைதங்கியமல்லிகைமுல்லையின்                    சாலைசந்தன-சந்தனச்சாலை
  வாழைபலாக்கமுகுங்கனமாமலர்ச்                    சோலை
  ஆசையாகமயிலழகுறவே                    நடிக்க
  அருமறைப்பூசுரர்களனுதினமும்                    படிக்க
  தேசுலாவுந்திவ்யத்-தீர்த்தமாகுமென்                    றெந்த
  திசைதேவர்களுமுந்த இசைநந்தனர் தஞ்சொந்தத்    (தடாக)

---



நாளைப்போவார்நிஷ்டைகலைந்துபார்த்தார்
குளம்வெட்டியிருக்கவுளமகிழ்ந்தார்
பிள்ளையாரிருக்கக்கண்களிற்கானார்

வசனம்.

இதெல்லாஞ் சிவன்செயலென்று சந்தோஷங்கொண்டு முன்போலவே கோவிலை வலம்வந்து தன்னுடன்வந்த பதினொருபேர்களுடன் ஆதனூர்வந்து சேர்ந்தார்.

பெரியபுராணச்செய்யுள்.

விருத்தம்.

இத்தன்மையீசர்மகிழ் பதிபலவுஞ்சென்றிறைஞ்சி
மெய்த்திருத்தொண்டுசெய்து விரவுவார்மிக்கெழுந்த
சித்தமொடுந்திருத்தில்லைத் திருமன்றுள்சென்றிறைஞ்ச
வுய்த்தபெருங்காதலுணர் வொழியாதுவந்துதிப்ப.

சிந்து.

பேணிச்-சாருந்தொழின்முறை யாரும்புகல்-திருப்புன்கூர்ச் சென்றரனைக்-கண்டு-சேவித்திசைபாடி பாவித்தபின், தில்லைச்சிதம்பரத்தைக்-கண்டு-சேவிக்கவேண்டுமென்றுவவுடன், நாளைப்போவேனென்றாராம்.

வசனம்.

நந்தனார் திருப்புன்கூர்ச் சிவலோகநாதனைத் தரிசனம் செய்து ஆதனூர்வந்தநாள்முதல் ஊணுறக்கமுதலானதும் விட்டார், தில்லையம்பலம் திருச்சிற்றம்பலமென்று சொல்லத்தலைப்பட்டார், சேரியிலுள்ள பெரியோர்களைக் கூப்பிட்டார், வணங்கிக்கும்பிட்டுச் சொல்லுவார்.

இராகம் - பியாகு, ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரம்போவேன்-நாளைச்-சிதம்பரம்போவேநான்.

அனுபல்லவி.

சிதம்பரம்போவேன் தேறித்தெளிவேன்
பதங்களைப்பாடிப் பார்புகழ்தில்லைச்    (சிதம்பரம்)

சரணங்கள்.

ஒருதரஞ்சொன்னா லுலகங்களுய்யு
மிருவினைப்பயனில்லை எந்நாளும்    (சிதம்பரம்)
பாதிராத்திரியில் பன்மறையோதி
வேதியர்போற்றிவிளங்கியதில்லைச்    (சிதம்பரம்)

திறமொன்றறியாத் தீங்குகள்செய்யும்
பறையனாய்ப்பிறந்த பாவங்கள் துலையச் (சிதம்பரம்)

வசனம்.

நாளைப்போவார் தனக்குத்தெரிசனங்கிடைக்க வேண்டியதற்காக கற்பகப்பிள்ளையாரைவேண்டுதல்.

விருத்தம்.

காலனுடல்பூமிபடச்சாய்த்திடுவான் செங்கமலக்காலைத்தூக்கி
கோலமுடனடனமிடுந்தனிமன்றுள் நாயகனேகுற்றந்தீரப்
பாலிக்கும்படியெனக்குன்னருள்புரிவாயென்றுநற்பழங்கள்வைத்து
மேலைக்கோபுரவாயிற்கற்பகத்தைச் சிந்தையுள்ளேவேண்டுவாரே.

வசனம்.

நந்தனார் சேரியிலுள்ள புலையர்களை அழைத்துக்கொண்டு சிதம்பரம்போய்த் தரிசனம்பண்ண வேண்டுமென்று ஆசையுற்றுபக்தி மார்க்கங்களைச் சொல்லுகின்றார்.

இராகம்-மாஞ்சை-ரூபகதாளம்.

நாளைப்போகாமலிருப் பேனோ-இந்த
நாற்றநரம்புமின்னஞ்சுமப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ-இந்த
நாறுமுடலைக்கண்டுகளிப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ-இந்த
நாளைவீணுகக்கழிப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ-இந்த
நமனார்க்கஞ்சியோடியொளிப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ - சிவ
ஞானத்தைப்பாராமலிருப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ-இந்த
நாட்டிலிகழுஞ்சென்மம்படைப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ-தில்லை
நாதனைக்காணமல்புசிப் பேனோ-நான் (நா)

ஆனந்தக்களிப்பு.

காணமலிருக்கலாகாது பாழுங்
கட்டைக்கடைத்தேற வேண்டியிருந்தால்

முத்தியளித்திடும் பாதம் தில்லை
மூவாயிரம்பேர்கள் பூசிக்கும் பாதம்



சததிக்கிணையான பாதம்-வேத
சாஸ்திரங்கள்நாலுந்தேடிய பாதம் (காண)

காலனைச்சீறிய பாதம்-சன
காதிகளுக்குள்ளேசெலுத்திய பாதம்
மாலயன்தேடிய பாதம்-எங்கள்
மாணிக்கவாசகர்பீடிகை பாதம் (காண)

ஆசையைப்போக்கிய பாதம்-பர
மானந்தவெள்ளத்திலாடிய பாதம்
வாசம்பொருந்திய பாதம்-தில்லை
மாகாளிதாழவேதூக்கிய பாதம் (காண)

பாலகிருஷ்ணன்தொழும் பாதம்-காட்டில்
பாம்பும்புலிக்குக்கூத்தாடிய பாதம்
சோலைச்சிலம்பணி பாதம்-தில்லைக்
கோவிந்தராயர்தெரிசிக்கும் பாதம் (காண)

வசனம்.

நந்தனார் சிவனைக்காணமல் காலம் வீணுகப் போக்கலாகாதென்று தன்னினத்தாரைக் கூப்பிடுகின்றார்.

இராகம்-பியாகு-ரூபகதாளம்.

துக்கடா.

எல்லோரும் வாருங்கள்
சுகமிருக்குது பாருங்கள் நீங்கள்(எல்லோரும்)

நல்லோர்பணிந்திடுந் தில்லையம்பல
நாதன்பாதம் பணிந்துகொள்வோம் (எல்லோரும்)

கண்ணிகள்.

வாருங்கள் பரமானந்தமிருக்குது பாருங்கள்
சடமெடுத்தபின் னேதுமேகண்டிலீர்
விடமெடுத்துண்ட மேனியன்நேர்வர
வடம்பிடித்திட வாருங்கள் தில்லையில்
இடம்பிடித்துநா மெல்லோரும்வாழலாம் (வாருங்கள்)

சொல்லடா தில்லைச் சிற்றம்பலமென்று
மெல்லடாவாயைச் சந்நிதிநேரவே
கில்லடாயிந்த மாயம்பிறவியைக்
கொல்லடாசிவ லோகங்குடிபுக (வாருங்கள்)

கள்ளடாநம தில்லறவாழ்க்கையைத்
தள்ளடாநந்தன் சொல்லுறுதியென்று
கொள்ளடா தில்லையம்பலத்தாண்டவன்
பள்ளடாவென்று பாடிக்கூத்தாடியே. (வாருங்கள்)

வசனம்.

இபபடி வாருங்களென்றழைக்கப் புலையர்வாராமலிருக்க நந்தனார் நல்லவார்த்தைசொல்லிப் பறையரை சிவநாமத்தைச்சொல்லச் சொன்னார்.

## இருச்சொல்லலங்கார வாக்குவாதம்.

நந்தனார்-தில்லையம்பலமென்றுசொல்லச்சொன்னார்
புலையர்-கள்ளப்பேச்சென்றுமெள்ளச்சொன்னார்
நந்தனார்-சங்கராவென்றுசொல்லச்சொன்னார்
புலையர்-இங்கேவாவென்றுநிற்கச்சொன்னார்
நந்தனார்-சற்றேயாகிலுஞ்சிவனைத்தியானம்பண்ணென்றார்
புலையர்-நத்தையோடுபாலைபானம்பண்ணென்றார்
நந்தனார்-திருச்சிற்றம்பலமென்றுசெபிக்கச்சொன்னார்
புலையர்-வெறுச்சகம்பளமென்றுரைக்கச்சொன்னார்
நந்தனார்-சேரியில்நல்லகாரியமீதென்றார்
புலையர்-ஏரியில்நல்லமாரியிதென்றார்
நந்தனார்- விட்டநாள்வினையாம லெட்டுநாள்மறவாமல்
நிஷ்டைபண்ணுதசென்மம் நஷ்டமென்றார்
புலையர்-விட்டவிரைமுளையாமல் நட்டபயிர்பலியாமல்
கெட்டுதானல்கிராமம் நஷ்டமென்றார்
நந்தனார்-உங்கள்புலைத்தன்மைபோகுமென்றார்
புலையர்-எங்களைக்கெடுத்தாயேபாவியென்றார்
நந்தனார்-தேவாதிதேவனைத்தெரிசிப்பீரென்றார்
புலையர்-பாவாடைராயனைப்பாவிப்பாயென்றார்
நந்தனார்-அனத்தாளுமீசனுக் கன்புசெய்யென்றார்
புலையர்-இனத்தாரைநொந்தவர்க்கின்பமேதென்றார்
நந்தனார்- தினமுஞ்சிவனைப்போற்றிக்களிப்போமென்றார்.
புலையர்-பதரைத்தூற்றிநெல்லையளப்போமென்றார்
நந்தனார்-பெண்ணாசைபொன்னாசைவிடுதலேநன்றாம்
புலையர்-என்னாளுமுன்னாலேகெடுதலையுண்டாம்
நந்தனார்-அப்பனேயிஷ்டமுடனானிருப்பேனென்றார்
புலையர்-கப்பலோட்டியகடன்கொட்டைநூற்றீராதென்றார்




னார்-பூசத்திருநாளில்போய்வருவோமென்றார்
புலையர்-பேசத்தெரியாதேயாநீபோவென்றார்
நந்தனார்-அழுதழுமறையிட்டாலம்பலத்தேகேழ்க்குமென்றார்
புலையர்-உழுதபயிரிட்டாலுள்ளபடிவிளையுமென்றார்
நந்தனார்-சித்தமெல்லாமம்பலத்தேசென்றுதேடுதென்றார்
புலையர்-பத்தியெல்லாம்வேறுபட்டுபறந்துபோச்சுதென்றார்
நந்தனார்-குற்றாலத்தீசனைக்கூறுவீரென்றார்
புலையர்-கைத்தாளம்போட்டுக்கதறுவீரென்றார்
நந்தனார்-தாண்டவந்தெய்வமேநுக்குதெய்வமென்றார்
புலையர்-தூண்டிவீரப்பனேதொழுந்தெய்வமென்றார்
நந்தனார்-இஷ்டப்படிநடக்குமீசனைத்துதியென்றார்
புலையர்-கஷ்டப்படமாட்டோம்சக்காதேபோவென்றார்
நந்தனார்-கொண்டாடிதெய்வத்தைக்கொள்ளுவீரென்றார்
புலையர்-பெண்டாட்டித்தெய்வமேபெருந்தெய்வமென்றார்
நந்தனார்-நலத்தைக்கொடுக்கவந்தநற்குருவென்றார்
புலையர்-குலத்தைக்கெடுக்கவந்தகோடாலிக்காம்பென்றார்
நந்தனார்-பலவழக்கப்நானறிவேன்பறையரேயென்றார்
புலையர்-குலவழக்கமறியாதகுருடாபோவென்றார்
நந்தனார்-நநக்கறுப்பேண்சிவனைநவிலுவீரென்றார்
புலையர்-மூக்கறுப்பான்கதையைமொழிந்தீரேயென்றார்.

வசனம்.

நந்தனார் பெரியோருடைய அனுஷ்டானத்தைப் புலையர்களுக்குச் சொல்லுகின்றார்.

வேறு

நந்தனார்-சிவனேதெய்வம் சிதம்பரமேகயிலாசம்
தவமேபெருமை தான்சம்பிரதாயம்
புலையர்-சேரியேசொர்க்கம் ஏரியேகயிலாசம்
மாரியேதெய்வம் மதசம்பிரதாயம்
நந்தனார்-படிப்பதுஞானம் பார்ப்பதுமூலம்
குடிப்பதுமதிப்பால் குலசம்பிரதாயம்
புலையர்-பிடிப்பதுநண்டு புசிப்பது இறைச்சி
குடிப்பதுகள்ளு குலசம்பிரதாயம்
னார்-பாழைக்கடப்பார் பரவெளிதாண்டி
கோழையறுப்பார் குலசம்பிரதாயம்



கிழவனுக்கும் நந்தனுருக்கும் தர்க்கம்.



புலையர் - ஆழத்தில்குளிப்போம் அருங்கோடைவந்தால்
கூழைக்குடிப்போம் குலசம்பிரதாயம்

நந்தனார் - ஆசையைப்போக்கி ஐம்புலனைச்சுட்டு
மாசற்றவாழ்வு மதசம்பிரதாயம்

புலையர் — பூசைகள்புரிவோம் பொன்னேருழுவோம்
கூசாமல்வாழ்வோம் குலசம்பிரதாயம்

நந்தனார் - மையத்திலாடி மனக்கயிறூட்டி
வையத்திருப்பார் மதசம்பிரதாயம்

புலையர் - கையிலேகலயம் காலிலேசேறு
பையிலேபாக்கு பறைசம்பிரதாயம்.

வசனம்.

சிவபத்திபண்ணினால் அணிமாதிசித்திகள் அடையலாமென்று நந்தனார் சொல்லுகின்றார்.

இராகம்-நீலாம்புரி, சம்பைதாளம்.

அஷ்டமாசித்திகளைப்பெறலாந்-தில்லையி
லானந்தத்தாண்டவன்கோவிலைக்கண்டு
இஷ்டமுடன்வீதிவலம்வந்து-ஈசன்
இணையடிதொழுதார்க் கினிப்பிறப்பில்லை
வாருங்கள்வாருங்கள் சொன்னேன்-நீங்கள்
வாயாடாதோடிவருவீரென்முன்னே
கருமணிப்சோலைபோதும்-உந்தன்
கள்ளவேஷமெங்களுக்குள்ளேகிடையாது
பருகுவதுகூழ்க்கஞ்சிபோதும்- வாய்
பதறிவார்த்தைகள்பேசிப்பசப்பாதேபோடா.

வசனம்.

நந்தனாரைப்பார்த்துப் பறையர் நீசொன்னபடி கேட்பதில்லை எங்கள் உண்மையறியாமல் நீமயங்காதேயென்றுசொல்லுகிறார்கள்.

ஏசல்.

புலையர் - பார்ப்பாரதெய்வமது பலிக்காதுபறையரைக்
காப்பாற்றமாட்டாது கைவிடுமென்றார்

நந்தனார் - பார்ப்பார்பறையறென்று பாராதுபரிதிபோல்
காப்பாற்றுமல்லவோ கண்ணுதலேயென்றார்

புலையர் - அடுக்காதவார்த்தையை அல்லும்பகலோதியே
பிடிக்கிறாய்பிடிவாதம் பேசாதேயென்றார்

நந்தனார் - கடுக்காயைத்தின்பாரோ கன்னலதுபோலே
கொடுக்காததானாலும் கொள்ளுவீரென்றார்

புலையர் - பித்தனென்றுசொல்லுவார் பேருலகிலெல்லோருஞ்
சத்தியமிதல்லவோ தள்ளுவீரென்றார்

நந்தனார் - பித்தனாயிருந்தாலும் பிறவியறுத்தனைவர்க்கும்
முத்திகொடுக்குநல்ல மூர்த்தியவரென்றார்

புலையர் - இத்தனைநாளுமிங்கே யில்லாதவார்த்தையை
கற்றுவந்துமென்ன காரியமோவென்றார்

நந்தனார் - இத்தனைநாட்சென்று ஈசனடித்தாமரை
பத்திசெய்யவரும் பாக்கியமீதென்றார்.

## அகவல்.

பாக்கியமீதென்று பரமசிவபத்தி
மார்க்கங்களெல்லாம் வரிசையாய்த்திரட்டி
எடுத்துரைசெய்வார் யீனமாஞ்சாதி
பிடித்தறியாவல் பேசுவாரன்றோ.

## விருத்தம்.

வக்கணைகாராநந்தா வாய்படப்பேசவேண்டாம்
சக்கரைப்போலேபேசிச் சாதித்துக்கண்டாயன்றோ
பக்குவகாலம்வந்தால் பரமனார்திருநாமந்தான்
சக்கரைப்போலேதானுஞ் சாதிப்பார்முத்திதானே.

## வசனம்.

புலையர்களனேகராணபடியால் பலவிதமாகச்சொல்லுகிறார்கள்.

ஏசல், இராகம்-புன்னாகவராளி, ரூபகதாளம்.

புலையர் - ஆண்டிப்பரதேசி யாகரவென்றவர்
வேண்டுந்தெய்வமது விளங்காது யென்றார்

நந்தனார் - மூன்றுலகுக்கிறை முன்னின்றுகைகூப்பி
ஆண்டவனேயென்று அர்ச்சிக்கு மென்றார்

வேறொரு புலையர் - நாத்தைப்பிடுங்கியே நடவுநட்டாலிந்த
சோற்றுக்கலைவிடுஞ் சுகமிது வென்றார்

நந்தனார் - கூற்றுவனார்வந்து கூப்பிடும்வேளையில்
மாத்திரைப்பொழுதில்லை மன்னுயி ரென்றார்



வேறொரு புலையர் - மானருமக்களும் வாழ்கின்றவிடத்திலே
யானாலுமெப்போது மழுமூஞ்சி யென்றார்

நந்தனார் - தேனாகவேமெத்த திக்குஞ்சிவத்துதி
யானாலுமுங்களுக் கழுகையோ வென்றார்

வேறொரு புலையர் - மூக்குநுனியைப்பார்த்து முணுமுணுத்தென்னேரம்
காக்கைபோலவேசும்மா கதறுகிறீ ரென்றார்

நந்தனார் - வாக்கிலேசிவநாமம் வாராதபாவிகள்
நாக்கிலேவூசியை நாட்டுவே னென்றார்

வேறொரு புலையர் - மடவாயின்பறவைபோல் மதியாமலிருக்கிறீர்
துடைகாலிநீயென்று சொல்லுவே னென்றார்

நந்தனார் - விடையேறுமீசனை வெட்டவெளியிலுன்னி
அடையாளங்காணாத ஆடுக ளென்றார்

வேறொரு புலையர் - மறையோதத்தெரியாத மடையராய்ப்பூமியில்
குறையாதபுலைத்தன்மை கொண்டோமே யென்றார்

நந்தனார் - பறையனாய்ப்பிறந்தாலும் பரகதிதேடலாம்
உறுதிமாத்திரம்வேணும் உமக்குண்டோ வென்றார்

வேறொரு புலையர் - தலைசுற்றியாடுது தங்கச்சிகொழுந்தியார்
அலகையேநானென் றுமிலே னென்றார்

நந்தனார் - நலம்புரியத்தில்லை நாதாவென்றிருநீற்றை
திலகம்போலேயிட்டு தெண்டனிடு மென்றார்

வேறொரு புலையர் - உலகத்திலொவ்வாத வுருவேத்திச்சேரியைக்
கலகமிட்டீர்பலங் கண்டீரோ வென்றார்

நந்தனார் - பலகாலஞ்சொன்னாலும் பலியாதுபாழ்வினை
விலகாமலிருக்குது வேடிக்கை யென்றார்

வேறொரு புலையர் - திருப்புன்கூரீசனை சேவிக்கலாமென்று
விருப்புடனழைத்தது விந்தைதா னென்றார்

நந்தனார் - கரும்புதின்னக்கூலி கையில்கொடுப்பதுண்டோ
இரும்புமனதுக்காரர் கில்லையே யென்றார்

வேறொரு புலையர் - புத்தியில்லாதவன் புலம்புகிறான்சிவனென்று
கத்தினாலுமென்ன காரியமோ வென்றார்

நந்தனார் - சித்தமுமொருதரம் நினைவுடனேசிவன்
சத்தமிருந்தாலென்றன் தாழ்வில்லை யென்றார்

வேறொரு புலையர் - சேரியிலிருந்தாலுஞ் செல்வங்குறைந்திடும்
ஊரைவிட்டாகிலும் ஒதுங்குவ ரென்றார்

நந்தனார்-வாருங்களெல்லோரும் மன்னனைப்போலவே
சேருவோந்தில்லைச் சிதம்பர மென்றார்

வேறொரு புலையர் } பாலாறுபெருகவே பண்ணையைப்பயிரிட்டு
ஆளாமலேவீணுக் கலைகிறீ ரென்றார்

நந்தனார்-பாலகிருஷ்ணன்தொழும் பாதத்தைநான்கண்டு
நாலாம்பதவியை நாடுவே னென்றார்

வசனம்.

அவர்களில் ஒருபுலையர் உரைத்ததாவது, எப்போதுஞ் சிவனைக்கொண்டாடினால் நம்முடைய தொழிலுக்குக் கெடுதலுண்டு பண்ணை விளையாதென்றுசொல்ல, நந்தனார் அதற்குச் சொல்லுகின்றார்.

இராகம்-தெண்டகம், ஆதிதாளம்.

அரகராவென்றொரு குழிநட்டாலெங்கலமே வினையும்
பாவம்-தங்காமற் றலையும்
சிவசிவாவென்றொரு தரஞ்சொன்னால் சென்மசபலமாச்சு
புண்ணிய-கருமமதுவே யாச்சு
தில்லையம்பலத் தெரிசனங்கண்டால் தேவரும்வருந்தாரோ
அந்த-மூவரும்பொருந் தாரோ
அடிமைக்காரத்தொழில்செய்வது துன்பமானாலுமேச்சே
சென்மம்-போனாலும் போச்சே

வசனம்.

நந்தனார் புலையர்களைப்பார்த்து, அனேக விதமாய்ச் சொல்லி நாளைப்போவேனென்று சொல்லுகின்றார்.

சிந்து.

நாளைப்போவேனென்றாராம் அங்கே நாடும்பறையர்களோடிவந்து, அண்ணேநீபோகாதே நமக்காண்டைபொல்லாதவன்வேண்டிக்கொள்ளான், பார்ப்பாரச் சாதியுண்டே.

வசனம்.

இப்படிச் சொல்லிய புலையரைப்பார்த்து நந்தனார் சொல்லுகின்றார்.

இராகம் - செஞ்சுருட்டி - ரூபகதாளம்.

பல்லவி.

ஆண்டைக்கடிமைக்காரனல்லவே
யானாண்டைக்கடிமைக்காரனல்லவே

அநுபல்லவி.

மூன்றுலோகமும் படைத்தளித்திடும்
ஆண்டவர்க்கொத் தடிமைக்காரன் (ஆண்டை)



சரணங்கள்.

ஆசைக்கயிற்றினிலாடிவரும்பசு
பாசமறுத்தவர்க் கடிமைக்காரன் (ஆண்டைக்)

தில்லைவெளிகலந்தெல்லைக்கண்டேற்றி
தேறித்தெளிபவற் கடிமைக்காரன் (ஆண்டைக்)

சிதப்பிறையணிந்தம்பலத்தாடிய
பாதம்பணிபவர்க் கடிமைக்காரன் (ஆண்டைக்)

---

சவாயி.

தன்னையடிமையாகக்கொண்ட வேதியர் சொற்கேளாதவரல்ல அப்படியிருந்தும், பத்தி பண்ணவேணுமென்று பத்தி நெறியைச் சொல்லிக் காட்டினார்.

விருத்தம்.

தவம்பெறுமுனிவர்மெச்சுஞ் சரித்திரங்கொண்டநந்தன்
பவமயக்கறுக்கவேண்டிப் பகர்ந்திடுஞ்சிவவாக்கியத்தை
அவகுணங்கொண்டபேய ரறிந்திடப்போமோவெல்லாஞ்
சிவன்செயலாகுநம்மாற் செய்வதொன்றில்லையென்றார்.

வசனம்.

திருநாளைப்போவார் அனேகவிதஞ்சொல்லப் புலையர்கேளாமலிருந்ததினால்சிவன்செயலென்று நாளைப்போவார்சும்மாயிருந்தார். அந்தச்சேரியில் புலையர் கூட்டங்கூடி மூத்தோனால் நந்தனுருக்குப் புத்தி சொல்வோமென் றெண்ணி அந்தச் சேரியிலே வெகுநாளாயிருக்கின்ற ஓர்புலையர் வயதுமிகுந்து உடல்தளர்ந்து பல்லுகளுதிர்ந்து தோலுகள் சுருங்கி நரம்பு தெரிந்து முதுகுசரிந்து முழுதும் வளைந்து அங்கம்சொரிபடர்ந்து திணவுமிகுந்து அதனைச்சொரிந்து அந்நீர்வடிந்து அவ்வுடல்நடுங்கி இவ்விதமிருக்கும்பெரிய கிழவனைரயனுப்பக் கோலூணி கூனிக்குறுகி கோணலாய் நடந்துவந்து நந்தனாரைப்பார்த்து கட்டியணைத்து தலைநிமிர்ந்து கண்ணீர்சொரிந்து மார்பில்வழிந்து மனங்கனிந்து காதல்மிகுந்து ஒன்றுந்தெரியாதவரென்று நினைந்துபரிந்து ஞாயமறிந்து சொல்லுவான்.

இராகம் - பியாகு, ஆதிதாளம்.

பல்லவி.

ஞாயந்தானோநீர்சொல்லும்-ஓய்-நந்தனாரே
நம்மசாதிக்கடுக்குமோ.

சரணங்கள்.

சேரியிலில்லா வழக்கம்-நீர்
செய்துகொண்டுவந்த பழக்கம்-இந்த
ஊரிலெங்குமது முழக்கம்-வெகு
உறுதியாச்சுது வொழுக்கம் இது. (ஞாய)

சிதம்பரமென்கிற பேச்சு-நாங்கள்
செய்திடுங்காரியம் போச்சு-அது
மதம்பிடித்ததுபோ லாச்சு-இந்த
மண்டலப்பறையருக் கேச்சு-இது. (ஞாய)

பறையருக்கேது தைம் பூசம்-அதைப்
பார்க்கவேயுனக்கு விஸ்வாசம்-சிறு
பயல்களுக்கேயுப தேசம்-நீர் (ஞாய)

வசனம்.

சேரியில்பெரியகிழவனனபடியால் சாதிவழக்கங்க ளெல்லாம் அறிந்தவனாதலால் நந்தனருக்கு இன்னமுஞ்சொல்லுகிறான்.

சிந்து.

பார்ப்பாரச்சாதியுண்டே -என்ன - பாடுபடுமுழக்காடுமங்கே, நமக்குந்திருநாளோ-அந்த-ஞாயமுண்டோயென்னமாயுமிது,வென் றேதடைசெய்தான்-சிவன்-வேடிக்கைதானென் றுநாடிக்கொண்டே அறியாதுபோலிருந்தார்.

பெரியகிழவன்சொல்லிய.

விருத்தம்.

கழனியைத்தெய்வமெனச்சுற்றிவந்துதலைவணங்கிக்கரங்குவித்து
உழுதுபரம்படித்துவிரைதெளித்துழுளைகொள்ளநீரோடவிட்டுப்
பழுதறவேநட்டதனைக்களைபிடுங்கிமடைதிறந்துநீர்பாயவிட்டுச்[சே
செழுத்திடவேபொங்கலிட்டுகாத்தவராயனைவேண்டுஞ்செய்கைதா

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

சுவாமிதெரிசனம்நமக்குண்டோ-புலைச்
சாதியன்றோவந்தீதியறியாமல்.

அநுபல்லவி.

பூமிதெரிசனம்போதும்போதும் வெகு
புண்ணியமேசோறுபோடுமின்ன மொரு.



சரணங்கள்.

நாத்துநாரம்புகளைச்சுமப்பதும் உழுவதும்
நஞ்சைவயலைச்சுற்றி வருவதும்-வளம்பெற
பாத்திகள்கட்டிவிரைதெளிப்பதும்பறிப்பதும்
பாயும்மடையைத்திறந்திடுவது மன்றியில். (சுவாமி)

சேரியிடையில்குடியிருப்பதும் பதறுகள்
சிதறத்தூற்றிநெல்லளப்பதும் பார்ப்பதும்
ஊரைவளைந்துதமுக்கடிப்பதும் மதுக்குட
முண்டுகளித்துநாமுறங்குவ தன்றியில். (சுவாமி)

ஆண்டைமார்களிடும்பணிவிடைசெய்வதும்
அருகில்நின்றுகையைவிடுவதும், நடுவதுந்
தாண்டிநடந்துநெடுங்கோல்பிடிப்பதுமளப்பதும்
தனித்துக்கடலைதினங்காப்பது மன்றியில். (சுவாமி)

விருத்தம்

சாதியின்முறைமைகாட்டித் தடையிடப்போதுமென்றார்
வேதமாமுனிவராலும் வினவியுங்கண்டாரில்லைப்
பேதையாம்புலையருக்குப் பேரின்பநிஷ்டையேதென்
றோதலாலென்செய்வோமென் றம்பலத்தஞ்சுவாரே.

வசனம்.

பெரியகிழவனைப்பார்த்து நந்தனார் சொல்லுகின்றார்.

இராகம் - தெண்டகம், ஆதிதாளம்.

சிதம்பரதெரிசனங்காணுகிடிலிந்தச்சென்மஞ்சபல மாமோ
சென்னமரணசமுசாரம்பெருகவேசெய்தவினைகள் போமோ
கண்ணுங்கருத்திருக்கச்சிவனைக்காணுமல்காலங்கழிக்க லாமோ
காலபாசநமதருகில்வாராமல்கண்டுபயந்து போமோ
இப்படியெப்போதுமிருப்போமென்றெண்ணியிருக்க லாமோ
இருதயமறிந்திடசெய்திடுங்கன்மங்கள்இகழ்ந்துபிரிந்து போமோ
முன்னுமுன்னுமறியாதமூடர்கள்புத்திகேழ்க்க லாமோ
புலையரவாடியிலிருக்கினுமெய்திடும்புண்ணியங்கள் போமோ
சிவனைக்கொண்டாடவேணுமென்றுபரிந்துபாவி பார்த்தேன்
பாபஞ்செய்பவர்க்குப்பலியாதுஅதில்பாடுபட்டுப் பார்த்தேன்.

வசனம்.

சேரியிலுள்ள புலையர்கள்கூட்டங்கூடி அனுப்பிவைத்தபெரிய
[illegible]ப்பார்த்து நந்தனார்சொல்லுகின்றார்.

இராகம் - தெண்டகம். ஆதிதாளம்.

மீசைநரைத்துப்போச்சே கிழவா ஆசைநரைக்கலாச்சோ
பாசம்வருகலாச்சே கிழவா பாவம்விலகிப்போச்சோ
கூனுகுறுகிப்போச்சே கிழவா கோபம்விலகிப்போச்சோ
அங்கம்தளர்ந்துபோச்சே கிழவா ஆங்காரமும்போச்சோ
சேரியைமறந்தாயே கிழவா சிதம்பரமறந்தாயோ
மானிடசென்மமடா கிழவா மாண்டால்வருமோடா
அம்பலத்தரசனடா கிழவா ஆளுந்தெய்வமடா
திருவடிபணியாயோ கிழவா தேடித்தெளியாயோ.

வசனம்.

நந்தனர், இவ்விதஞ்சொல்லி சிவகாமவல்லிபாகனை நினைந்து நீறள்ளி பெரியகிழவன் முகத்திலேதடவி வாயிலேபோட்டுக்கட்டியணைந்து காதிலே சிவமந்திர முபதேசித்தார். உபதேசமான உடனேபெரியகிழவன் சித்தந்தெளிந்து சிவமாய்நிறைந்து உற்றதுணர்ந்து ஒருவனாயிருந்து அத்தனடியா ரருளிதுவென்று பத்திமிகுந்து பரவசங்கொண்டு பேசத்தெரியாமற்பேசுவான், நான்இன்றைக்குத்தான் பெரியகிழவனானேன் நந்தா எனது பந்தந்தீர்க்கவந்தாய் முத்திதந்தாயென்று சுத்திவலம்வந்து அடிபணிந்துவிடைபெற்றுக் கண்டேனென் கலிதீர்ந்தே ஞானந்தங்கொண்டேன் குறைதீர்ந்தேன் அமிர்தமுண்டேன் பசிதீர்ந்தேன் பிறவிவென்றேன்வீடுநின்றேனென்று பேசிக்கொண்டு பெரியகிழவனார் நந்தனரா லுபதேசம்பெற்று வருகின்றார்.

இராகம் - சங்கராபரணம், ரூபகதாளம்.

பல்லவி.

பெரியகிழவன்வருகிறான் பேரானந்தக்கடலாடி (பெரி)

பாவியமாயையிலிருந்து பார்முதல்பூதங்களைந்து
பெரியவரென்றுணர்ந்து பேரின்பலாபத்தையடைந்து (பெரி)

படிபுகழ்நந்தனர்மகிழ்ந்து பரமசிவபக்திபுரிந்து
கொடியவன்பாவங்கள்தீர்ந்து கூனிக்குறுகிநடந்து (பெரி)

நந்தனர்சொன்னதறிந்து நானென்றுரையுமிழந்து
பந்தமயக்கந்தெளிந்து பரவெளியாகநினைந்து. (பெரி)

வசனம்.

புலையர்களெல்லாங் கூட்டங்கூடி நந்தனருக்குச் சிதம்ப
பித்தந்தெளிய புத்திசொல்லியனுப்பிய பெரியகிழவன் நந்த



பித்துகொண்டு அவருடையமகிமையெல்லாம் புலையர்களிடத்திற் சொல்லிக்கொண்டாடுவான்.

பெரியகடுக்கா.

திருநாளைப்போவாரிந்தச்சேரிக்குமூருக்கும்
யாருக்கும்பெரியவன் திருநாளைப்போவார்
ஒருதரமாகிலுஞ் சிவசிதம்பரமென்று
உரைத்திடரென்றிவ்வுண்மைகூறிய. திருநாளைப்

அடாதுசெய்தால் படாதுபடுவீர் விடாதுபாவந் தொடாதே அவன்பேரிடாதே தூறுபடாதே தையிடிபடாதே வெம்பகையிடாதே அப்பா இடாங்கன்கோபப்படாது பட்டால்விடாதுசலம்படாதவன் பயப்படாதவன் இடங்கொடாதவன் அடங்கிடாதவன் நிலைவிடாதவன் மாறுபடாதவன் மனம்விடாதவன் அடங்கிடாதவன் விடையவலைப்படான் மாயைக்கப்படான் சிவனையிடைவிடான் அழனிகளைநடான் கலப்பைகளைத்தொடான் நமது வழிப்படான் பொலிகிடாரி எல்லைப்பிடாரி வெல்லப்படாது சொல்லப்படாது கல்லப்படாது தள்ளப்படாது யாரையும்விடாது துன்பந்தொடாது வழியைத்தேடாது இருவினைப்படாது சென்மங்கெடாது தெய்வங்கெடாது அவன்கைவிடாது வேறுபடாது ஆசைப்படாமல் அருளைக்கொடாது பங்கப்படாத தங்கக்கடாரம்பொங்கபடாதவன் இணையிலாதபுண்ணியதடாகஞ்செய்தவன் மடாதிபதிபிடிபடாதசிங்கம் அளவுபடாதமகிமை விடாதபெரியவனடா தெரிசனப்படாதசந்நிதி விடாதநந்தியசைந்ததேனடா அரன்விலகடாவென்றசொல்லடா அவனைப்பணியடா தாளையணியடா அறிந்துபோற்றடா கையெடுத்தேத்தடா மலரைத்தூற்றடா மனதைத்தேற்றடா பிறவிமாற்றடா ஆனந்தக்கூத்தடா சொன்னேன் திருநாளைப்போவாரிந்தச் சேரிக்குமூருக்கும் யாருக்கும்பெரியவன்:

வசனம்

இப்படி பெரியகிழவன் சொல்லக்கேட்டு, நந்தனாலே கெடுக்கப்பட்ட பதினாறுபேர்களுக்குள்ளே நீயும் பனிரண்டாம்பேராயிருக்கத்தலைப்பட்டு சிவசிவாவென்றுசொல்லிச் சேரியைக்கெடுக்கத் தலைப்பட்டீர்களே கிழவாவென்று மிகவுந்துன்பமடைந்து புலையர் ஒருவர்க்கொருவர் சொல்லித் துயரப்படுகின்றார்கள்.

இராகம் - புன்னாகவராளி, சாப்புதாளம்.

பல்லவி.

நாம் என்னசெய்வோம் புலையரே-இந்தப்
பூமியில்லாதபுதுமையைக்கண்டோம். நாம்.

சரணங்கள்.

நந்தனொருவனாலேயிப்படி யாச்சு
நன்மையுந்தன்மையுமில்லாமற் போச்சு
சந்திக்குச்சந்திகூத்தாட லாச்சு
சாமியுமில்லாமலெங்கயோ போச்சு நாம்

கன்னற்கற்கண்டவ்வார்த்தைகேட் பாரோ
காதிற்பட்டாலதைக்கருத்துட்கொள் வாரோ
மன்னார்சாமிக்குப்பூசைபோட் டாரோ
மாரியாத்தாளங்கேமறைந்திருக்கி றாளோ நாம்

சேரிக்குள்பதினொருபேர்களுங் கெட்டார்
செய்யுந்தொழில்முறைபாவையும் விட்டார்
ஊருக்குப்பெரியகிழவனுட் பட்டார்
உண்மையறியாமற்சிதம்பரந் தொட்டார் நாம்

வசனம்.

சேரியில்துன்பமடைந்த புலையர்களைப்பார்த்து உங்கள்தெய்வத்துக்கு வழக்கம்போலே பூசைபோட்டு பலியிட்டுவேண்டினால் சேரிக்கு நல்லகாலம்பிறக்குமென்று பெரியகிழவனார்சொல்ல, புலையர்கள் பூசைபோடுந் தெய்வங்களாவன.

கடுக்கா.

வீரன் இருளன் காட்டேரி வெரியன் கொண்டி சாமுண்டி தூறித்தூண்டிநல்லண்ணன் தொட்டியச் சின்னான் பெத்தண்ணன் மாறு முனியன் சங்கிலியும் மாடன் கறுப்பன் பாவாடை மூறித்காத்தான் குழியிரிசி மோகினி சத்த கன்னியையும் சேரிமன்னான் மின்னடியான் சிறுக்காட்டுடையன் பனைமரத்தான் மாரியாண்டி வழிமறுத்தான் மலையன் சாத்தான் பக்கிரியும் ஏரியனுஞ் சிலம்பாயி இடையன் நல்லான் ஊமையோடு வீருங்கல்லன் பெத்தாச்சி வீட்டுதெய்வ முதலான.

இதுகளைத் தெய்வமென்று வணங்கிக்கொண்டாட எனங்கோழி ஆடுகளுடனே மதுக்குடம்வைத்து பள்ளயம்போட்டு பம்பையடித்துவருந்தச் சன்னதம்வருஞ் சொன்னேன், சேரிக்கு நல்லகாலம் பிறக்கும் சிதம்பரபித்து நந்தனுருக்குத் தெளிந்துவிடுமென்றே பேர்பெருக வாழ்வீரென்றும் பெரியகிழவன்சொன்னாரே அப்பவே கிழவன்சொல்லை நம்பிக்கைகொண்டு புலையர்களெல்லாரும்



பந்தலிட்டு பள்ளையப்போட்டு கொம்பு தம்பட்டமுழங்கி மும்பூசையிட்டு வேண்டுவார்கள்.

வருந்திக்கொண்டாடும் அகவல்

புலையர்—எல்லைப்பிடாரியேஎதிராகவந்தெமை
கொள்ளையுங்காவலாய்க்கொள்ளடி யென்றார்
நந்தனார்—சொல்லினுமடங்காதுசோதிப்பரமானந்தத்
தில்லைநாயகரைத்தேவ ரறியாரோ
புலையர்—முண்டாசுகட்டிவரும்நொண்டிவீரப்பனைக்
கொண்டாடிப்பூசைசளைக்கொள்ளுவீ ரென்றார்
நந்தனார்—அண்டங்கள்பதினாலுக்கப்பாலுமிப்பாலும்
நின்றார்க்குமுண்டாரசுநிலையாது யென்றார்
புலையர்—கச்சையரிவாள்வைத்த கறுப்பண்ணசாமியை
இச்சையுடன்வேண்டும்என்றெய்வ மென்றார்
நந்தனார்—பச்சிலைபிடுங்கியேபாதத்தில்சாற்றினால்
இச்சையானதுமீயுமென்றெய்வ மென்றார்
புலையர்—நேயமறுகோழியுநிணமூன்றுசாவலும்
தீயகள்ளுவைத்துத்தெரிசித்து நின்றார்
நந்தனார்—வாயாலேசிவமென்றுவருந்தினாலெப்போதும்
தாயாரைப்போலவேதழுவிவரு மென்றார்
புலையர்—பிடித்துப்பிடித்திருக்கும்பேயனும்நந்தனுக்கு
சித்தந்தெளிந்திடச்செய்குவீரென்றார்
நந்தனார்—பத்திவெள்ளம்பெருகிப்பாய்ந்தாலுஞ்
நத்தையுநிஞ்சஞ்சாதிடார்து என்றார்

வசனம்

இவ்வகைப் பூசைபோட்டுத் தெய்வங்களைக் கொண்டாடும் புலையர்களைப்பார்த்து நந்தனார் சொல்லுகின்றார்.

இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

பத்திசெய்குவீரே-நடேசனைப்-பத்திசெய்குவீரே

அநுபல்லவி.

அத்திமுகனைப்பெற்ற உத்தமனைவிட
நித்தியதேவனெவர்களுமில்லையென்று (பத்திசெய்)

சரணங்கள்.

சாமமதர்வணமிருக்குயசுர்வேதந்
சாற்றும்படித்தும்தர்ப்பரன்அரனென்று.

ஏமாறுமற்சொல்லியின் புழுதலையின்று
எவர்களுமறியவேயிப்புவிதனில்நின்று. (பத்தி)

ஆகமமிருபதெட்டாதிபுராணமும்
அயன்கீதைமுதலான அனந்தஸ்மிருதிகளும்
பாகமாகியபிர்ம்மபரமனொருவனென்று
பண்புடனுரைத்திடும்பான்மையதாலின்று. (பத்தி)

கௌதமர்முதலானயிருடிகளனைவரும்
கேசவன்தொழும்பதங்கதியென்றனுதினமும்
புவனத்தில்போற்றியேயேத்தினதாலிவர்
புகழும்புண்ணியபதப்பொருந்தினரென்பதால். (பத்தி)

அரியயனிந்திரமுதலானதேவரும்
அரனடிதன்னையேயன்பாய்பூசித்ததால்
பரிவுடனவர்செல்வம்பழுவராமலே
பாலித்தார்சிவனென்றுபத்தர்சொல்வதினாலே (பத்தி)

வியாசமுனிவரும்அவரடியார்களும்
விஷ்ணுபரமென்றுவிளம்பினதால்முன்னம்
கயாகாசிக்கங்கைக்கரையிற்கையிழந்ததும்
கல்லாய்த்தானேயவர்சமைந்ததினாலேயும். (பத்தி)

தில்லையம்பலத்தினில்திருநடனமாடிடும்
தேவாதிதேவனை தினம்பணிந்தேத்தியே
அல்லல்சம்சாரக்கடலிலழுந்தாமல்
ஆனந்தக்கூத்துகளாடிக்கொண்டுநீங்கள். (பத்தி)

விருத்தம்.

இத்தனைநாட்பரமசிவன் றிருமகிமையிரவுபக லெடுத்துச்சொன்னேன், பத்திபுரியெந்தனுக்கேயருள்புரிந்தவையன்பதம் பணிவீரென்றேன், அத்தனையுமிழந்திடவே மனவெறுப்பா யெந்தனையுமவமானித்தீர், புத்திசொல்வேனென்றவர்கள் முழந்தாளிட்டடிகொண்டு புனைந்திட்டாரே.

வசனம்.

நந்தனார் மகாபலசாலியான படியால், புலையர்களைச் சிட்சித்து சிவநாமத்தைச் சொல்லச்சொல்லுவார்.

தண்டகம்.

தத்திப்புலிபோலேதாண்டிக் குதிப்பார்
முத்தமிடுவதுபோலேமுகத்தைக் கடிப்பார்



வார்கொண்டுகட்டிவளைத்துப் பிடிப்பார்
தார்க்கல்லெடுத்துத்துடைக்குள் ளெரிப்பார்
பல்லாற்சுரண்டியேபரம்படித் திழுப்பார்
கல்லாலெறிந்துமவர்காயப் படுத்துவார்
குப்புறத்தள்ளியேகோபித் துதைப்பார்
செப்பியசிவனைநீர்சேவிப்பீ ரென்றார்

வசனம்.

இப்படிசிட்சித்தபின்பு, புலையர்களெல்லோரும்நந்தனாரடிக்குப் பயந்து பத்திசெய்யத் தொடங்கினார்கள்.

கடுக்கா.

அரகரசிவசிவஅம்பல வாணா
தில்லையம்பலதேசிக நாதா
புரமூன்றெரித்தபொன்னம்பல வாணா
கரியுரிபோர்த்தகருணா கரனே
அனுதினமன்றுளாடிய பாதா
பிழைபொறுத்தாளும்புண்ணிய மூர்த்தி.

வசனம்.

மூடப்புலையர்களுக்குப் புத்திவருமாவென்று நந்தனாரிப்படிச் சொல்ல யாவரும் தொழுதார்கள்.

இராகம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

பத்திகள்செய்தாரே-பரசிவ- பத்திகள்-செய்தாரே.

சரணங்கள்.

பத்திகள்செய்தார் நற்றவம்புரிநந்தன்
சித்தமகிழ்ந்திடவத்தனைபேர்களும் (பத்திகள்)

எடுப்பான்சிவகதைபடிப்பான்தடியொன்று
பிடிப்பான்காலுக்குஅடிப்பானென்றே (பத்திகள்)

கல்லாதவனிங்கேசெல்லாதவனன்றி
யில்லாதவன்வெகுபொல்லாதவனென்றே, (பத்திகள்)

வசனம்.

அந்தச்சேரியிலே புலையர்கள்பத்திசெய்ததால், சேரி சிவலோகம்போல விளங்கியது, சிலநாளுக்கு பின்பு புலையர்களெல்லாங்கூடி நந்தனாரைப்பணிந்து நல்லவார்த்தைசொல்லி நாங்களெல்லோரும் ஒன்றுக்கு மூன்றுவிசை சிவனே யென்று சொல்லுகிறோம்

மற்றவேளையில் எங்கள் பண்ணைத்தொழில் செய்வோமென்று கேட்க நந்தனர்நல்லது அப்படியேதப்பாமல் செய்யுங்களென்று நந்தனர்சொல்லிவிட்டுச் சேரிபெரியகிழவனுடன் திருப்புன் கூருக்குப் போய்வந்த புலையர்களைப்பார்த்து நந்தனர்சொல்லுவார்.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

கொள்ளையெனும்பிறவிவிரைமுளைவிசாமற்
குடிமாறிப்போவதற்கோர்வகையைக்கேட்க
கள்ளமனக்குரங்கதனைவிடையமாக்கு
கட்டியிருந்தாலிருந்தவிருத்திபோச்சு
உள்ளங்கைக்குள்ளிருக்குங்கனியைப்போல
வுருவில்லாதான்மாவோருக்குவாழ்வீர்
எள்ளளவும்பிசகில்லையென்றஞானம்
ஏற்றுவார்மும்மலத்தைத்தூற்றுவாரே.

இராகம்-எதுகுலகாம்போதி-ரூபகதாளம்.

பல்லவி.

பார்த்துபிழையுங்கள்-நீங்கள்-பார்த்துப்பிழையுங்கள்.

சரணங்கள்.

பார்த்துப்பிழையிந்தச்சோற்றுத்துருத்தியை
எத்தித்தொழவேண்டாம்காத்துப்போகுமுன்னே (பார்த்து)

ஆத்திமதிசூடுங்கூத்தனிடமாயச்
சூத்திரத்தையிந்தக்ஷேத்திரத்துள்ளாடி. (பார்த்து)

வீற்றிருப்பீர்காலங்காத்திருப்பான்சிவ
சாத்திரத்தைஞானநேத்திரத்தாலுற்றுப் (பார்த்து)

மூலக்கனல்தாண்டிமேலக்கரைவந்து
பாலைக்குடியிந்தநாலுக்குள்வாராமல் (பார்த்து)

பாலகிருஷ்ணன்றொழுங்கோலப்பதங்களை
மேலுக்குமேல்நாடிசாலக்கவியற. (பார்த்து)

இராகம்-யமுனாகல்யாணி-அல்லது-சாரங்கா-ரூபகதாளம்.

பல்லவி.

தில்லைச்சிதம்பர மென்று-ஒரு
தரஞ்சொன்னால்பரகதி யுண்டுண்டு.

அநுபல்லவி.

நல்லச்சுருதிமுடி கண்டு-சபா
நாதன் திருத்தாளைசிந்தையிற் கொண்டு (தில்லை)



சரணங்கள்.

வேரில்லாமலொருவிருட்சமொன் றிருக்கு
விளையும்வினைகளெல்லாஞ்செய்யுந் திருக்கு
பேரில்லாமன்ஞானத்திலாடு கருக்கு
பேரின்பமானமைப்பிசகாமல் நெருக்கு (தில்)

தேசம்புகழ்தில்லைக்கோவில் வளைந்து
நித்திக்குஞ்சிவபஞ்சாட்சரம் புரிந்து
ஆசையுடனேயர்த்தசாமத்தி விருந்து
அங்கம்புளகிதமாயடிக்கடி பணிந்து (தில்)

மாயன்கோபாலகிருஷ்ணன்றினந் தேடி
வருந்துஞ்செந்தாமரைமலரடி நாடித்
தாயைப்பிரிந்திளங்கன்றுபோல் கூடித்
தனித்திருந்துதாளம்போட்டுக்கொண் டாடி (தில்)

இராகம்-கௌரிபந்து, ஆதிதாளம்.

பல்லவி.

நமக்கினிநமபயமேது-தில்லை-நடராஜனிருக்கும்போது

அநுபல்லவி.

மார்க்கண்டருக்காகமறலியையுதைத்திட்ட
மான்மழுவேந்தும்மகாதேவனிருக்க (நமக்கினி)

சரணங்கள்.

இம்மைமறுமைமுதலியாவுக்கும்பரமான
சின்மயானந்தரூபச்சிவபெருமானிருக்க (நமக்கினி)

அரியயனமரரும்ஆலங்கண்டஞ்சமுன்
பரிவுடன்வரக்காத்தபரமசிவனிருக்க (நமக்கினி)

திருவிக்கிரமனாய்வரும்திண்மாயன்மமதையை
விரிவுகங்காளனாகிவிலக்கும்பரனிருக்க (நமக்கினி)

ஆதிசேடனுமானுமலரோன்மிலக்குமியும்
காதலாய்த்தவஞ்செயக்களித்தபரனிருக்க (நமக்கினி)

இரணியனுல்வெறிகொண்டநரசிம்மனை
தரணியில்ரக்ஷித்தசங்கரனிருக்க. (நமக்கினி)

இராகம்-தோடி, ஆதிதாளம்.

பல்லவி.

சங்கரனைத்துதித்தாடு-இனி-சனனமில்லையென்றுபாடு.

அனுபல்லவி.

பொங்கரவணிந்திடும் பொன்னம்பல வானை
புத்தியில்நினைவாகப் போற்றுவாய் சிவனை (சங்கர)

சரணங்கள்.

| | | |
|---|---|---|
| பாரினிற்பெண்கள்மேற் | கருத்து - போய்ப் | |
| பற்றவொட்டாமலே | திருத்து | |
| பேரின்பஞானத்தை | வருத்து - சுகப் | |
| பெருவெள்ளிநீநெஞ்சி | லிருத்து | (சங்கரனை) |
| நீர்மேற்குமிழியிக் | காயம் - என்றும் | |
| நிலையில்லா வாழ்விது | மாயம் | |
| போரானமாலயன் | நேயம் - பெறப் | |
| பேசுவரீதேயு | பாயம் | (சங்கரனை) |
| மனிதச்செனனத்தில் | தேடு - நல்ல | |
| மாதவத்தோர்களைக் | கூடு | |
| தனிவெளியாமொரு | வீடு - தன்னைத் | |
| தத்துவத்தால்கண்டு | நாடு. | (சங்கரனை) |

வசனம்.

இப்படிசொல்லியநந்தனரைநோக்கி மற்றபுலையர்கள் சொல்லுவார்கள்.

இராகம்-சவாபி, தண்டகம்-சாப்புதாளம்.

அவர்கள் - புண்ணாகியவிந்தப்பிறவிபிணிக்குமருந்துண்ணமலிருப்பதுவுண்மையே நந்தா
நந்தனர் - கண்ணாலேபார்த்திடில்காட்டிமறைத்திடும்
மண்ணனபூமிகள்மாயமே மைந்தா
அவர்கள் - இருப்பதுபொய்யென்றிராததுமெய்யென்று
இருத்திப்பேசியவகையென்னடா நந்தா
நந்தனர் - உருத்தெரியுதுநாமரூபமல்லவோ
கருத்திலிருத்திக்கொண்டால்காணலா மைந்தா
அவர்கள் - விஸ்தாரமாமிந்தபிண்டமானமெத்தை
பத்திக்கொண்டிருந்துபகர்ந்திடும் நந்தா
நந்தனர் - வித்துக்குள்விருட்சமடக்கியவாறுபோல்
சத்துக்குள்ளண்டசாசர மைந்தா
அவர்கள் - புத்திக்குளெட்டாதபோதத்தைநாமுண்டு
முத்திபெறும்வழிமொழியுமே நந்தா



நந்தனர்-அத்தனிருக்குமிடமன்னமயாதிகள்
பத்துதலில்லாபரவெளி மைந்
அவர்கள்-தத்துவங்கள்தொண்ணூற்றாறுங்கடந்திடும்
வஸ்துவைநாமென்னும்வகையேது நந்தா
நந்தனர்-நித்திரையொழித்தபின்நினைவுடனேகூடி
உத்தரம்பேசியதுண்மையே மைந்தா
அவர்கள்-பித்தனைவேறொருபேய்பிடித்தாற்போலுஞ்
சித்தவிகாரங்கள்தெளியுமோ நந்தா
நந்தனர்-பத்திவலைவீசிபார்த்திடும்வேளையில்
தத்திக்குதித்திடுந்தாண்டவம் மைந்தா
அவர்கள்-சீலமுள்ளநல்லசேதிசொன்னாயுந்தன்
காலுக்குப்பிடக்கண்டோமே நந்தா
நந்தனர்-பாலுக்குச்சக்கரைபலித்ததுபோலுங்க
ளாலேயன்றோவிடுநாடாது மைந்தா
அவர்கள்-தூலச்சரீரத்தைச்சுமந்துபிள்ளைப்பூச்சி
போலேயானோமுந்தன்புண்ணியம் நந்தா
நந்தனர்-பாலகிருஷ்ணன்தொழும்பாமசிவனரு
ளாலேபொங்கிவருமானந்தம் மைந்தா

எண்சீரடியாசிரிய விருத்தம்.

ஓங்காரமென்றுசொல்லுமூலைப்போட்
டுறந்தெனுமிருப்புலக்கைக்கையிலேந்தி
வங்காரமென்றரட்டுவாகையிட்டு
வடிக்கடிபோகன்னியதைப்புடைத்தெடுத்து
நீங்காதசிவயோகநிஷ்டைகொண்டு
நிர்மலமதானவருஞ்சுற்றிவந்து
பாங்கானநந்தனிருதாளைப்போற்றிப்
பணிந்திட்டார்திருநீற்றையணிந்திட்டாரே.

வசனம்.

அவர்கள் நந்தனரைவிட்டு நீங்கிதனித்திருக்க மனம்வராமல் செல்லுவார்கள்.

விருத்தம்.

தில்லையில்போகவேண்டாந்திரும்பிவந்தாலும்மைச்
செல்லாதுபண்ணைப்பார்ப்பான்சினங்கொண்டபடியாலிந்த
எல்லையிலிருந்துதானேயீசனார்திருநாமத்தைச்
சொல்லியநாளார்வீட்டிற்சேருவோம்வாரீரென்றார்.

வசனம்.

அனல்கண்ட மெழுகதுபோலுருகிப்பத்தி வெள்ளம்பெருகிச் சொல்லியபேர்களை நந்தனார் கரமாலிங்கனம்பண்ணி கண்ணீர்சலம் பெருகச்சொல்லுவார்.

லாவணி - ஆதிதாளம்.

தில்லைவெளியிலே கலந்துகொண்டாலவர் திரும்பியும் வருவாரோ
எல்லைகண்டபேரினிப் பிறவாரென்றறியும் புலைத்தியாரோ
பெண்டுபிள்ளைகள் வெறுங்கூட்டமது பேய்ச்சுரைக்காய்த் தோட்டம்
கண்டுகொள்வார் பெரியோரறிவில்லக்கனகசபையினாட்டம்
திருவாதிரையில் தெரிசனங்காணத் தேடித்திரியாரோ
அரிதாகியவிந்தமானிடங்கிடைத்தாலானந்தமடையாரோ
குஞ்சிதபாதத்தைக்கண்டாலொழிபெருங்குறையதுநீங்காதே
சஞ்சிதக்குமாரதிகளுடையவுடலழுந்தத்தாக்காதே
சேரியிடையிலே குடியிருந்தாலிந்தச்சென்மமுந்தொலையாதே
சிதம்பரம்போவேன் பதம்பெறுவேன் தடைசெய்வதுமறியாரே
இரவும்பகலுமொழியாக்கவலையிருப்பதுசுகமோடா
இன்பம்பெருகும்பரமானந்தவெள்ளமிழந்துநீபோடா.

வசனம்.

சிதம்பரம்போவேன நீங்களிங்கே இருங்களென்று நந்தனார் சொல்லுவார்.

இராகம் செஞ்சுருட்டி, ஆதிதாளம்.

பல்லவி.

சிந்தனைசெய்துக்கொண்டிருந்தாலுஞ்சுருக்
கெந்தவிதமுங்கரையேறலாம்சிவ (சிந்தனை)

அந்தணமுனிவரு மிந்திராமரரும்
வந்துபணியுமவர் விந்தைபொற்பாதத்தை (சிந்தனை)

மாமனைவதைத்தவன் காமனையெரித்தவன்
மான்மழுதரித்தவன் தாமரைப்பாதத்தை (சிந்தனை)

தப்புருவணிந்திடுந் தும்புருநாரத
ரும்பணியும்பொன்னம்பலவாணனை (சிந்தனை)

வெப்பியதும்பிக் கருளியபாலகிருஷ்ண
ணன்பணியுந் திருவம்பலநாதனை. (சிந்தனை)

இராகம்-பூரிகல்யாணி, அல்லது சாமாராகம், ஆதிதாளம்.

பல்லவி.

தில்லைத்தலமென்று சொல்லத்தொடங்கின
வில்லைப்பிறவியினியும்பாவமும்



அநுபல்லவி

சொல்லத்தகு மிதுவே சிவலோகம்
எள்ளத்தனைபறஞ் செய்யிலயோகம் (தில்லை)

சரணங்கள்.

ஆகமவேதபுராணங்கள் சாத்திர
மருந்தவம்புரிவார்க்குவருளிய பாத்திர
மாலயமாயிரத்தெட்டினி நேத்திர
மானந்தத்தாண்டவமாடிய க்ஷேத்திர (தில்லை)
நணத்திலாடுமணிமாதி சித்தியுஞ்
சகனத்திலாரும்விண்ணோர்கள் வெற்றியு
மனையில்லாதருநசாஸ்திர பத்தியு
மிகத்திறமினைவருஞ்சிவபத மத்தியும் (தில்லை)
பரமரகசியமொன்று பார்க்கலாம்
பாலகிருஷ்ணன்கவிராக் கேட்கலாம்
கருமவினைகளடங்காமற் போக்கலாம்
சுசடர்கட்குமுத்தியுமுன் டாக்கலாம் (தில்லை)

வசனம்.

நந்தனார் ஞான உபதேசஞ்சொல்லக்கேட்டு, முன்னே நந்தனாருடன் திருப்புன்கூரிற்போய்சிவதெரிசனஞ் செய்துவந்தவர்களாகிய அறவன், தொந்தி, ஆனையேறி, மத்துமாரி, கழனிகாத்தான், பாச்சலூரான், ஆண்டிசேவகன், சொறியன், வெறியன், காளியான், எல்லைச்சுற்றியென்கிற பெரியகிழவன், இந்த-அறிருபேர்களுமானந்தமடைந்து அமரவர்கள் நிஷ்டையிலிருக்கத் தொடங்கினார்கள் மற்றபுலையர்கள் கூட்டங்கூடி நந்தனார் நம்மை நாளொன்றுக்கு மூன்றுதரஞ் சிவநாமத்தைச் சொல்லச்சொன்ன குற்றத்தைப்பாராட்டி நந்தனையடிமைகொண்ட அந்தணனிடத்தில் சொல்லுவார்கள்.

விருத்தம்.

இரவுபகல் பரமசிவனிணையடியே தொழுதிருக்கு மின்பங் கூறிக் கரைபுரளுங்கடலதுபோற் சிவத்தினிடைக்கருத்துணரக் கண்டெல்லோரும், பரவிவரும்புலையர்களும் பண்புறவே நெறி காட்டிப்பகரக்கேளீர், அரியதொருநந்தனிவ னடிமைபுரியந்தணர் பாலறிக்கை செய்வார்.

கொண்டிச்சிந்து - இராகம், பைரவி - ஆதிதாளம்.

ஐயோவொருசேதிகேளும்-உங்கள் - அடிமைக்காரப் பறைய
த்தையெல்லாம், வரவரக்கெட்டுப்போச்சு - சேரியில் - வழக்க

மில்லாதபடிபழக்கமிட்டான், குடியிருக்க மாட்டோம்-எப்போதும் கூக்குரல்போடுகிறனைமறந்தே, இருப்பானொருவேளை-கொள்ளாத ஏக்கமடைந்தவன்போல் நாக்கைவளைத்துச், சிரிப்பானொருவேளை தில்லைச் - சிதம்பரமென்றுசொல்லி மதம்பிடித்தே, அழைப்பானொருவேளை-எங்களையும்-அண்ணேன்வாவென்றுசொல்லி கின்னரங்கொட்டி, குதிப்பானொருவேளை - திக்குமுக்கல - கொண்டவன் போலெதையோ கண்டவன்போல், களிப்பானொருவேளை - மரம் போலே - கையசைக்கல்காலசைக்கல்மெய்யசைக்கலும், இருக்கானொருவேளை - தாளம்போட்டு - டெக்கலிகொட்டியே குடிசிக்குட் புகுந்து, பேசானொருவேளை - கண்டதெல்லாம் - பிரட்டென்று சொல்லுவான்முரட்டுக்கனா, மன்னுறுசாமிபோலே-கிளம்பி-வாய் விட்டலறுங்குரலாரெட்டுமே, ஐயோசிவனேயென்பான் - கீழே புரண்டழுவானியாரையுந்தொழுவானே, தூண்டிமீன்துபோலே துள்ளித்துள்ளித் - துடிப்பான்பற்களைக்கடிப்பானே, சிவனென்று மூன்றுவாட்டி-நாங்களுஞ்-செப்பவேணுமல்லாவிடி லிடிப்பிலுதைப் பான், கோவிலிற்போவோமென்பான் - எங்களையும் - கும்பிடச் சொல்லிபில்லாவம்புபண்ணுவான், சுற்றிவரச்சொல்லியடிப்பான் சிவன்பேரை - சொல்லடாசந்நிதியில் நில்லடாவென்பான், சொல் லித்தலைக்கலைனும்-இல்லாவிடில்-சுக்குமாந்தடிகொண்டுநொருக்கி விடுவான், கொடபேறிமூக்கன்போல-முதுகினில் - குத்துவான்புலி போலேதந்துவானே, இதுவென்னகாரணமோ - எங்களுக்கினமா யிருக்குதுமானமல்லவோ, கறுப்பண்ணசாமிதானுப்-இருளன்-காட் டேரிவீரனிவன்வீட்டேறியோ, போவாடைதுரைதானோ - ரண-பத் திரகாளியோவுன்மத்தவீரனோ, பூசைகள்போட்டுப் பார்த்தோம் ஒன்றிலும்-போவதில்லைகாரியமாவதில்லையே, எங்கள்வள்ளுவரைக் கேட்டோம் - அவர்-எடுத்துச்சொன்னரிதைவிடுத்துச்சொன்னர், மாயானஉருத்திரனர்-பிடித்து-வாட்டுதடா இப்படியாட்டுதென்றுர் தெளியாதென்றுசொன்னர்-ஐயே-தெளியாதெனறுசொன்னர்.

இராகம்-கன்னடபியாகு, ஆதிதாளம்.

பல்லவி.

சேதிசொல்லவந்தோம் - நந்தனர் - சேதிசொல்லவந்தோம்.

அநுபல்லவி.

சாதிமுறைதெரியாதவனுமக்குத
வாதவனென்றொருமாதமாய்த்தெரிந்த (சேதி)

சரணங்கள்.

ஏரைப்பிடித்துசற்றே உழுவான் - மன
தேங்கித்தள்ளாடியே விழுவான் - எங்கள்
சேரியைப்பார்த்தே யழுவான்-சிவ
சிதம்பரமென்றே தொழுவானையே. (சேதி)



நாத்துமுடியைக்கையி லெடுப்பான்-அதை
நடத்தெரியாமலே விழிப்பான்-இதைப்
பார்த்திடும்பேர்களைப் பழிப்பான்-அடே
பாவியென்றெங்களை அடிப்பானையே. (சேதி)

உதட்டையசைத்துமுணு முணுப்பான்-அவன்
ஊணுறக்கத்தையுந் துறப்பான்-நாங்கள்
அதட்டிப்பேசினு லடிப்பான்-பொன்
னம்பலவாணனைப் படிப்பானையே. (சேதி)

இராகம்-ஸமாச-ஆதிதாளம்.

பல்லவி.

அடக்கியாளுவையே-இவனை-அடக்கியாளுமையே.

அநுபல்லவி

அடக்கியாளுநீந்தக் குடுச்சுக்காரனிவனை
யடித்துப்பிடித்துங் கண்டித்துப்படபடத்து. (அடக்)

சரணங்கள்.

பொன்னம்பலவாணனென்றிவன் பேசி
பொழுதைப்போக்குவான்சாம்பலைப் பூசி
சன்னதங்கொண்டவனைப்போலவே வாசி
சண்டைபிடிக்கவருவானிவன் தோசி (அடக்)

பலித்துதையேயொருமந்திரம் போட்டான்
பழமையான இனிதங்களைக் கூட்டான்
குலத்தைக்கெடுக்கவந்திவனொரு கோட்டான்
கோபக்காரனெங்கள்வழிபட மாட்டான். (அடக்)

குளத்தைவெட்டச்சொல்லிக்கூலியைக் கொடுத்தான்.
கூட்டிக்கொண்டுபோய்ப்பயல்களைக் கொடுத்தான்
களத்தைச்சீக்கவேயெங்களை விடுத்தான்
காடுமண்டிவருஞ்சுடலையிற் படுத்தான். (அடக்)

வசனம்.

புலையர்களைப்பார்த்து வேதியர் சொல்லுவார்.

விருத்தம்.

காலமேவந்தானிங்கே கள்ளக்கும்பிடுகள்போட்டு
பாலனைப்போலேபேசிப் பசப்பினன்போடாவென்றேன்

வேலைசூழுலகிலந்தவினைபோலேகாணேன்
சிலமாஞ்சிதம்பரத்தைச் சேரவிடைகொடேனே.

வசனம்.

அந்தணர்சொன்னமொழியைப் புலையர்கள்கேட்டு மிகவுஞ்சந்தோஷங்கொண்டு சேரிவந்து சேர்ந்தபின் நந்தனாரெப்போதும் போலே அந்தணரிடத்தில் வருகிறார்.

அடாணா-ஆதிதாளம்.

நந்தனாரும்வந்தார்-வெகு
சொந்தமான தங்க-ளையரைக்காண (நந்த)

அங்கமுழுதிலும்நீறுபூசியே அரகரசிவசிவவென்றுபேசியே
சங்கையாருந்திருக்கைகள்வீசியே சாமிசாமிஎன்றுதன்னையேசியே
தில்லைச்சிதம்பரபள்ளுபாடியே தெரிசனங்காணேனென்றுவாடியே
அல்லலறுஞ்சிவலோகந்தேடியே அடையவேணுமென்றிங்கேநாடி
[யே. (நந்தனாரும்வந்தார்)

விருத்தம்.

சாதிகுலம்பிறப்பென்னுஞ் சந்தேகந்தெளியாதுதாழ்நிற்கும்
பேதகுணம்பற்றறுத்துப் பேரின்பவருட்சித்துப்பேணிக்காக்கும்
ஆதிபராபரமென்னுந்திருச்சிற்றம்பலத்தைக்காண எண்ணிக்க [றார்
வேதமொழிவிளங்கிவருந்திருவாயால் விடைகொடுத்தாளுவீரென்

இராகம்-உசேனி-ரூபகதாளம்.

தில்லையம்பலத்தலமொன் திருக்குதாம்-கண்டபேர்க்கு
சென்மமானபிணியைக் கருக்குதாம்.
உபருஞ்சிகரக்கும்பந் தெரியுதாம்-பார்த்தவர்க்கு
உள்ளங்குளிரக்கருணை புரியுதாம்
பண்ணவாயன்மாலுங் தேடுமாம்-தில்லைச்காட்டில்
பாம்பும்புலிக்குநிர்த்த மாடுமாம்
அரியபிரமனெழுத்தைத் தள்ளுமாம்-ஆரையுமது
வானந்தமுழுக்காட்டிக் கொள்ளுமாம்
போய்வருபவர்புண்ணிய சாலியாம்-தருமராஜன்
பிறத்தில்பழுதுவந்து கேலியாம்
உருவில்லாதகுருவொன் திருக்குதாம்-மூலக்கனலை
ஊதியெழுப்பிக்காணப் பெருக்குதாம்
உருவமாகிவெளியே வருகுதாம்-நான்மறைக்கு
முணர்வில்லாதகாட்சி தருகுதாம்



போய்வருகவுத்தாரந் தாருமே-பொன்னடித்தாள்
போற்றுவேன்கண்ணாலே பாருமே. (தில்லை)

வசனம்

சிதம்பரம் போவேனேயென்று அந்தணர்கேட்கும்படி நந்தனார்சொல்லுகின்றார்.

இராகம் - சுருட்டி, ஏகதாளம்.

தாதரிகிடதகசந்தரிகனதகநாதகிமிதகிடதகணந்தரி தினதத்திம் தகணந்தரிருந்தரிதந்த கணர்த னனந்தனனந்தனந்தணந்தசன தசதன தத்திண்ணகிட தகதோந் தத்திண்ணகிட தகதோந்தத்திண்ணகிடதகதோம்.

பல்லவி.

ஆடியபாதத்தைக்காணரே-பிறந்-தானந்தம்பூணரே.

அநுபல்லவி.

நாடுந்தைப்பூரணபூசத்திலே தில்லை
நாயகனார்குருவாரத்திலே மன்றுள். (ஆடிய)

சரணங்கள்.

பாசமறுத்துடல் வாசியொடுக்கி
பத்திபண்ணுங்காட்டில் பாம்புபுலிக்கி
ஆசையுடனேநல் லருளைப்பெருக்கி
அன்பர்களிக்கச் சிலம்புகுலுக்கி. (ஆடிய)

கொட்டமடிக்கும் புலன்தொழில்நீக்கி
கோடிகாலஞ்செய்த பாழ்வினையோக்கி
வெட்டவெளியிலே நெட்டிடத்தூக்கி
வேதம்பணிந்திடத் தென்முகம்நோக்கி. (ஆடிய)

சேணுஞ்சடைபுனல் பூமியில்சொட்ட
சேவித்தநாரதர் பாடியேகிட்ட
கோணங்கிழிந்தண்ட கோளமுமுட்ட
கோபாலகிருஷ்ணனு மத்தளங்கொட்ட. (ஆடிய)

வசனம்.

ஆணபடியால், நான்சிதம்பரம்போக உத்தரவு தரவேணுமென்று அந்தணரைத் திருநாளைப்போவார் கேட்கின்றார்.

இராகம் - தேசியதோடி, ஆதிதாளம்.

பல்லவி.

உத்தாரந்தாருமையே-எனக்
கொருவருமில்லைபரகதியடைய (உத்தாரந்)

வித்தைகள்கற்றதுமில்லை—யாதொரு
பத்தியிற்சென்று பரகதியடைய (உத்தாரம்)

குன்றம்போலொத்தனை கொடியேன்செய்தேன்
அத்தனையும்பொறுத் தாதரவாக (உத்தாரம்)

பெண்டுபிள்ளையென்று பேயனைப்போலவே
கண்டுகளித்துக் காலங்கழித்தேன் (உத்தாரம்)

தில்லைச்சிதம்பரத்தை தெரிசிக்குங்காலக
னெல்லையைக்காத்துக்கொண்டிருக்கிறேனையே. (உத்தாரம்)

## வசனம்.


நந்தனார் சிதம்பரம்போக உத்தாரவுகேட்டதனால், வேதியர் அடிமையைப் பார்த்துச்சொல்லுகின்றார்.

## விருத்தம்.

படிபுகழ்த்தில்லைநாதன் பத்தியேயுருவாய்வந்து
கடிநகராதனூரில் களித்திடும்நந்தனென்று
சிடுசிடுமூஞ்சிகாட்டிச் சிலவிடம்போலெநெஞ்சந்
துடிதுடித்திடவேஞாயந் தோசியும்பேசுவாரே.

இராகம் - தெண்டகம், ஆதிதாளம்.

சேறிமுற்றுஞ்சிவபத்திபண்ணும்படி
விட்டையாமடியிட்டையாம்
சேதிசொல்லவேணுமென்றிங்கேநீ
வந்தையோ அகமகிழ்ந்தையோ
காலைமாலையில்வந்துதெரிசனங்
காட்டுறாய்நிலைநாட்டுறாய்
கதறுணுமூர்க்குருவிகருடன்போ
லாகுமோவதிவேகமோ
அடிமைவேலைசெய்யுமுனக்கிந்தக்கொண்
டாட்டமோசெனக்கூட்டமோ
அடக்கியாளமாட்டேனோசிங்கக்குட்டி
யல்லவோ அவைச்சொல்லவோ
காளிபூசையவர்போடும்போதுநீ
கண்டித்தையாந்தெண்டித்தையாம்
கபடமெல்லாம்வெளிப்படுவதாகவழி
காட்டுறேனிதைநாட்டுறேன்.



8

வசனம்.

நந்தனார் சிதம்பரம்போகிறேனென்று சொல்லுவதால் அந்தணர் கண்டிக்கிறார்.

இராகம் - லாவணி, ஆதிதாளம்.

பல்லவி.

பறையாநீசிதம்பரமென்றுசொல்லப்
படுமோடாபோகப்படுமோடா-அடா (பறையா)

அறியாத்தனமினிசொன்னாலினிமே
லடிப்பேன்கூலியைப்பிடிப்பேன்பாவிப் (பறையா)

சிதம்பரமென்பதை விடு-சொல்லச்
சேரடியிலேவந்து படு-நாத்தைப்
பதத்திற்பிடுங்கி நடு-கறுப்
பண்ணனுக்கேபலி கொடு-அடா (பறையா)

எப்போதுமொருதடி பிடி-கையி
லெடுத்துக்கொண்டேதமுக் கடி-உள்ளங்
கற்பனையாய்ப்பள்ளு படி-கால்
நோகாமலேகாடியைக் குடி-அடா (பறையா)

சள்ளந்திருதற்குப் பாரு-உன்
கால்படும்பண்ணையில்வீற் றிரு-இது
சொன்னதுமில்லேயோஉன் குரு நீ
சுகமுடன்வாழ்ந்துகொண் டிரு-அடா (பறையா)

விருத்தம்.

ஓதியடிவீராயென்று உக்கிரமாடாவென்றும்
பதிபெறுங்கறுப்பாவென்றும் பாவாடைராயாவென்றுந்
துதிபெறுமிருளாவென்றுந் தொட்டியச்சின்னானென்று
மறுவொடுபிசிதம்வைத்து வருந்தியேவணங்குவாயே.

வசனம்.

அந்தணர் நந்தனரைக்கண்டித்து மறுபடியும் நல்லவார்த்தைகளால் சொல்லுகின்றார்.

இராகம்-லாவணி, ஆதிதாளம்.

பல்லவி.

நந்தா-வொருசேதிசொல்லுகிறேன்கே
ளிந்த-பங்குதோன்றியநாள்முதல்
சொந்த-முறியெழுதிக்கொடுத்தநீ
வந்த-பறையனல்லவோமறந்தாய். (நந்தா)



பாரு-இந்தவயல்பரப்பைவெட்டிப்
பேரு-அந்தக்கண்ணியைவெட்டிப்பணை
சேரு-பொருப்புள்ளவனுனையன்றி
யாரு-இதுவல்லவோகாரியம். (நந்தா)

வாடா-வுன்கூலியைமுழுதுந்தர
வோடாபண்ணைப்பறைச்சிகளுடனே
கூடடா-பழனங்கடோறும்நடப்
போடா-இதுவல்லவோபுண்ணியம். (நந்தா)

பாடு-உன்கறுப்புதெய்வத்தைக்கொண்
டாடு-கள்ளுசள்ளுடன்பூசைகள்
போடு-நெல்வளையும்படிக்குவழி
தேடு-புத்திசொன்னேனிதுதான். (நந்தா)

வசனம்.

வேதியர் நந்தனரைச் சிதம்பரம்போகாதேயென்று கண்டித்துச்சொல்லுகின்றார்.

இராகம் - நாதநாமக்கிரியை, ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரம்போகாதே-சொன்னேன்-சிதம்பரம்போகாதே

அநுபல்லவி.

சிதம்பரம்போனால் ஹிதம்பெறலாமென்று
சேதிசொல்லுறாய் சாதிக்கடுக்குமோ (சிதம்)

சரணங்கள்.

கள்ளகும்பிடுதனைப் போடாதே-உன்
கபடமெல்லாமிங்கே காட்டாதே
மெள்ளச்சொல்லடாமுழுமூடாகேழ
தள்ளிவிட்டுவுன்னைத்தகும்படிசெய்வேன் (சிதம்பரம்)

நாத்தைப்பிடுங்கிகண்ணி நடவேணும்-அந்த
நஞ்சைவயலைச்சற்றே யுழவேணும்
பார்த்துப்பரம்படித்துப் பழுதுவராமல்
பாயுஞ்சலம்விட்டுப் பார்த்திடுவாய்நீ (சிதம்பரம்)

அடிக்கடிமறுத்துநான் சொல்லவோ-நீ
அடிமைக்காரப்பய லல்லவோ
எடுத்துக்காட்டுவே னிருக்குதுசாதனம்
தடுத்துப்பேசினால் தாடையிலடிப்பேன் (சிதம்பரம்)

வசனம்.

அந்தணர் கண்டித்துச்சொன்னதால் நந்தனார் துயரமடைந்து சேரியில்வந்து சிவனைநினைந்து பத்திபுரிந்து கொண்டாடுகிறார்.

இராகம் செஞ்சுருட்டி, ரூபகதாளம்.

பல்லவி.

பத்திபண்ணிக்கொண்டிருந்தால்-முத்திபெறலாமே.

அநுபல்லவி.

எத்திசையுமெவ்வுயிர்க்கு மவ்வுயிராய்நிறைந்திருக்கும்
வஸ்துவென்று அம்பலவன் மலரடிதினந்தோறும் (பத்தி)

சரணங்கள்.

கட்டழகிச்சாரனிடங்காதலது போலே
கடிகிவருங்கன்றருகில்லாபிலையது போலே
கண்டவரைத்துணையுமில்லாப்பேதையொருக் காலே
காவலனார்பதம்வருகில்களிப்பதனைப் போலே
கண்டுமுறைகிழகலக்கண்டறியார்மதுமயக்கங்
கற்பனையாமிப்பிரபஞ்சசொற்பனம்போலொப்பிருக்கும். (பத்தி)

தாயடிக்கில்பால்குடிக்கத்தழுதல்திருஷ் டாந்தம்
சடலம்பொறுககாமல்துயர்தருகிறு மேகாந்தம்
ஆயிருந்துவழுத்தியிந்தமாயையுப சாந்தம்
ஆகுமென்றுசாதனங்கள்வழங்குது வேதாந்தம்
காயஞ்சனிக்காதிருக்கக்கண்டுகொள்ளவேணுமென்றால்
காசுபணம்பாசமதுமாசறவே நேசமுடன். (பத்தி)

பச்சைமரத்தாணிபோலேபரிந்துமனம் நாடி
பாலகிருஷ்ணன்பணிபொன்னம்பலவானைக்கொண்டாடி
இச்சையொழியும்புலன்களைந்துமிக வாடி
ஏகாந்தமானபரிபூரணத்தைத் தேடி
அச்சமறத்திருவிழியிலானந்தநீர்கரை புரள
அரனேதிரிபுரனேகங்காதரனேபராபரனே யென்று. (பத்தி)

வசனம்.

சேரியில் சிவபக்தி பண்ணிக் கொண்டிருக்கின்ற பன்னிரு பேர்களுடன் நந்தனாருமிருந்து பக்திபண்ணும்நாளையில் ஒருநாள் நந்தனார் பன்னிருவருடைய பக்திதிடப்பட்டதோ இல்லையோவென்று அறியப்பரிட்சைபார்த்தார்.



இருச்சொல் அலங்காரம்.

நந்தனார் - சிவதலத்தில் சிதம்பரமேகாட்சி யென்றார்
அவர்கள் - அவித்தைகளைத் தூண்டிநிற்றலேகாட்சி யென்றார்
நந்தனார் - சிற்சபையின்மகிமையென்னசெப்புவீ ரென்றார்
அவர்கள் - அச்சுதனுங்காணாதவானந்த மென்றார்
நந்தனார் - ஆசையினாலென்ன என்னபலனாகு மென்றார்
அவர்கள் - நாக்கதினாலேசிவநாமம் நவிலு மென்றார்
நந்தனார் - கற்றதனாலென்ன பலன்கண்டா ரென்றார்
அவர்கள் - கொற்றடிமைக்கார பலன்கொண்டா ரென்றார்
நந்தனார் - அம்பலத்தை திரைபோடத் தொடங்கினாரே
அவர்கள் - பம்புவித்தை மாயைக்கு ளடங்கினாரே
நந்தனார்-மனந்திருத்திக்கொண்டார்க்குவாரதொன்றில்லையென்றார்
அவர்கள் - கனவருத்தமுண்டாக்குங் காராதுதொல்லை யென்றார்
நந்தனார் - சாதியிலேயெளியவன் தானறிவேனோ வென்றார்
அவர்கள் - ஆதியிலேபேதமில்லை அறிவீரே யென்றார்
நந்தனார் - ஞானமில்லாதவன் முத்திநாடா ரென்றார்
அவர்கள் - ஊனமில்லாச்சிவபக்தி தேடா ரென்றார்
நந்தனார் - மதியில்லாதவர்களுக்கெல்லாம் விதியே தென்றார்
அவர்கள் - துதியில்லாதவர்க்கெல்லாங் கதியே தென்றார்
நந்தனார் - பவக்கடலைக்குளப்படிபோல் பகுப்பா ரென்றார்
அவர்கள் - சுகக்கடலிலிளைப்பாறி சுகிப்பாரே யென்றார்
நந்தனார் - பார்ப்பானுத்தரங்கொடுப்பானோ வென்றார்
அவர்கள் - காப்பாற்றுங்கடவுளுக் கைப்பார மென்றார்
நந்தனார் - படித்தபடிகாட்டிவிட்டேன் பலமாச்சு தென்றார்
அவர்கள் - அடிகதப்பால்போட்டுவிட்டீரா ராலே யென்றார்
நந்தனார் - அங்கேயேன்நீங்கள் வல்லையோ வென்றார்
அவர்கள் - இங்கையேனது இல்லையா வென்றார்
நந்தனார் - எங்கும்நிறைந்த பூரணங்க ளென்றார்
அவர்கள் - இங்குமிருந்து வியற்றுங்கா ணென்றார்.

வசனம்.

இப்படி யிருக்குநாளில் ஒருநாள் நந்தனார் தனக்குத்தானே பரவசமாய் ஆனந்தக்கண்ணீர்பெருகிப் பாடுவார்.

இராகம் - செஞ்சுருட்டி, ஆதிதாளம்.

கண்ணிகள்.

பல்லவி.

பாடுவாய்மனமே - சிவனைக்கொண் - டாடுவாய்தினமே,

இந்திரன்முதலிய இமையவர்கதிகார
நந்தியின்மீதேறும் நம்பன்பதம்போற்றி (பாடுவாய்)

ஆலந்தனையுண் டமரரைக்காத்ததிரு
நீலகண்டன்கழல்பெற நெறியுடன்போற்றி (பாடுவாய்)

சீலமாதவர் சித்தத்தினின்றுடுஞ்
சூலபாணியனெனுஞ்சுயம்புதாள்போற்றி (பாடுவாய்)

மோகமாந்துன்பத்தில் மூழ்கிக்கெடாமல்
ஆகமமுறையிடும் அந்திவண்ணனைப்போற்றி (பாடுவாய்)

பஞ்சாக்ஷரந்தன்னைப் பத்தியாயுருவேற்றி
மெஞ்ஞானம்பெற்றுய்யமே லோனைநீபோற்றி (பாடுவாய்)

இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரமேநினை மனமே—முத்தி-பதம்பெறலாகும்முனமே.

அநுபல்லவி.

சதம்சதம்மெனும்பொருள் பதம்பதம்மய மருள்
சமரசநடம்புரிசாமிசிதம்பரநிமலன் திருவுருநீகொள்ளரகர. (சிதம்)

சரணங்கள்.

ஒழியாக்கவலை கொண்டு விழலாய்-யானும்
உண்மையில்லாவிட்டை நிழலாய்
தழுவாதிருந்ததில்லைசலனமில்மேல் வீட்டை
சார்ந்தாலல்லோநல்லசாபல்யமாம் பாட்டை
சந்ததமும்பெற பந்தமுமேயற
எந்தவினைத்திற முந்தாரம்முற. (சிதம்)

தேகமெடுத்தவருமை யறியாய்-மோசத்
தெரிவையர்வலைச்சிக்கி முறியாய
சாகமட்டுஞ்சம்சாரமே மேலிட்டு
சலியாமலேயுழைத்துச்சண்டாளமாக் தட்டு
சம்பாத்தியமது வம்பாகும்விதி
நம்பாதித்ததி தெம்பாயதிபதி. (சிதம்)

உனக்குள்ளேயுணர்வாய்நீமோனம்-உண்மை
ஓம்வழிகாட்டுமே ஞானம்
தனக்குச்சிதம்பரஞ்சார்ந்தாலே தன்மயம்
சத்தியமாய்க்கூட்டும் சாம்பிராச்சிய சின்மயம்



சரிவரசிவகுரு பரமயு… (சிதம்)
முருவெளியெனுமொரு பொருளதில்

துக்கடா.

ஹர ஹர ஹர ஹர மகாதேவா
அம்பிகைமகிழ்பொன்னம்பலவா.

வசனம்.

நந்தனர் சிலநாளானபின்பு அடிமைகொண்ட அந்தணை
தில்வந்து சிதம்பரம்போக மிகவும் வருந்தி வுத்தரவுகேட்

இது-அறுசீரடி-விருத்தம்.

வேதியரே பெரியவரே நல்லவரே நான்கடையன் விண்ணோர்
மெய்ச்சும், சாதியரே பலகலையுங் கற்றுணர்ந்து புரையில்லாத் தவ
மேசெய்யும், போதியரே பத்தியில்லா நான்புலைய னேதறியேன்
புண்யமூர்த்தி, ஆதிகுரு சிதம்பரத்தைக் காணவென்றே யாசை
கொண்டே னனுப்புவீரே,

இராகம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்.

பல்லவி.

தில்லைச்சிதம்பரத்தை யொருதரமாகிலுந்
தெரிசித்துவாவென் றுத்தாரந்தாருமையே

அநுபல்லவி.

தில்லைச்சிதம்பரத்தைக் கண்டால்பிறவிப்பிணி
இல்லையென்றுபெரியோர்சொல்லக்கேட்டிருக்கிறேன் (தில்)

அல்லலறுக்குந்திரு வம்பலநாயகன்
அல்லும்பகலுமாடி யானந்தம்பெருகிய [illegible]

ஆதிமுதலாயென்னை யடிமைகொண்டதல்லவோ
வேதகுலமேயெந்தன் மீதில்தயவுசெய்து [illegible]

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

தெரிசிக்கவேணுஞ்-சிதம்பரத்தைத்-தெரிசிக்கவேணும்

அநுபல்லவி.

தெரிசித்தவுடனுடல் கரிசைப்பிணிகளறும்
பரிசுத்தமாகுமுன் மறுசுத்தமாறவே (தெரிசிக்க)

சரணங்கள்.

பத்தர்பணியுந்திருக் கூத்தன்சந்நிதிதொழு
தேத்திப்பிறவிதுய ராத்தியெப்போதும் (தெரிசிக்க)

வேதனையடியவர் போதனைமுனிவர்கள்
நாதனைகாங்குந்தி காதரவாக (தெரிசிக்க)

நசனைபுலியூரில் வாசனைகனகச
பேசனையென்றுநட ராஜனைப்போற்றி (தெரிசிக்க)

கதைநினையகல்பவர் வாமத்தினின்றுசிவ
நாமத்தைச்சொல்லியர்த்த சாமத்தில்வந்து (தெரிசிக்க)

நாலம்புகழுமவன் மாலையணியுங்கோ
பாலகிருஷ்ணன்தொழுஞ் சீலபொற்பாதத்தை. (தெரிசிக்க)

---

வசனம்.

நந்தனர் தெரிசனஞ்செய்ய உத்தாரங்கேட்க அத்தணர்சொல்லுகின்றார்.

எண்சீரடியாசிரியவிருத்தம்.

புத்திசொல்லிக்கேளாதமூடாவுந்தன்
புரட்டெல்லாநானறிவேன்போடாபோடா
பத்தியென்றுஞ்சித்தியென்றும்பறையர்க்கேது
பார்ப்பாரதெய்வமதுபாலிக்காது
குற்றமுண்டுன்சாதியிலேவழக்கமில்லாக்
கொள்கையதுசேரியிலேகூடாதப்பா
பித்தமதுகொண்டவன்போலிங்கேவந்து
பேசாதேபோபோவென்றேசுவானே.

இராகம் - அசாவேரி, ஆதிதாளம்

பல்லவி.

சிதம்பரதெரிசனமா - நீயதைச் - சிந்திக்கலாமாபறையா.

சரணங்கள்.

சிதம்பரதெரிசனஞ்-சதுர்மறையோர்கள்
செய்வதுஞாயம்நீ-சொல்வதுமாயம்
சொல்லாதே-இங்கே-நில்லாதே
சேரிக்குப்போடா-நானேக்குவாடா (சிதம்)

சனகமாமுனி-யோகிகள்தேடிய
கனகசபேசனைக்-கண்டறிவாயோ
பேசாதே-கை-வீசாதே
வீரனைத்தொழடா-ஏரியையுழடா (சிதம்)



தவமுடையோர்கள்-தரிக்குமந்திரஞ்
சிவபதமென்று-சேவிக்கலாமா
ஆகாது-வினை-போகாது
விரைதெளியன்றோ-அறுதலிமகனே. (சிதம்)

வசனம்.

உழுது-சேறுபண்ணி - பரம்படித்து - விரைதெளித்து-நாற்றுப்பறித்து-நடவுநட்டு-மடைதிறந்து- மடைகோலி-களைபிடுங்கி - காத்திருந்து-பதத்திலறுத்து-கட்டியடித்து-நிரம்பிய பட்டையைக்-காப்பதுமில்லை-இராக்காலங்களில்-பந்தம் பிடித்து-தடிஎடுத்து-கொம்புதம்பட்டமூழங்கி-கோலாகலமாகி - நாலுபறையரோடுங்கூடி -வரப்பைவிட்டேரைச்சுற்றிவந்து காக்கும்படி கிராமத்தாரிட்டகாவல்காப்பதுமில்லை,உனக்குவேண்டிய ஊணுறக்கம்முதலாகிய தேசதருமம் மறந்து எப்போதும்தில்லையம்பலம் திருச்சிற்றம்பலம் சிதம்பரம் என்று-பித்துப்பிடித்துத்தாயைவிட்ட குழந்தைபோல வாய்விட்டலறிப் பேய்பிடித்தவன்போல மதிமயங்கி உடல்கலங்கி எல்லோரும்பழிக்கக் கீழேபுரண்டழுது தத்தளித்தென்று தள்ளாடிய காரணமென்னவென்று அந்தணர் நந்தனரைக்கேட்கின்றார்.

இராகம்-சூரியகாந்தம், ஆதிதாளம்.

பல்லவி.

நந்தாவுனக்கிந்தபிர்மை வந்தகாரணம் நானறிந்திடச் சொல்லும்.

அநுபல்லவி.


அந்தரங்கமுள்ள சொந்தப்பறையனை
யன்றியிருப்பதுபோய் சண்டைபிடிக்கவந்தாய் (நந்தா)

சரணங்கள்.

சாதிமுறைமைதுறந்தாய்-தில்லைச்
சபாபதியைநினைந்தாய்
சூதுக்காரபறையருடன்கூடிச்
சும்மாவிருப்பது-எம்மாத்திரம்நான் (நந்தா)

குலத்திலில்லாதவழக்கம்-நீயதைக்
கொண்டாடுகிறமுழக்கம்
வெளுத்ததினுலென்ன எருமைச்சாணியது
மேனியிலணிவாரோ-வையகந்தனில் (நந்தா)

திருட்டுப்புரட்டுமறியாய் பொல்லாத்
தீங்குவார்த்தையுரையாய்





முரட்டுத்தனத்தையென்முன்னேகாட்டி
விரட்டிப்பேசுறாய்-வெறிமயக்கமோஅட. (நந்தா)

வசனம்

வேதியர் நந்தனாரைப்பார்த்துச் சிதம்பரப்பிரமைவந்தகாரண மென்னவென்று கேட்டபின் நந்தனார் வேதியருக்குச்சொல்லுவார்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

மனங்கண்டவிடமெல்லாம்போகாமலாணை யிட்டுமறித்துவாங்கி, அனல்கண்டமெழுகதுபோ லெனதுள்ளந் தனதாகவுருகிச்சாய்க்கும், புனல்கொண்டவேணியனைப் புண்ணியனைப்புராந்தகனைப்போற்றிசெய்யக், கனங்கொண்டதில்லைநகர் போய்வருவேன் கருணைவழி காட்டுவீரே.

வசனம்.

நந்தனார் வேதியரைப்பார்த்து உத்தாரங்கேட்க அந்தணர் சொல்லுகின்றார்.

இராகம்-சாவேரி-ரூபகதாளம்.

நட்டநடவுகளையும்பொட்டவெளியைத்தொட்டபோதிலும் (நட்)
கெட்டமதியைவிட்டுவிட்டுகேளடாபண்ணையாளடா (நட்)
இட்டநெருங்கும்பண்ணையுன்கால்பட்டதினால்பசுமைகொண்டு. (ந)

விருத்தம்.

கதிரொருமுழமேனீளுங்கட்டு முக்கலமேகாணும்
துதிபெறுநந்தாவுன்கைதொட்டதேதங்கமாகும்
பதிதனிற்பெருமைசொல்லும் பறையனையிருந்தார்தில்லைச்
சிதம்பரப்பித்தேன் கொண்டாய்செய்தொழிலேதென்றாரே.

வசனம்.

நந்தனாருக்குச் சிதம்பரப்பித்து தெளியாமையால் வேதியர் என்னசெய்யப் போகிறேனென்று துயரமுற்று நந்தனாரைப்பார்த்துப் புலம்புவார்.

இராகம்-தனசரி-ஆதிதாளம்.

பல்லவி.

பித்தனாய்ப்போனதென்ன-நந்தா (பித்த)

அனுபல்லவி.

எத்தனையோபுத்திகளெடுத்துப்படித்தும் (பித்த)

சரணங்கள்.

சித்தமிப்படி செய்ததாரோ
பத்துதலில்லாமலே பண்ணியபோரரோ

பத்தியென்றுபே ரிட்டதாரோ
நித்தமுமிப்படியே நிலையிட்டதாரோ (பித்த)

எத்திசையும்புகழ் பெற்றிருந்தும்
வித்தைகளனேகம் விளம்பத்தெரிந்தும்
பத்தியோடுசால மறிந்தும்
கத்தனென்றுபேரிட்டு நாளுனக்கிருந்தும். (பித்த)

---

வசனம்.

மனதிற் றுயரமுற்ற வேதியரை நந்தனார் மிகவும் வணங்கிச் சொல்லுகின்றார்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

பித்தமது தெளிந்துவிடமருந்துண்டு தில்லைவனம் பணிச்சென்று
சத்திசிவகாமிப்பெண் சந்நிதியினேராகித் தலைவணங்கி
தித்தியென்றுநடநமிடுந் திருக்கோலங்கண்குளிரத் தெரிசித்தால்
பித்தமது தெளிந்துவிடும்வேதாந்த மழைசொரியும் பெரியோரே.

இராகம்-செங்கலா-ரூபகதாளம்.

பல்லவி.

பித்தந்தெளியமருந்தொன்றிருக்குது - பேரின்பமன்றுள்ளே.

அநுபல்லவி.

மற்றமருந்துகள் தின்றாலுமுள்ளுக்குவல்லேவல்லே-ஐயே அடிமை
(பித்தந்தெளிய)

சரணங்கள்.

பாம்பும்புலியுமெய்ப்பாடுபட்டுத்தேடி பார்த்துபயிரிட்டது
பாரளந்ததிருமாயனும்வேதனும்பார்த்துக்களித்ததுண்டு
பார்ப்பதியென்றொருசீமாட்டியதில்பாதியைத்தின்றதுண்டு-இன்
னம்-பாதியிருக்குபறையாநீயும்போய்ப்- பாரென்றுத்தாரந்தாருந்
[தாரும் (பித்தந்தெளிய)

பத்துத்திசையும்பரவிப்படர்ந்தாலும் பார்த்துப்பிடியாரே
தத்திக்குதிக்குந்தாளங்கள்போடுந் தண்டைச்சிலம்புகொஞ்சுந்
தித்திக்குந்தேனேசெங்கரும்போ நல்லசுத்தமுடையார்க்கே-என்
சித்தத்தைக்கட்டியிழுக்குது அங்கே-சென்றால்போதுங்கண்டால்
[தீரும் (பித்தந்தெளி

பேரைச்சொன்னாலுமிப்பாவந்தொலையு மூழ்வினையூடறுக்கும்
பேரைக்கொண்டாடிப்புலம்புகிறார் வெகுபேர்களுக்குப்பிழைப்பு



சாருநரைதிரைதீருமருந்துச் சாதியைப்பாராது-இன்னந்
தீராதநோய்கள்படைத்தவெனக்குத் தீருந்தீருமையே அடிமை
(பித்தந்தெளிய)

இராகம் - செஞ்சுருட்டி, ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரம்போகாம லிருப்பேனோ
சென்மத்தைவீணாக்கிக் கெடுப்பேனோ (சிதம்பரம்)

பத்தியுமனமும் பொருந்தினதங்கே
சத்தியஞ்சொன்னேன் சடலமுமிங்கே (சிதம்பர)

ஆசையுநேசமு மானந்தமங்கே
பேசலும்பாசமும் பிதற்றலுமிங்கே (சிதம்பர)

வசனம்.

இப்படி நந்தனார்சொல்ல வேதியர்மூர்ச்சையடைந்து விழுந்து தெளிந்து எழுந்துசொல்லுவார்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நாற்பதுவேலிபூமி நடவுநட்டாகவில்லை
பார்ப்பதுமில்லைசைவப் பழமதுதின்றாய்ப்பண்ணை
காப்பதுமில்லையுன்னைக் கைவிடமனதுவல்லை
சேர்ப்பதாலாவதில்லைச் சேரியிற்றொலைந்துபோடா.

வசனம்.

என்று வேதியர்சொல்லிய உத்தாரப்படி சேரியில் நந்தனார் வந்துபத்திபுரியும் பன்னிரண்டுபேர்களைப் பார்த்துச்சொல்லுவார்.

இராகம்-மாஞ்சை-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஆசைநேசராகுந் தோழரேகேளுங்கள்
பேசுந்தெய்வங்களுண்டோ யீசனல்லால்நமக்கு (ஆசை)

ஆயன்மாயன் அன்றடிமுடிகாணாத
நேயனழலுருவாய் நின்றநின்மலனல்லால் (ஆசை)

மண்ணாய்விண்ணாய் மற்றுளப்பொருள்களாய்
எள்ளுளெண்ணெய்போ லிருக்குமீசனல்லால் (ஆசை)

அருவாயுருவா யண்டபகிரண்டமெங்கும்
பரமாய்நின்றதெந்தப் பராபரத்தையல்லால். (ஆசை)

வசனம்.

என்று நந்தனார் சொல்லிப்பின்னும் ஆநந்தக்கூத்தாடுவார்.

இராகம்-தந்யாசி-திரிபுடைதாளம்.

பல்லவி.

ஆநந்தக்கூத்தாடினார்-ஆநந்தக்கூத்தாடினார்
ஆநந்தக்கூத்தாடினார்.

அநுபல்லவி.

வானுந்துதிதேவர்முனிவர்ஜயஜயவென்று
வாழ்த்தும்பிரானடிகள் வாய்ப்பதெப்போதோவென்று (ஆநந்)

சரணங்கள்.

மாயவலைக்குட் பட்டு-அதிலெப்போதும்
மாளாத்துயரப் பட்டு
மாயுமுன்னாகவந்து வலியவாண்டருண்மூர்த்தி
நாயேன்களிக்கவென்முன் னுடுவரென்றேசாத்தி (ஆநந்)

கவலைப்படாதே நெஞ்சமே-காலன்கைபாசம்
கண்முன்வராதே அஞ்சமே
தவநிலையையுணர்ந்த சன்மார்க்கர்தமக்கன்று
தற்பதத்தைக்காட்டினோன் தனைக்காணுவேனென்று (ஆந)

காயமிதுவுஞ் சதமா-அன்றியுற்பவங்
காண்பதொவ்வொரு விதமா
ஆயுமெழுபிறப்பா யவதரித்தாலுண்டென்றும்
தூயபதத்தாலந்தத் துகளற்றிப்பேனென்றும் (ஆநந்)

வசனம்.

இவ்விதமாகப் பன்னிரண்டுபேர்களையும் வேலைசெய்யவொட்டாமல், தன்சமீபத்தில் நிற்கவைத்துக்கொண்டு போதித்திருப்பதைவேதியன் கேள்வியுற்று நந்தனைரைச்சீறிக் கடுங்கோபஞ்செய்ய நந்தனார் வேதியருக்குச் சொல்லுகின்றார்.

ஸ்ரீராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஏதுக்கென்மீது இத்தனைபேதகம்
எண்ணுவனோ தோதகம்

அநுபல்லவி.

காதகராம்மனக் கசடர்சொன்ன சொல்லை
சாதனைசெய்து சாதித்தீர்பிழையொன் றில்லை (ஏது)

சரணங்கள்.

நான்உனக்குப் பண்டு-சாசனஞ்செய்து
நலமாய்த்தந்த துண்டு



தோன்றலேநீசொல்லுஞ் சொற்படிச் செய்கிறேன்
பான்மையாகநித்தம் பத்தியாய் உய்கிறேன் (ஏது)

காசளவு நன்மை-செய்தோரை யொரு
காலும்மறவாத் தன்மை

தாசனுக்கெப்போது முண்டுதாமே கண்டு
யோசிக்கப்போகிறீர் இனிமேல் நான்செய்ததொண்டு (ஏது)

ஏழைநான் தானே-சூதும்வாதும்
ஏதொன்றறி யேனே

மேழியுடனேயொரு மேதிகாளைக ளெங்கே
ழையனுக்கும் உழுகயிறுங்கொடுப்பீ ரிங்கே (ஏது)

## நந்தனார்-ஏருழுதல்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

வணக்கமாய்ச்சொல்லும் வார்த்தையுணர்ந்த
வஞ்சனையிலாதவேதியன்றன்
கணக்கிலாத்தனது பண்ணையாள்வசத்திற்
கைப்பிடியாகவேதந்து
பிணக்கிலானிவன்சொற் படியெலாஞ்செய்வான்
பின்னிடான் அழைத்துப்போவென்ன
இணக்கமாய்க்கொண்டு போயினர்நந்தன்
ஏர்த்தொழில்மிகப்புரிந்தனனே.

இராகம்-சஹானா, ரூபகசாப்புதாளம்.

பல்லவி.

பத்தியாகஆண்டைசொற்படிசெய்தானந்தன்பலருடன்கூடிமிகக்

அநுபல்லவி.

கர்த்தனைசித்தங்களித்துக் கருதித்தவன்
கமலபாதத்தை னாடி-மெத்தக்
காதலாகவேகொண் டாடி
மனம் நீடி (பத்தி)

சரணங்கள்.

நீருள்ளஆதனூர்நஞ்சை புஞ்சைகளை
நித்தமுமேர்கொண்டு பழுது-அறச்
சுத்தமதாகவே யுழுது
காலைப் பொழுது (பத்தி)

கறுப்பு வெளுப்பு சிவப்பு நிறமுள்ளக்
 காளைகளைக்கட்டிப் பூட்டி-பொற்
 காறுவொன்றதிலே பாட்டி
 ஏரோட்டி (பத்தி)

கந்தன்கறுப்பன்கடம்ப னிடும்பன்
 கரியனவன் தம்பி பெரியவன்-சின்னக்
 காத்தானவன்மகன் சொரியன்
 குள்ள நரியன் (பத்தி)

சீரகச்சப்பா சிறுகருடன் சம்பா
 சிறந்தமணக்கத்தைத நட்டு-சம்பு
 சோத்துவரையு மிட்டு
 பயிரிட்டு (பத்தி)

வசனம்.

இவ்விதமாய் ஏர்த்தொழில் புரிந்துகொண்டிருந்த நந்தனார் இனிமேல் சிதம்பரம்போவேன் போகாவிடில் பிராணனை விடுவேன் அன்றியும், சேரியில் வரமாட்டேனென்று சொல்லிக் கொண்டு வேதியர் பால்சென்று தலை வணங்கிக் கரங்குவிந்து மனந்துடித்துக் கண்டித்துச் சிதம்பரம்போக உத்தாரங்கேட்கின்றார்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

பொய்ச்சடலம் புழுக்கூடோன் பதுவாசற்கூற்பையைப் போற்றிசெய்யும், தூர்சனிவனென்றெண்ணித் தள்ளாமனன்னெறியைச்சொல்லவேணும், பச்சைமிருந்தொடியழகி சிவகாமிமாது பங்கன் பாதங்காண, இச்சைமிருந்திருக்குதையே அம்பலத்தைக் கண்டுகளித்திறைஞ்சுவேனே.

இராகம்-சாவேரி-ரூபகதாளம்.

பல்லவி.

பொன்னம்பலவாணனடிதொழுவா-ரொருவரன்றிப்
பிறவிக்கடலிடையில் கிடந்தழுவார்.

அநுபல்லவி.

இன்னும்பலதெய்வங்களுமிருக்கு-தெனக்கிவர்
போலவேஇல்லைதயவில்லை ஏழையிடத்திலிருந்தருள்செய்திடும்

சரணங்கள்.

வேதமொருநான்குமறியாதபரம்பொருளாகினும்
 வேண்டும்பதஞ்சலிக்காகவேதில்லைப்பதிவந்து



பாதச்சிலம்பசையமணிகுலுங்கப்பிறையிலங்க
 பணிபடமாடவேசடையாடவேபரமானந்தக்கூத்தாடிய (பொ)

உலகந்தனில்சகனமதுபோலெங்கிலும்பரிபூரண
 முறுவற்றதுமருவற்றதுகுறையற்றிடுஞ்செல்வங்
கலியற்றவர்மதமற்றவர்விடையத்தினிலுறவற்றிட
 கலைகற்றவர்வலயக்கவரிதயத்தினில்நடனமாடிய (பொ)

இரவுபகல்கருமங்களிலிழுக்கும்பொறிகணங்களதை
 இழுத்துவசப்படுத்தும்வகையெனக்குத்தெரியாது
பரவிவரும்ராகாதிற்சரணடங்கிமனதொடுங்கிவழி
 பார்க்குமிடமார்க்குமரிதாக்கும்பாலகிருஷ்ணன்தொழும். (பொ)

---

வசனம்.

இவ்வகையாய்ச் சொல்லும் நந்தனரைப்பார்த்து வேதியர் சொல்லுகின்றார்.

சுலோகம்.

மெள்ளப்பேசிமெழுகிறாயனுதினமூடாவுனக்கித்தனை
கள்ளக்கும்பிடாலாவதென்னபலனோநாட்டுப்பசாசல்லவோ
துள்ளித்துள்ளிதுடிக்கிறாய்சிவபதஞ்சொல்லாதுன்சாதியில்
எள்ளுங்கொள்ளையிம்மாடுவந்துதொடாதேகுப்படிசெல்லடா.

வசனம்.

இப்படிச்சொல்லியவேதியருடனே நந்தனார் தனக்குத்தெரிந் வித்தைகளை அத்தருணத்தில் சொல்லுக்காட்டுவார்.

முன்நந்தனார், பின்வேதியருமாகச் சொல்லிக்கொள்ளும்

எட்டிக்குப்போட்டியான

இருச்சொல் அலங்காரம்.

நந்தனார்-தில்லையைப்பார்க்கவல்லையோ வென்று
வேதியர்-கொள்ளையில்முளைகாயில்லையோ வென்று
நந்தனார்-கள்ளம்போனதுள்ளதுகாணு மென்று
வேதியர்-வெள்ளம்போனதுள்ளதுவிளையு மென்று
நந்தனார்-திருச்சிற்றபலங்கண்டால்தேகங்களிக்கு மென்று
வேதியர்-பொரிச்சக்குழம்புகொண்டால்தேகம்பெருக்கு மென்று
நந்தனார்-அரகராவென்றால்பாவம்போ மென்று
வேதியர்-பறையனைக்கண்டால்பாவமா மென்று
நந்தனார்-வெட்டவெளியிலேமனமுட்டிப்பாரு மென்று
வேதியர்-பொட்டவெளியிலேகுழிவெட்டிப்பாரு மென்று

நந்தனார்-எனக்குஊறியஞானமாரியேமதி யென்றார்
வேதியர்-உனக்குநாறியபறைபர்சேரியேகதி யென்றார்
நந்தனார்-சுத்தாவேயென்னுள்ளம்பெற்று றென்றார்
வேதியர்-சுத்தாமையக்கினியிற்பற்று தென்றார்
நந்தனார்-மறையோருக்கெப்போதும்வாயிலேசர்க்க மென்றார்
வேதியர்-பறையருக்கெப்போதுஞ்சேரியேசொர்க்க மென்றார்
நந்தனார்-கொள்ளித்தேள்போலென்னைக்கொட்டாதே யென்றார்
வேதியர்-அள்ளித்தந்தேனென்னைத்திட்டாதே யென்றார்
நந்தனார்-கடுமையாய்வந்துநலைப்படுத்துவதே னென்றார்
வேதியர்-அடிமையாய்வந்துஅலைப்படுத்துவதே னென்றார்
நந்தனார்-தில்லையோடென்னைச்சேரேனோ வென்றார்
வேதியர்-எல்லையோடுமுன்னைப்பாரேனோ வென்றார்
நந்தனார்-திருவாதிரைவருகுதுபோவேனே யென்றார்
வேதியர்-பறவாதிருபறையாபோகாதே யென்றார்
நந்தனார்-தெரியாதமெள்ளப்போவேனே யென்றார்
வேதியர்-மரியாதையல்லப்போகாதே யென்றார்
நந்தனார்-ஆனையைவிட்டுவழிகாட்டுப்பெரியோரே யென்றார்
வேதியர்-பிராணியைவெட்டும்பழிகாட்டும்புலையரே யென்றார்
நந்தனார்-ஆடிப்பாடிப்படிப்பே னென்றார்
வேதியர்-தேடித்தேடிப்பிடிப்பே னென்றார்
நந்தனார்-தில்லையிலேகலங்காமல்நாடுவே னென்றார்
வேதியர்-கொல்லையிலேவிலங்காகப்போடுவே னென்றார்
நந்தனார்-சிந்தைநொந்துதவிப்பேனே யென்றார்
வேதியர்-வந்துவந்துஅலப்பாதே யென்றார்
நந்தனார்-செஞ்சினால்நெஞ்சமுருகாதோ வென்றார்
வேதியர்-அஞ்சினாற்பஞ்சம்வருகாதோ வென்றார்
நந்தனார்-சிதம்பரம்போகவுத்தாரந்தாரு மென்றார்
வேதியர்-இதப்பெறலாமோகத்தாதேபோது மென்றார்
நந்தனார்-சீக்கிரமாய்ப்போவே னென்றார்
வேதியர்-போக்கிரியாய்ப்போவா யென்றார்
நந்தனார்-அக்னிதஞ்செய்யே னென்றார்
வேதியர்-சொன்னதுதவறே னென்றார்
நந்தனார்-எங்கள்சாதிக்குயென்னவழி யென்றார்
வேதியர்-உங்கள்சாதிக்குஇந்தவழி யென்றார்
நந்தனார்-உற்றதுஒது மென்றார்
வேதியர்-பெற்றதுபோது மென்றார்
நந்தனார்-பறையனாய்ப்பிறந்தேன்தலையெழுத்திது வென்றார்



வேதியர்-பறையராய்ப்பிறந்துங்கள்வருத்தமது வென்றார்
நந்தனார்-வாய்க்காதவெனக்குவழிசொல்லு வீரே
வேதியர்-காய்க்காதமரத்திற்கல்லெறி யாரே
நந்தனார்-எப்போதுமிப்படிச்செய்வதே னென்றார்
வேதியர்-அப்போதுமிப்படிச்செய்ததே னென்றார்
நந்தனார்-உலகமனைத்துங்கடவுளாய்நிறைந்த தேன்
வேதியர்-பலகலைகற்றும்பறையனாய்ப்பிறந்த தேன்
நந்தனார்-பழுதானசென்மம்படைத்தேனே யென்றார்
வேதியர்-அழுதாலுங்கன்மமடுக்காதோ வென்றார்
நந்தனார்-காப்பதுன்பாரங்கட்டுவிடு மென்றார்
வேதியர்-நாற்பதுவேலிபகட்டுவிடு மென்றார்
நந்தனார்-அப்பன்கருணையிப்படியோ வென்றார்
வேதியர்-தப்பினேனதுவுமொப்பிலே னென்றார்

வசனம்.

நந்தனார்மெத்தவும் ஐயரைவணங்கி உத்தாரங்கேட்கின்றார்.

விருத்தம்

அல்லெனுங்குழலாள்மோக மண்டாதுவொருக்காறறெண்டர்
பல்லூழிகாலஞ்செய்த பழவினைத்தொடக்கறுத்துச்
சொல்லினுமடங்கொணாச் சுகக்கடலாட்டிவைக்குந்
தில்லைநாயகனைக்கண்டு தெரிசனஞ்செய்வேனென்றார்.

---

கண்ணி-இராகம்-பியாகு-ஆதிதாளம்.

மார்கழிமாதத்திருவாதிரைநாள் வரப்போகுதையே
மனைதப்புண்ணாகப்பண்ணமலொருதரம் போய்வாவென்றுசொல் [லையே
கட்டையிருக்கையில்சிதம்பரம்போய்நான் காணவேணுமையே
கஷ்டனாகிலுமாசைவிளையுதன் காலுக்கும்பிடையே
காலில்ககமூளைத்தநாள்முதலாயுமக் கடுமைகாரனையே
காலபாசத்தில்காட்டிக்கொடாமல் காப்பாற்றிடுமையே
உள்ளங்காலில்வெள்ளெலும்பாட ஓவாடியுழைத்தேனையே
உண்டதுமுறங்கினதன்றியில்வேறே யொன்றுங்காணிலையே
எட்டுமிரண்டுமறியாதபேதைநா னெளியேனையே
இன்னந்தாய்வயிற்றிடையனுகாம லிடங்காட்டிடுமையே
வெள்ளைவெளுத்திடுந்தண்ணீர்குடித்திடும் வெறியேனையே
மேதினியினிலுய்யனுங்கடையேன் வழிவிடவேணுமையே
தானதவங்களொன்றுங்காணா தடியேனையே

தளரவிடவேண்டாமொருகோடி தருமமுண்டுஐயே
அல்லும்பகலுங்களாதரவாலே ஆளாக்கினேனையே
அன்புடனேநல்லகதிபெறுவாயென் றறைப்பவேனுமையே

## விருத்தம்.

சிலையணிந்திடும்வேளிரிந்திட ச்செய்திடுந்திருமேனியைக்
கலந்தணைந்திடவேண்டுங்காதலைத் தண்டிராயகிமைமனத்தையுந்
தலைசுமந்திடுசேடனார்குணந்தன்மை செய்திடுநந்தனை
விலக்குவாங்கியபெருமையாமிவன் வேண்டுதல்லாம்பேசுவான்.

## வசனம்.

இப்படிசிதம்பரம்போக உத்தாரங்கேட்ட நந்தனை நடையசிவ பத்திபரிதாபத்தை ஆதிசேடனுஞ் சொல்லவொண்ணாத மகிமை மைக்கொண்ட மகானுபாவனை, அடிமைக்காரனென்று வேணபடி பேசுவார்

### இராகம்-முகாரி-ஆதிதாளம்.

மாடுதின்னும்புலையா வுனக்குமார்கழித்திருநாளோ
தடியெடுத்தாயாரிடத்தே போய்த்தின்டாதேபோடா
ஆடுதின்னும்புலையா வுனக்கு ஆனித்தெரிசனமோ
நாடுசிரிக்கும்வார்த்தைகளன்றோராடாதேபோடா
சண்டிக்குக்கலியாணம் மூளைநரிக்குச்சங்கராந்தி
பண்டிக்குப்பூசைதிரு நாளுண்டோபறையாநீபோடா
பூசைகள்செய்வாயோ ஆண்டவன்பொன்னடி தொழுவாயோ
கூசல்போடாதேபோடா யிங்கேகூழைக்கும்பிடலாகாதோ
கங்கையிலாடுவையோ வங்கேகாணிக்கைபோடுவையோ
இங்கிதமறிவேனடிக்கடி வந்தயிரையாதேபோடா
அஞ்செழுத்தோதுவையோ வுனக்குமானந்தத்திருக்கூத்தோ
வஞ்சகவார்த்தைநாளைத் தெரியும்வாராதேபோடா.

## வசனம்.

அடாநந்தா சபாசு நன்றாயிருக்கின்றது நீ சிதம்பரம் போக வேண்டுமென்று கேட்பதை ஆலோசித்தால் மிகுந்த ஆச்சரியமா யிருக்கின்றதென்று வேதியர் பின்னுஞ்சொல்லுகின்றார்.

### இராகம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

அடடாநந்தனே தில்லைக்-கனுப்புமென்றெனைக்கேட்ப தாச்சரியமிக வாச்சர்யம்.



அநுபல்லவி.

அடடாகட்டுக்கதைகளைத்துமிங் குதவாது
நடடாவயலைத்தேடி நடவுந — விப்போது. (அட)

சரணங்கள்.

ஈனசாதியிற்பிறந்தோ னுனக்கவிடத்தி
லென்ன அலுவ லுண்டு-அல்லவென்று
போனபோதினுமூவா யிரவரிருக்கும்வீதி
புகுந்துநீகடந்துக் கொண்டு
மானுமழுவுஞ்சிர மாலையணிந்த வரு
மாற்றலர்திரிபுர மதனையெரித்த பெரு
மானுக்கியலுந்திரு மஞ்சனோற்சவந் திரு
வாதிரைப்பலன்பெறமாட்டாய்செப்படி யிரு (அடடா)
வேழ்விகளொருபுறம்வேதியர்க ளியற்றும்
மேன்மைகள்மிகத் தங்கும்-அந்தத்
தாழ்மையிலாததிவ்யத்தலம்போய் வருவதற்குந்
தடையில்லையெனப் பொங்கும்
தன்மையிதெல்லாங் கனவாகமுடிய வரும்
சாதியிழிவையோ சித்தாலேதெரிய வரும்
பன்னிப்பன்னிப்படிக்கிறேன் பாவா யற்றுபெவரும்
பட்டால்தெரியும்பறையனுக்கென்பதுபோல்வரும் (அடடா)
அல்லும்பகலுஞ்சோறளித்துக்காத்திடுந் தெய்வ
மானவப்பல வாணன்-இங்கிருக்க
தொல்லைப்படவோவேண்டாமென்றுரைத்திடுவேன்
சொல்மறந்தநீ வீணன்
தில்லுந்திரியாவாப் பேச்சேதுக்கடா பிடித்
திருக்குமெனதுபிடிதிரும்பாதடா பகடி
பல்லையொடித்து விடுகிறேன்பாரடா தசடி
பஞ்சைநீயாசமர்த்துப்பார்ப்பேனெடடா தடி. (அடடா)

## வசனம்.

வேதியர்சொல்லிய சொற்களைக்கேட்ட நந்தனார் நீங்களென்னைத் தடியாலடித்தாலும் பிராணனைமடித்தாலும் கழுத்தை யொடித்தாலும் சிதம்பரத்தில் நடித்தானைக்காணமலிருக்கே னென்று கூறித்துச்சொல்லுவார்.

### இராகம்-சுருட்டி, ஆதிதாளம்.

பல்லவி.

இனியுன்குற்றத்தைப் பொறுப்பேனோ-அனுவள
வேனுஞ்சம்மதிப்பேனோ.

அநுபல்லவி.

தனியாய்வேதசாஸ்திரந் தனையுணர்ந்தாலுஞ் சாதி
தன்புத்திபோகாதென்ற சரித்திரம்பொய்யல்ல நீதி (இனி)

சரணங்கள்.

பலகாலமும்பழமும்பாலூட்டினாலும் பாம்பு
பழகாததற்குவொப்பாய்ப்பகரலாகுமே வேம்பு
தலம்விட்டப்புறம்போநீதான்செய்யாதடா வீம்பு
தறையிற்சுறந்தபாலுந் தாவுமோமுலைக் காம்பு(இனி)
திடையிலிருக்குமிந்த இடுப்பன்கடம்பன் சரி
இவர்களல்லாமலிதேச இருப்போர்கள்சிறு நரி
நடையிலிருப்பேன்மஹா நல்லவனைகுந் தெரி
நானுனைச்சேர்ப்பேனென்று நம்பாதேபரி கரி. (இனி)

வசனம்.

என்று சொல்லிய வேதியருக்கு, நந்தனர் மிகுந்த தாழ்மையோடு மேழ்மையோடுஞ்சொல்ல, வேதியருக்குக் கோபம்வந்து திருட்டுவேடங்கொண்ட முரட்டுப்பயலேயென்று மறுபடியுஞ் சொல்லுகின்றார்.

---

இராகம் - அசாவேரி, ஆதிதாளம்.

பல்லவி.

திருட்டுத்தனமாத்திரம்வேண்டாம் - நந்தா - அடாவுனக்கு
திருட்டுத்தனமாத்திரம்வேண்டாம்.

அநுபல்லவி.

முரட்டுத்தனமாய்ப்பேசாதேநிர் மூடா
முன்னும்பின்னும்மறியாக் குடிகேடா
வரட்டுதவனைபோல்வா யாடாதே யடா
வயலைமுழுதுஞ்சேர்ப்டுேத்திடப் போடா(திருட்)

சரணங்கள்.

புத்தியுள்ளவனைகப் பாரு-ஏர்கொண்டுழுது
புன்செய்நிலமுழுதுஞ் சீரு-செய்துவிதைத்து
வைத்திடினம்போற்குடி யாரு-இருப்பார்களுன்
னைத்துதிப்பார்சகல பேரும்
த்சதியமாகக்குண்டைகளைநீ கூட்டி
சார்ந்ததற்குவாயாரநீர் ஊட்டி
சத்தியுள்ளமட்டுக்குமே ரோட்டி
தக்கவுன்றன்றிறமதுமிகக் காட்டி



மற்றுமற்றனைத்தனைத்துமுடிவுற
மெத்தமெத்தசித்த மொத்துசெய்குவாய். (திருட்டு)

பட்டாங்குனக்கேதடா பாவி-என்சொந்தமான
பழனங்களுமீடேறத் தேவி-பூசைபுரிந்து
பொட்டெனப்பதம்பணிந்து சேவி-இதைமறந்தால்
போக்குவேனேயுன்னிட ஆவி
சட்டமாகவுன்சமர்த்தைக் காட்டாதே
சரணமென்றுகண்ணீரை ஒட்டாதே
தட்டுவனைகைமிஞ்சி நீட்டாதே
சலசலப்புக்கஞ்சிநரியோட மாட்டாதே
விட்டுவிட்டுவிட்டுவிட்டு விடுவிடு
கெட்டுகெட்டுகெட்டுகெட்டு போகாதே (திருட்டு)

பாயுஞ்சலமுழுதங் கட்டி-பதமாகப்
பழையவெருவெடுத்துக் கொட்டி-சேறுபோலாட்டி
தோயுச்சடமுதலோ ரட்டி-வாராமற்செய்து
சொன்னலுனுப்புவேனே மட்டி
காயமுள்ளபோதேநீ தானடா
கர்த்தன்றனைக் காணப்போவா னடா
எம்த்துவிட்டுப்போகப்போரா யடா
யேத்தவாதிரைக்கனுப்பேனே நடா
ராயன்ராயன்ராயன்ராயன் சாட்சியாய்
தீயன்தீயன்தீயன்தீயன் உனைவிடேன். (திருட்டு)

---

வசனம்.

இதுவும் வேதியர் சொல்லுகின்றார்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வானிருந்தவிடந்தேடிக்காணமல்மாதவத்தோர்மதிமயங்கத்
தேனிருந்தசெந்தாளைச்சிந்திப்பார்புந்திபுறத்தெளிந்தாரில்லை
ஊனருந்தும்புலையாநீசிதம்பரத்தேசென்றுனுமுண்டோமுத்தித்
தானிருந்தவிடம்விட்டுப்போகாமல்சஞ்சலத்தைத்தள்ளுவாயே.

வசனம்.

அடா, வாடா, மூடா, கேளடா, என்னைப்போலொத்தபெரி
ர்களாலே கூடத்தேடி அறியப்படாத ஜெகதீசனுடையதிவ்விய
மத்தை நத்தை யுரிஞ்சும் புறையா நீ கத்திக்குலைக்கலாமா, இப்
டி தத்திக் குதிக்கலாமா, வித்தையொன்று மறியாதவ னிங்கே

பத்தியெண்ணலாமா, நத்திமுநதிதேடலாமா, சத்தமான பெரியோர்களிடத்தே சத்தம்போடலாமா, இங்கே நித்தம் நாடலாமா, வியர்த்தமான இந்தசென்மமெடுத்துஞ் சித்திதேடலாமா, அங்கே புத்திசெல்லலாமா, அடடா, இதுவெல்லாம் விட்டுவிடடா, நாத்தைப்பிடுங்கிநடடா, என்தொழிலைத்தொடடா, தோல்கட்டிய தடியையெடடா, யாருந்திருடாமல் பார்த்திருடா, களத்திற்படுடா, காவல்கொடுடா, புல்லறுடா, முரடா, வழிதெரிபாக்குநடா, நான் சொல்வதுநேரடா, இநடா, உன்செய்கையென்று கல்லாலெறிந்து, தடியாலடித்து, வாயால்திட்டி, தேள்போலே கொட்டி, இவனொரு ஆள்போலே நின்றான், அவர் நாள்போகுதே யென்றார்.

வசனம்.

நந்தனார், வேதியரைப்பார்த்து நீங்களென்னையடிக்கலாம் நானும் அடிபடலாம், தங்களுக்குக் கைநோகுமேயென்று வணங்கிச் சொல்லுகின்றார்.

தண்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அடித்ததுபோதுமையே என்னை-அடித்ததுபோதுமையே.
அடித்தாலுமுங்கள் கைவலி யாதோ
அடிமைவேலைசெய்யுமென் னுடன் வாதோ
படித்ததெல்லாமென் மனதிற் படாதோ
பாவியெனக்குமினிமேற்றெரி யாதோ (அடித்)
நல்லவரேயுங்கள் மனதுப்பிர காரம்
நடக்காமலிருந்ததுமப சாரம்
சொல்லத்தெரியுமோவெனக்குப சாரம்
சுகிர்தசாலியுங்களாலேயிந் நேரம் (அடித்)

வசனம்.

நந்தனார் ஐயருக்குத் தலைவணங்கிச்சொல்லுவார்.

மோகனராகம்-ரூபகதாளம்.

இலவுகாத்தகிள்ளை யாச்சே-நான்
எடுத்துச்சொன்னதெல்லாம் போச்சே
பறையன்சொல்லுபழு தாச்சே-நீங்கள்
பார்ப்பாரென்பதுமே லாச்சே
ஏழைச்சொல்லம்பல மாச்சே-தெய்
மில்லாமலெங்கையோ போச்சே



சேரியேசொர்க்கமென் றாச்சே - தில்லைச்
சிதம்பரமென்பது போச்சே
விழலுக்கிறைத்தாற்போ லாச்சே - எந்தன்
வேண்டுதல்வீணாகிப் போச்சே
கண்டதைக்கண்டிட லாச்சே - நல்ல
காலம்பிறக்காமற் போச்சே.

வசனம்.

நந்தனார் பெரியோர்கள் கோபத்தை இனி எளியேன் தாங்கேனென்றுசொல்லுவார்.

இராகம் லாவணி, ஆதிதாளம்.

பெரியோர்சினமடையா ரடைந்தாற் பெருங்கடல்தீயாதோ
பேயன்தாங்குவேனோ இம்மாத்திரம் பிழைபொறுத்தாளுமையே
அல்லும்பகலும்நா னறிந்துமேதோ வறியாமலேபோனேன்,
ஆசைகொண்டேன்திரு வம்பலத்தெய்வம் மோசஞ்செய்யுதையே
பாவியெனைத்தொடர்ந் தடித்தாலுமெந்தன் பாழ்வினைதீராதோ
பார்தனில்பேர்சொல் லாதவனென்றே படைத்ததுபோதாதோ
சிக்கம்பொசித்திடு மிறைச்சியைவேறொரு செந்நாய்தொடலாமோ
சிதம்பரம்நான்தொட லாமோசாதியில் சின்னவனானன்றே
இன்னமும்சிதம்பரம் போவேனென்று மிங்ஙனேவருவேனோ
இம்மட்டும்போது மையேயுங்கள்தய விருந்தாலதுபோதும்.

இஃது ஐஞ்சேரடியான்வந்த,

விருத்தம்.

சேரிவந்தவர்செவ்வியவேதின்சினத்தால்
காருகளடர்ந்திடுஞ்சோலையினின்றவன்கருத்தை
ஏருலாவியபரமனற்றுண்மலரிறுக்கி
தீரனாகியநந்தனுமிப்படிசெய்தான்.

வசனம்.

நந்தனார் தங்களையருக்குத் தலைவணங்கிபெரியகும்பிடுபோட்டு
சோலையிலிருந்து சமாதிபண்ணுவார், தன்னுடையசரீரத்தைத்
லைவெளியிலே கலந்துகொள்வேனென்று வீரவைராக்கியத்துட
சேரியில்வராமல் தன்னுடைய துயரங்களை யெல்லாம் அம்பல
ணருக்கே ஒப்பிவித்து சலுகைகொண்டாடுவார்.

விருத்தம்.

வதிவசிப்படிசொல்லவெந்துமனம்வேறாகினையோவென்று
ரியிலேபாவமிதரியன்றேபிறப்பித்தாய்சுவாமியென்னை

சோதனையோசெய்கின்றாயெவ்வுயிர்க்கு மவ்வுயிராய்த்தோய்ந்திருக்
ஆதிகுருவல்லவோநீபார்ப்பானுக்குள்ளிருந்துமனுப்புவீரே. [கும்

இராகம்-செளராஷ்டிரம், ஆதிதாளம்.

பல்லவி.

ஐயாவுன்னடைக்கலம் பொய்யாகியதேகமடைக்கலம். (ஐயா)

அத்தானுன்வருவேனோ அம்பலத்தைப்பரவேனோ
சற்றேயாகிலுங்காண்பேனோ சந்நிதியேயென்செய்வேன். (ஐயா)

---

விருத்தம்.

தாறில்லாதவிப்பிறவியைத்தானெடுத்தஞ்சி
தூறுபட்டனற்கீழ்க்குலமாகிபித்துன்பம்
நீறுபட்டிடுமல்லவோதில்லையினின்றால்
பேறுபெற்றிடுவேனதற்கும்மொருபிசகோ.

இராகம் எதுகுலகாம்போதி, திரிபுடைதாளம்.

பல்லவி.

ஐயோதெய்வமே யிந்தவையர்க்கடிமையானேன்
செய்யாவினைகள்செய்தல்லவோ
உள்ளங்கரைந்துருகியுய்யும்படிக்கேட்கில்
கள்ளக்குமரனல்லவோ
ஆலைக்கரும்பதுபோலாச்சுதங்கமுழுதும்
வேலைக்கிடமுமில்லையே
பாவியெனக்கோவந்த பார்ப்பான்மனதிரங்கான்
ஆவிதவிக்குதல்லவோ
கோவில்கும்பத்தைக்கண்டால்கோடிவினைகள்தீரும்
பாவிகருக்கிடையாதுகாண்
தில்லைபம்பலவாணதெய்வம்புலையர்க்காக
கல்லாச்சமையலாச்சுதே
பொன்னம்பலவாயுன்னைப்போற்றும்வகையில்லாமல்
இன்னம்பிறவியேறுமோ
அன்னைதந்தையும்நீயென்னுயிபொருளும்நீ
யுன்சந்நிதிவரச்செய்வாயே.

---

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அடிமுடியொன்றுமில்லாதம்பலத்தரசேயுன்பால்
கொடியனுன்வந்தாலென்னகுறையுமோவதனால்நீதி
நடலைசெய்பார்ப்பான்கையில்நடுங்கவோவிடுத்தாயென்றும்
படிமிசைவீழ்ந்தாறடிப்பதறுவான்கதறுவானே.



இராகம்-லாவணி-யமுனாகல்யாணி.

பல்லவி.

செய்யுமுபாயமறியேனறியேன்
அரகரசிவனேதில்லைச்சிவனே.

பத்துவருடகாலமாகவந்துபார்ப்பானைக்கேட்டேன்
சித்தமிரங்கிப்போய்வாவென்றொருநல்ல சேதிசொல்லக்காணேனை
[யோ (செய்யு)

பாவிபுலையனாய்ப்பிறப்பேனோ யிந்தபாரினிலிருப்பேனோ
ஆவிதவிக்குதேபொன்னம்பலவாவுன் னடிக்கமலங்காணேனையோ
[செய்யு

பல்லுமுளைத்தநாள்முதலாகயிந்தப்பாடுபடுவேனோ
தில்லைநாயகாகனகாவென்றுனைத்தேடும்வகைகாணேனையோ (செய்)
நாற்பதுவேலிநிலமிருக்கிறதைநடுகவேணுமென்றார்
காப்பதாருகளைபிடுங்குவதாரென்றுகடுந்தபேச்சுகடியேன் (செய்)

ஆற்றிலேகுளத்திலேவிழுவேனென்னுவதைப் பிடித்திழுத்திடுவேன்
பார்த்தினிக்கிருபைசெய்யா விடிற்பறையன்பழிவீண் போகாது
[சொன்னேன் (செய்யு)

தில்லைச்சிதம்பரத்தைக்காணவிடிலென்தேகந்தெரியாது
சொல்லிவிட்டேன்பொன் னம்பலவாவுன் சொர்ணசபைக்குவருவே
[னோநான (செய்யு)

விருத்தம்.

கடுவருந்தியும்பணிகலினாகவுங்கற்றைச்
சடிலமேவியபிறைபுனற்றரிக்கவுந்தகுமோ
விடுயதில்லையுன்னருகினிற்றானொருவேங்கைக்
கொடியன்வந்ததினாலென்னதில்லையிற்குறையோ.

விருத்தம்.

மாவளர்தில்லைமாநகர்வீதியுமதிலும்
கோவிலுந்திருக்கூட்டமுங்கண்டுகண்குளிரப்
பாவியாகினேன்காயத்தையேதுக்குப்படைத்தே
னாவிதானிருந்தும்பரகதியடைந்திலனே
ஆதிநாண்முதற்றவம்பெறுமாமுனிக்காக
நாதமோங்கவேநாடகம்புரிந்திடுநாதன்
பாதம்போற்றியெந்நேரமும்பணிந்திடுநந்தன்
ஏதந்தீரவேகனவிலுமீசனும்வந்தார்.

வசனம்.

நந்தனார், தில்லைத் தலத்தைக்காணாத ஜென்மமிருந்தாலென்ன போனாலென்னவென்று நிச்சயம்பண்ணி மனதுருகிவாடும் வேளையில், கொஞ்சம் நித்திரைபோற்கண்டு அந்நித்திரையில் அம்பலதேவன்வந்து சொல்லுவார்.

எதுகுலகாம்போதி,

பல்லவி.

கனவினில்கண்டாரே-நந்தனார்-கனவினில்கண்டாரே.

மனதிலெப்போதும் வருந்தியடிபணியுங்
கனகசபேசனைக் கண்ணினாற்காணாமல் (கனவி)
நீநடுங்கழனிகள் நானடச்சொன்னேன்
ஊனமில்லாமலுன் னுடையவன்களிக்க
மானிடப்பிறவியி லுனைக்கிணையார்பத்தி
மானில்லையெனத்தில்லை நாதன்வந்துரைக்க (கனவி)
கங்குல்பகலாய்க் களித்தநின்னருளாற்
சங்கரனேயென்று சாருநன்னிலையால்
அங்கம்புளகித மாச்சுது அதனூ
லிங்கேவந்தேனென்று யீசனும்புகல (கனவி)

விருத்தம்.

அறிவுமிகுந்தாற்றலுடன்சிவபெருமான்பெயர்சொல்லியாற்று நாளில், கறைமருவுமிடரழகன்றனதடிமை வெறியநலக்கனவில்வந்து, குறையறவேகழனிகளைநடச்சொன்னேனுனக்குவிடைகொடுக்கேனென்ற, மறையோதுமவர்க்குரைத்து நீவிரைந்துவாவென்றுமன்றுட்சென்றார்.

நந்தனார் கனவில்-நடேசமூர்த்திசொன்ன

வசனம்.

நம்முடைய நந்தனாரே உன்னிடகழனிகளை நமது பூதகணங்களாலேநடச்சொன்னோம் வேதியருக்குக்காட்டினால் உத்தாரங்கொடுப்பாரென்றுசொல்லித் தானம்பலத்தேசென்றார்

நந்தனார்-நித்திரைநீங்கி வயல்களைக்கண்டு சந்தோஷமடைதல்.

கண்ணிகள்.

களையெடாமல்சலம்விடாமல் கதிரொருமுழங்காணுமாம்
களிக்குதுபயிரிருக்குது அதை கட்டுகட்டவேதோணுமாம்



பழுதிலாமலேரிகுளங்கள் பள்ளமேடுதண்ணியாம்
பரமசிவனைப்பணியுமநந்தன் பயிரிடுந்திருப்பண்ணையாம்
கனவில்வந்துவுநவமாகி கருணைமாரிகண்டவன்
கடுகிநடந்துவேதியரிடங் காணவென்றுசென்றனன்

விருத்தம்.

அய்பரேவாருமென்று அழைத்திடுநந்தனைத்
துய்யவேதியருங்கண்டு தொல்புவித்தெய்வமெல்லாம்
பொய்பிதுவென்றுதள்ளிப் புலையனும்வந்தானென்று
செய்யவேண்டியதுசெய்யச் செப்புவானனுப்புவானே.

பலவித-ராகம்-வராளி-ஆதிதாளம்.

வேதியர் சொல்வது.

பல்லவி.

நந்தாவுனக்கிந்தமதி வந்ததென்னதந்ததாரு
அந்தாங்கஞ்சொந்தமா யிருந்ததுமறந்துபோய்
விந்தையாய்நினைந்தன்றோ அந்தவேளைபுத்தியில்லை-நந்தா

தோடி.

கொல்லைக்காட்டுநரிபோலே பல்லைக்காட்டிபேசுவாய்
கல்லைக்காட்டிகோபங்கொண்டு சொல்லைக்காட்டியேசவேண்
இல்லையென்றசொன்னதெல்லா மில்லையென்றுபோச்சுதா
கல்லையென்றுஐயர்சொன்ன சொல்லேநிசமாச்சுதா
சித்தமுந்தெளிந்ததா உற்றதுவுணர்ந்ததா
பத்தியுந்துலைந்ததா கத்தலும்பறந்ததா
சட்டம்-சட்டம்-நல்லது-நல்லது மெத்த-மெத்த-சந்தோஷம்

மத்தியமாவதி.

இப்படிஅப்படிசொல்லாதே தப்பெடுத்தடிப்பையா
சொற்படியொப்புதலாகநீ மெய்ப்படிநடப்பையா
கள்ளக்கும்பிடுதள்ளடா காரியங்கைக்கொள்ளடா
எள்ளுகொல்லைக்காரடா யெங்குஞ்சுற்றிப்பாரடா
தெய்வமென்பதுகுற்றம் தெளிந்துபாருசுற்றம்
கையைக்கொட்டுசத்தம் கண்டுகொள்ளுநித்தம்
ஊனுறக்கமேயின்பம் ஊனிழந்தாலேதுன்பம்
சாண்வயிற்றுக்குஅன்பு சாதிமுறைமைவம்பு
[illegible]கோ-பலே-பலே சபாசு-கண்டுகொண்டாய்

### சேநாரகௌளம்.

சூதாடிதோற்றவன்போல் வாதாடிநிற்பதற்கு
வேதாந்தசாஸ்திரங்கள் காதாலேகேட்டிருந்தும்
என்னகாரியம்அதிலென்ன வீரியம்-தள்ளு-தள்ளு

### புன்னாகவராளி.

தில்லையென்பதுகாட்டிலுண்டு கேட்டதில்லையா
தேகம்பட்டால்புண்ணாகும் பார்த்ததில்லையா
அம்பலமாவதுஆகாச முற்றுப்பாரு
அருளில்லைபொருளில்லை கண்டுசேரு

பத்தியென்றுஞ்சித்தியென்றும் வெற்றியென்றும்முத்தியென்றும்
இத்தனைநாள்கற்றகலை அத்தனையும்பித்தமாச்ச
மாறுபாட்டுக்காரன்வார்த்தை கூறுபடுமோ
தானுமாறுபேசினதால் சோறும்பாழடா

### நாதநாமக்கிரியை.

எல்லாம்புழுப்புரட்டு வல்லான்வகுத்தவழி
சொல்லாதேசும்மா நில்லாதே
காரியத்தைப்பாரடா உனக்கிணைபாரடா
காசுபணஞ்சேரடா இதுநல்லவூரடா

### மாஞ்சை.

கஞ்சிகூழுகுடித்தாலும் பஞ்சமில்லையே
கொஞ்சமிருந்தாலும்போதும் சஞ்சலமென்ன

### மத்தியமாவதி.

சம்பாநெல்லிருக்குனக்குத்தாரேன் ஒற்றைச்
சல்லாகிழித்துனக்குத்தாரேன் ஒற்றைத்
கண்டாங்கிச்சேலையொன்று துண்டாய்கிடக்குதுந்தன்
பெண்டாட்டிக்குக்கொடுத்து நன்றாகவாழ்ந்திரு

### புன்னாகவராளி.

துண்டுவெட்டுப்பாக்குதின்று அண்டைவெட்டிப்போர்த்தையா
கண்டனடிக்கட்டளையில் மூண்டிருக்குபார்த்தையா

### மோகனம்.

காணியில்லாதவனொரு மாணியில்லாதவன்போலே
தோணினாலுந்தோணாது கோணிநடந்தாலுமென்ன
பெண்டாட்டியில்லாச் சுகமல்லவேமனந்
கொண்டாட்டங்கொள்ளா ததைச்சொல்லவோ



### ஆரபி.

எருவிட்டுழுதவயல் மறுவிட்டுத்தேவையில்லை
எதுவெட்டினாலுந்தாங்குந் துருவிட்டுப்பார்க்கவேணுந்துரையே
நிலம்பாராதபேர்கட்குப் புரையேயிதுவல்லாமல்
வேறேயுண்டாயிறையே இந்தவூருக்குளிதுநல்லவிரையே

### அடாணவேரி.

மூலைக்கால்விளைந்ததானால் சேலைக்குக்காணும்
உனதுகூலிக்குக்காணும் குழந்தைபாலுக்குக்காணுமல்லவோ
ஊருக்குளிந்தநிலஞ்சப்பையே நிவாரிவிடவேணுமிந்தக்குப்பையே

### சாவேரி.

வாரிகாலைச்சுற்றிப்பாரு கோரையைப்பிடுங்கிநட
தேரியையுழச்சொல்லு வீரியைநடுகச்சொல்லு
செட்டியார்குளத்தருகே முட்டிருக்கப்போர்த்தையா
வெட்டியானகத்தருகே திட்டிருக்கப்பார்த்தையா

### புன்னாகவராளி.

எல்லாமுனதுபொறுப் பொல்லாமுனதுசுக
மல்லாமல்வேறேகதியில்லை இல்லை
கட்டியடிக்கட்டிளையில் விட்டதுமுளைத்ததா
பொட்டைத்திடல்குட்டையிலே நட்டதுபலித்ததா
காடுவெட்டிநஞ்சபண்ணு மாடுகட்டிவைக்கோல்போடு
பாடுபட்டுழைத்தாலன்றோ வீடுகட்டிவாழலாம்—நந்தா

### வசனம்.

இப்படிச்சொல்லும் வேதியரை பண்ணையைப் பார்க்கவாருமென்று நந்தனார் கூப்பிடுவார்.

### விருத்தம்.

பண்ணையாவையும்பாருமென்றழைத்திடப்பரிந்து
கண்ணுலாவியவேதியன்களிப்புறநந்தன்
பண்ணுலாவும்பொன்னம்பலக்கூத்தனைப்பரவி
யெண்ணிலாவருங்காதல்கொண்டிருந்தனர்தாமே.

### வசனம்.

கேவலமாகிய நீசன் சிவகணங்களாலே ஒரு இராத்திரியில் நடவுநட்டு அறுப்பறுக்கும்வயலை வேதியர்கண்டு ஒன்றுந்தோன்றாதவராகி யுலகவாசனையற்றுநின்றார்.

வசனம்.

நந்தனர் அம்பலவாணனைக் கொண்டாடிக்கூத்தாடுவார்.

கடுக்கா.

நந்தனைத்தபரிதமானர் நந்தனரும் ஆனந்தமாகினர்
சொந்தமானவயல்வந்துபார்க்கையில்
விந்தையாச்சுபலபந்தப்போச்சுது
சிந்தைதீரவேயந்தரங்கத்தில் (நந்தன)

நீசச்சாதியென்றுயேசிப்பேசுமிந்த
தேசிவேதியனுமாசையாகவே
தேசமமற்றுந்தில்லைவாசமாகுநட
ராஜமூர்த்திக்குதாசனென்றுவரும் (நந்தன)

வாரும்வாருமிதைப்பாருஞ்சிவ
ஞரேவந்துசெய்யுங்காரியங்களிது
பாரின்மீதுளிணையாருமில்லையென்
றாரினுள்ளபெரியோருஞ்சொல்லச்சொல்ல (நந்தன)

சித்தமீதிலொருகுற்றமேதுமில்லை
சுத்தமானவிதயத்திலுள்ளசிவ
பத்திபண்ணிவெகுசித்தியாகிவர
முத்திதேடிவருபத்தனென்றுசொலும். (நந்தன)

வசனம்.

வேதியர் நந்தனரைப்பார்த்துசிவபத்தரை அபசாரம்பண்ணி னேனென்று மிகவும் குழைந்துசொல்லுவார்

இராகம்-பியாகடை, அடதாளச்சாப்பு.

பல்லவி.

நந்தனேரேயுன்றன் பெருமையின்றுகண்டேன்
நானென்வினையை விண்டேன்.

அநுபல்லவி.

விந்தையைக்குறியாமல் விழலனறியாமல்
விம்புக்குக்கச்சுகட்டி வீசினேனென்னையாளும் (நந்)

சரணங்கள்.

அறியாமனத்தினலேயேதேதோபேசியுந்தன்
அருமையைத்தெளியாமற்போனேனே மெத்த



சிறியோர்செய்தபிழைபெரியோர்பொறுப்ப ரென்று
செப்பும்வார்த்தையுமக்கேகனவானை இந்த
முறையுணர்ந்தோர்க்கென்னநான்சொல்லத் தோணும்
மூடன்மேற்கிருபைவைத்துமுழுதுங்காத்தி— வேணும்
நிறைவுற்றவருட்பெற்றூர்க்கதுமி... காணும்
நினைக்குமுன்னடிவணங்காதோன்வந்துய பேசுணும (நந்)

நேற்றுப்பொழுதளவுஞ்சும்மாவிருந்ததிந்த
நிலங்கள்முற்றும்பயிர்கள்முளைத்துக் கதிக்கச்
சாற்றுங்கதிர்கள்முத்திச்சாய்ந்து அறுவடைக்கும்
தக்கதாயிருக்குதேமிகக்கிளைத்து உமது
ஆற்றல்தனக்குநிகராவரோ யாவரும்
அய்யாவுனதுநல்லவருளால்நலமே பெரும்
நாற்றிசையோர்களுங்நாடிப்பணிய வரும்
நாயேன்களிக்கமனம்நயந்துக்கிருபை தரும் (நந்த)

குண்டைகளுங்கலப்பைக்கோலுங்காரும்விதையுங்
கொட்டந்திலிருக்கநீர்செய்தீரோ அந்த
அண்டர்பணியுந்தில்லையாண்டவனை யுமக்கு
அடிமையாளாகிவந்துசெய் தாரோ
அண்டத்தனத்தாலென்றுக்கும்மைக் கொண்டேன்
தொல்லுலகத்துள்ளோர்யாருமேசக் கண்டேன்
தொண்டனேனுமக்குத்தோதகங்களை விண்டேன்
சொல்லும்பணிகள்செய்துசுகப்படத்துணி வுண்டேன் (நந்த)

வசனம்.

என்று வேதியர் நந்தனரைப்பார்த்துச் சொல்லிப்பின்னுஞ் சொல்லுவார்.

இதுவும்-வேதியர்சொல் விருத்தம்.

கறைபடுக்கவன்டன்றுளைக்கருத்ததுபெறவேநோக்கி
குறையறும்நந்தனரைக்குலமதுசொன்றெண்ணி
மறைபுகல்பெருமையாலேவநந்திேனன்கொடியனென்று
இறைபடுமனப்போலஞ்சியேங்கியேயாற்றுவானே.

இராகம்-புன்னாகவராளி, ரூபகதாளம்.

குத்தமெத்தனைசெய்தபோதிலுமுந்தன் சித்தத்தில்நினையாதே-சிவ
பத்தனென்றறியாமல்பதறிவார்த்தைகள்சொன்னபாவந்தலையாதே

புலையர்கள் பரகதிதேடும்படியவர்புண்ணியஞ்செய்வாரோ - உன்னை
கலிதீரக்கண்ணாரக்கண்டபேர்களெல்லாஞ்சாட்சிபெறுவாரோ
உருவமனதறியவொருஞானலாகாதென்றுலகப்பொழியாதோ - அது
திறமாச்சுதிவிபுந்தன்ஜென்மசபலமாச்சுதெய்வமும்மிரங்காதோ
ஜாதியிலிழிகுலஞ்சாஸ்திரங் கிடையாசமீதகப்படலானேன் - இப்
போ, ஞானதமபாரகசியம்பாரென்றுயனுப்பிவிடலானேன்.

வசனம்.

இப்படி வேதியர் மிகவும் பரவசமடைந்து நடந்த வரலாற்றைக்கேட்க, நாளைப்போவார் கனவிலே ஈசன்வந்து கருணைசெய்தாரென்றார். அதற்கு வேதியர்சொல்லுகின்றார்.

இராகம்-யமுனாகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

நந்தாவுன்கனவினிலெப்படிவந்தார்
வரந்தந்தாரெந்தாய். (நந்தா)

சந்ததமுஞ்சனகாதிமுனிவர்தொழுஞ்
சச்சிதானந்தமூர்த்தியல்லவோ (நந்த)

ஆதிமுடிவுகிடையாதபராபரஞ்
சோதியல்லவோநீசசாதியென்றறிந்தும் (நந்த)

அண்டாண்டநிறைகின்றசபாபதிக்
கொன்றும்பேதமில்லையென்றுதெளிந்தாய். (நந்தா)

வசனம்.

வேதியர்தான்செய்த பிழையெல்லாம் பொறுத்துக்கொள்ளுவீரென்றுசொல்ல, நந்தனார் மறுயுத்தரங்கூறுகின்றார்.

இராகம்-தெண்டகம், ஏகதாளம்போதி,

வேதியர் - ஏழைப்பார்ப்பான்செய்திடும்பிழையை
யேற்றுக்கொள்ளாதே
இன்மறியாதவன்முன்புத்திக்காரனென்பதவும்பொய்யோ
நந்தனார்-பொய்யாகியவிந்தவுலகத்தைப்பார்க்கும்
புண்ணியவானே



புலையனுங்களடிமையல்லவோ புத்திசொல்லுமையே
வேதியர் - புத்தியுங்கல்வித்தையுண்டு
பத்திகிடையாது வாயால்
புலம்பினதாலென்னமனமடங்காதுபோதங்கிடையாது
நந்தனார் - கிடைக்குஞ்சிதம்பரதெரிசனமென்று
கிருபைசெய்யு மையே
கீழ்க்குலமல்லவோநாயினுங்கடையேன்கீர்த்திசெய்விப்பீரே.

வசனம்.

பரமபக்தனாகிய நீ எனக்கு அடிமைவேலைசெய்பவன்போல் வந்தபடியினாலே என்பிறவிப்பிணி யொழிந்ததென்று வேதியர் சொல்லுகின்றார்.

அறுசீரடிவிருத்தம்.

அவப்பொழுதுபோனதன்றிமறைமுடிவையுளங்கனிய
வறிவினுன்னித்
தவப்பொழுதுங்கணப்பொழுதுங்கண்டறியாப்பாவியெனைச்
சார்ந்தாரன்றோ
சிவக்கொழுந்தினடிமையென்றுபெயரிட்டுவேலைகளைச்
செய்ததாக்
பவக்கடலைக்குளப்படிபோல்தாண்டிவரச்செய்ததுந்தன்
பத்திதானே.

இராகம்-ஆனந்தக்களிப்பு.

நந்தாநீசிவ பத்தன் - உன்னை
நம்பாமலேமோசமானேனான் பித்தன் (நந்தா)

பூமிக்குள்நீயொரு சித்தன் - இந்தப்
பூமிக்குநானொருசாஸ்திரப்பிர சித்தன்
காமிக்குள்ளேவெகு மத்தன் - உன்னைக்
கண்டுதெரிசித்தோரனைவரு முத்தன் (நந்தா)

படித்துமென்னவெங்கள் வேதம் - அதில்
பார்த்ததில்லையிந்தபகவனற் கீதம்
எடுத்துக்சொன்னாய்சிவ போதம் - அது
ஏற்காமற்போச்சுதுயென்பிடி வாதம் (நந்தா)

தெவிட்டாதசோசம பாணி - உந்தன்
தேகமுழுதிலுஞ்சிவன்றிரு மேனி
பகையாகியவொரு கூனி - போலே
பழுத்தேனுறுஞானியாத்தும ஞானி (நந்தா)

பவசாகரந்தாண்டிச் சென்றாய் - உள்ளே
பார்த்துணர்ந்துப்பரமானந்தங்கொண்டாய்
தவமாமுனிபோலே நின்றாய் - தில்லைத்
தாண்டவராயனைத்தன்னுல்நீ கண்டாய் (நந்தா)

---

வசனம்.

இப்படி வேதியர்சொல்லும்போது, நந்தனார் மனம்நொந்து கைகால்நடுங்கி ஐயரைச்சுற்றிவந்து தலைவணங்கி எனக்கு அன்னங் கொடுத்து ஆடையளித்து இத்தனைநாளுங் காப்பாற்றின பெரியவரே. உங்களுக்கடிமைவேலை செய்யுமென்னை இப்படிப் பெருமையாய்ச் சொல்லவேண்டாமென்று சொல்லுகின்றார்,

இராகம்-கலியாணி, ரூபகதாளம்.

பல்லவி.

ஐயாசொல்லு வேனோ - உம
தடிமைப்பறையன் தானே.

அநுபல்லவி.

மெய்யாகவேயிந்தமேதினிவாழ் வோர்கள்
வேலைசெய்யூழியர் தம்மையோதாழ் வார்கள். (ஐயா)

சரணங்கள்,

வேம்புக்குயர்ந்தமதுரங்கள் பூட்டினும்
வீறுமதன்குணம்மாறுதெதங் நாட்டினும்
ஆம்புத்திக்காரனென்றாலேயாவ துண்டோ
அய்யனருளாமல்லாமலும்வே றுண்டோ (ஐயா)

மேவுங்கீரைத்தண்டுமேருவைத் தாங்குமா
வீசுங்கதிர்முன்மின்னும்பூச்சி யோங்குமா
ஆவதழிவதெல்லாமையன் றன்னாலே
ஆச்சதென்றாலென்னவாச்சுது யென்னாலே (ஐயா)

முன்னமேசெய்தவினையின்வ சத்தாலே
மூடப்புலையனாய்மேவி யதனாலே



இன்னல்படுவதுடனின்னமும் ஏண்டா
ஏத்திச்சொல்லுமென் றெனைக்கெடுக்கவேண்டாம். (ஐயா)

---

வசனம்.

நந்தனார், தனது ஆண்டையாகிய வேதியரைப்பார்த்து தங்களுடைய திருவாக்கினால் என்னையுமிப்படிப் புகழலாமோவென்று மிகவும் வணக்கமாய்ச் சொல்லுகின்றார்.

இராகம்-அமிர்தகலியாணி.

பல்லவி.

சின்னசாதியல்லவோசிதம்பரம்போய்வருகிறேனென் (சின்ன)
அன்னைதந்தையொருவரில்லையடைக்கலமென்னையாளவேணும் (சி)
ஈரமில்லாதநெஞ்சமாகியிறைச்சிதின்றுவுடல்பெருத்த (சின்ன)
அல்லும்பகலுமதுவையுண்டுமறிவுமயங்கியாட்டங்கொள்ளும். (சி)

---

வசனம்.

இப்படிச்சொல்லிய நந்தனாரைப்பார்த்து வேதியர்சொல்லுகின்றார்

இராகம்-தேவமனோகரி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆருக்குத்தான்தெரியும் அவர்மகிமை
அம்பலநாடக மாடியபெருமை.

அநுபல்லவி.

பாருக்குள்மாந்தர்கள் காண்பதுதொல்லை
பதஞ்சலிபண்ணிய புண்ணியமில்லை.(ஆருக்கு)

சரணங்கள்.

தேவர்கள்பூமழைகொண்டு சொரிந்தார்
சித்தவித்தியாதரர்கண்டு மகிழ்ந்தார்
பாவலர்நாவலர்உள்ளங் குளிர்ந்தார்
பார்வதியம்மனுங்கூட யிருந்தாள் (ஆருக்கு)
காதில்குழையதுவிழுந்தது காட்டார்
கண்டிடும்அன்பரைவிண்டிட மாட்டார்
பாதாளம்நடுங்கவேதாண்டவம் போட்டார்
பக்தியில்லாதவர்தங்களைக் கூட்டார் (ஆருக்கு)
பாலகிருஷ்ணன்பணிந்தேற்றும் பிரதாபம்
பரந்திடும்பேர்க்கில்லைபுண்ணிய பாவம்

சீலகுணமருவுஞ்ஞானப்பிர தீபம்
தேவமனோகரமாகிய ரூபம் (ஆருக்கு)

இராகம்-பைரவி-திரிபுடை-தாளம்.

பல்லவி.

ஆருக்குப்பொன்னம்பலங் கிருபையிருக்குதோ
அவனேபெரியவனாம்.

அநுபல்லவி.

பாருக்குள் வீடுகள் மாடுக ளாடுகள்
பணமிருந்தாலவன் பெரியவனாவனோ. (ஆருக்குப்)

சரணங்கள்.

வேதபுராணங்களோதினதாலென்ன
வேலைசூழ்பணமாதரா லென்னகாரியம்
சாதனைபாகவராதொருநாளும்
மண்ணாசை பெண்ணாசை பொன்னாசைபொல்லாது (ஆரு)

பாணன்மதங்களடங்கவேசெய்தகோ
பாலகிருஷ்ணன்தினந்தொழும்பொன்னம்பல
வாணனென்றுதாவாய்விரும்பாதவன்
வானவராகிலுந்தானவன்சின்னவன், (ஆருக்குப்)

வசனம்.

சிவபத்தியுள்ளவன் பெரியசாதி, சிவபத்தியில்லாதவன்பார்ப்பானாயிருந்தாலுஞ் சின்னசாதி ஆனபடியினாலே, திருப்புன்கூரிலுனக்காகப் பரமசிவன் நந்தியைவிலக்கி தெரிசனங்கொடுத்ததும், நீ குளம்வெட்டினதும், ஒரு ராத்திரிகாலத்திலே நாற்பதுவேலிநிலமுங்கடராஜமூர்த்தியேவந்து நடவுநட்டதும், பார்க்கும்போதுநீயே மகாபுண்ணியபுருஷனென்று சொல்லவேண்டுமே யல்லாது வேறில்லை, நீ இதுவரையி லொருவார்த்தையைத் தட்டினது மில்லை, ஆகையால், எனக்குநீ குருவாகிநின்று உபதேசம் பண்ணென்று வேதியர் சொல்லுகின்றார்.

இராகம்-தண்டகம், ஆதிதாளம்.

பல்லவி.

நந்தாநீ-குருவுபதேசம் நவிலிடவேணும் நான்கடைத்தேற
நொந்தானுங்கதிபெறமாட்டேன்
நோயினும்பிறவிக்கடலிடைவீழ்வேன் (நந்தா)



மந்தாரப்பூவெடுத்தரனார்மலரடிசாத்திவாழவென்னறிவு
சிந்தாமல்வரந்தரவேணும்சிதம்பாரகசியந்தெரிசித்திடவே (நந்தா)

வைத்தாகருணைக்கடலுன்மனதிற்சென்றுநீநிர்த்தனம்புரிந்து
ஒத்தாசைபூதகணங்களுரிமையுடன்வந்தூழியஞ்செய்ய
பெற்றாய்நீபெரியவனுந்தன்பெருமையையானறிவேனோமூடன்
நத்தாமல்மோசமதானேனம்பிக்கைசொன்னேனற்கதிபெறவே. ()

கலிவிருத்தம்.

வேதமோடறஞ்செய்திடுநூற்களைவிதித்தும்
ஆதனுதியுன்னடியவர்க்கடுஞ்சினமடைய
பாதகம்புரிந்தேனென்றுநந்தனைப்பரவி
ஏதந்தீரவேவேதியருபசரித்திருந்தார்.

வசனம்.

இப்படிச்சொல்லிய வேதியர்வார்த்தையை தள்ளப்படாமையால், சுற்றிவந்துதலைவணங்கி ஒருமூலையைநோக்கி நந்தனார் சொல்லுகின்றாப்போல சொல்லுகின்றார்.

இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயேமெத்தகடினம்-உனக்கடிமை ஐயேமெத்தகடினம்

அநுபல்லவி.

பொய்யாதபொன்னம்பலத்தையாயிருக்குமிடம்
நையாதமனிதர்க்குவுப்பாதுகண்டுகொள்ளும் (ஐயே)

சரணங்கள்.

வாசியாலேமூலக்கனல் வீசியேகழன்றுவரப்
பூசைபண்ணிப்பணிந்திடு மாசறக்குண்டலியைவிட்
டாட்டுமே-மனமூட்டுமே-மேலோட்டுமே-வழிகாட்டுமே இந்த
மானாபமானம்விட்டுத்-தானாகிநின்றவர்க்குச்
சேனாபதிபோலே-ஞானாதிபதியுண்டு
பாருமே-கட்டிக்காருமே-உள்ளேசேருமே-அதுபோதுமே அங்கே
சங்கையறவேநின்று பொங்கிவரும்பாலுண்டு
அங்கமிளைப்பாறிக்கொண்டு தங்கப்பொம்மைப்போலவே
நில்லுமே-ஏதஞ்செல்லுமே-ஞானஞ்சொல்லுமே-யாதும்வெல்லுமே
இந்த

அட்டாங்கம்பண்ணினாலும் கெட்டாங்குபண்ணியது
கிட்டாதுகிட்டிவர வொட்டாதுமுட்டியது
பாயுமே-முனைதேயுமே-அதுவோயுமோ-உள்ளேதோயுமே வேத

மந்திரத்திலேபோட்டு யெந்திரத்திலேபார்க்குந்
தந்திரத்திலேயுமில்லை அந்தரத்திலே அவ
தானமே-அதுதானவே மவுனமே-பேசாமோனமே அந்த

முப்பாழுந்தாண்டிவந்து அப்பாலேநின்றவர்க்கு
இப்பார்வைகிடையாது அப்பாதிருநடனம்
ஆடுவார்-தாளம்போடுவார்-அன்பர்கூடுவார்-இசைபாடுவார் இதை

கண்டாருங்கிடையாது விண்டாருஞ்சொன்னதில்லை
அண்டரண்டகோடியெல்லா மொன்றாய்ச்சமைந்திருக்கு
மல்லவே-பறையன்சொல்லவோ- அங்கேசெல்லவே-நேரமாகுதல்லவோ

பாலகிருஷ்ணன் பணிந்திடுஞ் சீலகுருசிதம்பரம்
மேயனைத்தவாசையாலேகாலனைத்துப்போவேனென்று
சாத்திரம்-நல்லக்ஷேத்திரம்-சற்பாத்திரம்-ஞானநேத்திரங்கொண்டு.
(ஐயே)

கலிவிருத்தம்.

வானமேவியவும்பர்வாழ்த்தியமறையைக்
கானமேசெயும்வேதியரோடிலக்கடிமை
யீனமாமிழிகுலத்தினிலெய்தியநந்தன்
ஞானவாரிகொண்டேயவரோடுறைநினைந்தார்.

வசனம்.

இப்படிநந்தனார்சொல்ல, வேதியர்கேட்டு திவ்வியஞானமடைந்து நந்தனாரைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

இராகம்-சாமராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

சிதம்பரம்போய்நீவாருமையா நான்
செய்ததெல்லாமபசாரமையா (சிதம்பரம்)

சிதம்பரம்போவீர்பதம்பெறுவீர் வேறே
சிந்தனைவேண்டாம்நந்தனேபணிமேல் (சிதம்பரம்)

எத்திசையினுமுமக்கிணைசொல்லப் போமோ
பத்தியேமுதலென்றுபழகியபெரியவர் (சிதம்பரம்)



சித்தமுந்தெளிந்ததுதெய்வமேநீரென்று
புத்தியும்வந்ததுசத்தியமல்லவோ (சிதம்பரம்)

வசனம்.

இப்படிச்சொல்லிய வேதியரைச்சுற்றிவந்து நந்தனார் தலைவணங்கி தூரவிலகி நின்று வேதியரை ஆசீர்வதிக்கச் சொல்லுவார்.

இராகம்-ஓடியிலிரங்குவார்த்தை-துச்சடா)

| நந்தனார். | வேதியர். |
|---|---|
| சிதம்பரதெரிசனங்கிடைக்குமோ | கிடைக்கும் |
| சென்மசாபல்லியமாமோ | ஆகும் |
| பதம்பெறுந்தவநெறியறிகிலேன் | அறிவீர் |
| பரமசிவனருள்செய்வரோ | செய்வார் |
| சாதியில்தாழ்ந்தவனல்லவோ | அல்ல |
| சாத்திரமுறைமைக்குஞாயமோ | ஞாயம் |
| ஆதியம்பலத்தெய்வம்நாடுமோ | நாடும் |
| ஆனந்தமடைவேனுவையரே | அடைவீர். |

வசனம்.

வேதியர் நந்தனுருக்கு ஆசீர்வாதம்பண்ணி யனுப்பியபின்பு நந்தனாருடைய குணாதிசயங்களைக் கொண்டாடுவார்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

அடியவர்கள் மனமடியப் பேசினதுண் டபராத மனந்தங் கோடி படுநரகில் வீழ்வாரென், றெனவுரைக்கும்பாவமது பலித்ததென்று துடிதுடித்துத் தொடைநடுங்கி, நீர்வடித்து சிதம்பரத்தே துதிகள் செய்து, படிபுகழுந் திருத்தொண்டர் குணமெல்லா முலகறியப்பகருவாரே.

இதுவுமது.

சாத்திரக்குப்பையெல்லாந் தள்ளினேன்பதறுபோலே
காத்திரஞ்சுத்தமாச்சு கனிந்திடுமுள்ளம்பத்தி
மாத்திரமிருந்தாற்போது மற்றொன்றுமில்லைசைவச்
சேஷ்திரமுழுதுஞ்சுற்றிச் சேருவேன்றில்லையென்றார்.

இராகம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

எந்தநேரமும்நந்தனைசிந்தித்தா
னந்தமாகியிருந்தனரந்தணர் (எந்தநே)

பந்தந்தீரவேயிந்தவுருவாகி
வந்துதோவரந்தந்துநேசாசிவனென்று (எந்தநே)

வசனம்.

விட்டுதோ இந்தவீட்டுக் கவலைகள்பட்டுதோ பவசாகரச்சேரழித்திட்டுதோ முத்திவெள்ளம் கரைபுரண்டுதோவென்று ஏங்கித்தொழுது எந்நேரமும் வேதியர் இப்படியே சிவபத்திபண்ணிக்கொண்டு ஆனந்தமடைந்திருந்தார், அப்படியிருக்க, நந்தனர் ஆதனூரைவிட்டுச் சிதம்பரத்தைநோக்கி வருகின்றார்.

இராகம்-லாவணி-ஆதிதாளம்.

நந்தன்சிதம்பரம்வருகின்றார்-ஆதனூரைவிட்டுக்
கொள்ளிடந்தாண்டி யப்பால்வருகையிலே
தொண்டரங்கம்பரவசமாய்-எங்கும்பொங்கிச்சிவமயமாய் (நந்த)

அந்தக்கருணை விருத்தியழிந்து
அனேகசென்மவாசனையை
அனல்கொண்டுதகித்தாரே-சஞ்சித-விதையென்றுவெறுத்தாரே ()

குண்டலிசத்தியைக்கொண்டு
கிளம்பிமண்டலம்புகுந்து
சஞ்சரித்துக்கொண்டார்-குறையா-வமிர்தமுண்டார்கிளையார் (நந்)

அநாதிமாயகற்பிதமிந்த
நாமரூபாதிப்ரபஞ்சமெல்லா
மழிந்துப்போமென்பார்-குறைகட-லெழுந்தநுரையென்பார்(நந்த)

சைவத்தலங்களிற்செய்வதிதுவே
சத்தியம்பண்ணுவேனான்பறையன்
சதுர்மறைகேட்டிலேயோ-மிக்க-ஷண்மதங்கேட்டிலேயோ (நந்த)

எப்போதுநடராஜமூர்த்தியின்
இணையடிதொழுதார்க்கீடுரையே
னிந்திரபதவிகரோ-திரும்பியும்-வந்தவர்காண்கிலரோ (நந்த)



ஈசன்கருணைலேசமிலாதவ
னைத்தனைவேதங்கற்றாலு
மெட்டாப்பெருங்கொம்பி னெருங்கித்-தொட்டால்செங்கரும்பு (நந்)

ஆதனூரிலொருபுலையனுக்காக
அம்பலநாடகமாடுவீரோ
அருந்தவம்புரிந்தேனோ-கனவினில்-வருந்தியுமிருந்தேனோ (நந்த)

அரகரசாம்பசதாசிவனேபொன்
னம்பலத்தாடியதேசிகனே
ஐயேயுன்னடிமை-மனது-நையேனுன்னுடைமை (நந்த)

செழித்துவியனுலகெட்டிச்சிகரங்க
ளோங்குந்தெரியுதாகாணேயே
தில்லைத்தலமென்பார்-அன்புடன்-சொல்லப்பலமென்பார் (நந்த)

குதிப்பாரொருதரங்களிப்பார்கண்ணீ
ருதிர்ப்பாரானந்தலாகிரியால்
கொண்டாடிப்பாரே-குரவை-நன்றாய்ப்படிப்பாரே (நந்த)

பாரளந்தகோபாலகிருஷ்ணன்துதி
பாடுந்திருவடி பணிவேனோ
பாகதியடைவேனோ-பூமியில்-மறுபடிவருவேனோ (நந்த)

வசனம்.

நந்தனர் ஆதனூரைவிட்டுக் கொள்ளிடத்தருகில் வரும்போது சொல்லுகின்றார்.

இராகம் - முகாரி, அடதாளம்.

பல்லவி

கொள்ளிடக்கரைபோனான் - நந்தன்
கோபுரங்களைக்கண்டான்.

அநுபல்லவி.

பள்ளச்சாதியிலும்பறைச்சாதிநானென்று
உள்ளமுருகியவர்வெள்ளக்கரைபுரள. (கொள்)

சரணங்கள்.

ஓடத்தின்மேலேறி-நந்தன்-ஓங்குமகிழ்ச்சிமீறி
நாடெயவரும்நல்லநடனக்கூத்தாடியே
அன்புடன்கதிபெறலாமென்றுறுதிகொண்டு (கொள்)

அக்கரைபோனனே-நந்தன்-ஆனந்தங்கொண்டானே
சிக்கெனவேசிவசிதம்பரேசனைக்காண
சிந்தைமகிழ்ந்துசிவத்தியானஞ்செய்துகொண்டு (கொள்)

திருவாதிரைத்திருநாள்-செய்யுந-தினமல்லவோயிந்நாள்
திருநடராஜமூர்த்தி திருமுகந்தனைக்கண்டு
சித்தங்களிப்பேனென்றுறுதிகொண்டு. (கொள்)

---

வசனம்.

நந்தனார், இந்தப்பிரகாரம் தோத்திரஞ்செய்துகொண்டுகொள்ளிடக்கரையைத்தாண்டிவரும்போது தில்லைக்கோபுரத்தைக்கண்டு தரிசனம்பண்ணுவார்.

இராகம் - தெண்டகம், ஆதிதாளம்.

பல்லவி.

கோபுரதெரிசனமே-எந்தன்-பாபவிமோசனமே

தாபங்கள்மூன்றுந்தணிந்துவிடும்நல்ல
சோபனமுண்டாஞ்சோதிவிளங்கிய (கோபுர)

விண்ணணைந்துமேலோங்கியேகண்டுநற்
கண்ணுளார்க்கெல்லாங்காட்சியளித்திடும் (கோபுர)

அல்லும்பகலும்அமரர்துதித்திடும்
தில்லைக்கிறையோன்றினமுமகிழ்ந்திடும். (கோபுர)

வசனம்.

நந்தனார், தில்லைத்தலம் இப்படியிருக்குதென்று சொல்லுகின்றார்.

இராகம்-நவரோஸ-ஆதிதாளம்.

பல்லவி.

மாங்குயில்கூவியசோலைகளும் வாபீட்சகூப தடாகங்களுந்
தூங்கயிர்மண்டலமெத்தையுஞ் சொர்ணசபேசன் துஜமரமும்
நாலுபுரத்திலுங்கோபுரமும் நவமணிச்சித்திரமண்டபமும்
சீலமுறுந்திருவீதிகளுந் தில்லைவேதியர்மாளிகையும்
கண்டேன்கலிதீர்ந்தேன் என்கவலையெல்லாமொழிந்தேன்
மண்டலம்புகழுஞ்சபேசன்சந்நிதி வாழ்த்திப்பணிந்துநின்றேன்
தஞ்சமென்றடைந்தே னிந்தச்சடலத்தால்நொந்தேனினியென்னை
அஞ்சவேண்டாமென்றொருதரஞ்சொல்லியழைத்தாலாகாதோ



அப்பாவுஞ்சரணந்தில்லைக்கரசேயன்சரணம்
ஒப்பாரில்லாநாடகம்பயிலுமொளியேநின்சரணம்.

---

கோபுரதெரிசனமென்கிற கீர்த்தனமுதற்கொண்டு
சிதம்பரவிலாசமெனப்படும்.

சிந்து.

சிவன் வேடிக்கைதானென்று நாடிக்கொண்டே, அறியாது போலிருந்த-செப்பொன்னம்பலத்தாடியைக்கும்பிடவே, நந்தனார் தனியிருந்து-விடும்-அம்புபோலப்பறந்தையமின்றித் தில்லையருகில் வந்தார்-மனந் - தேறிக்கொண்டார்குறையாறிக்கொண்டார்,கெண்டாமணியோசை.

## திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

நாளைப்போவேனென்றுநாங்கள்சொலத்தெரியாது
பூளைப்பூவாம்பிறவிப்பிணிப்பொழியப்போவாரப்
பாளைப்பூங்கமுகுதிர்க்கும்பழம்பதியினின்றுபோய்
வாளைப்போற்றெழும்பழனஞ்சூழ்தில்லைமருங்கணைந்தார்.

வசனம்.

இது-பொழிப்புரை.

நாளைப்போவேனென்றுசொல்லி அனேகநாள் கழியச் சபாநாதரைத் தரிசனம்பண்ணவேண்டுமென்னும் பேராசையை அடக்கக்கூடாதவராய்ப் பூளைப்பூவையொத்த நிலையாமையையுடைய பிறப்புகளால் உண்டாகிய சம்பந்தம்நீங்கும்பொருட்டுப்போகின்றவராய்ப் பாளையையுடையபொலிவாகிய [illegible]ரங்கள் சூழ்ந்திருக்கும் பழைமையுற்ற தம்முடைய [illegible]ம் புற[illegible]ட்டு ஆண் வாளைமீனானது எழுப்பி விளை[illegible] வயல்களையுடை[illegible] சிதம்பரத்தின் எல்லையை அடைந்தார்.

67902

இராகம்-காகப்பிரியை-ரூபகதாளம்.

கெண்டாமணியாடுது கண்டுபிணிவாடுது

முத்திமணிதேடுது நாடுதுகூடுது (கெண்டா)
பரவசமாகுது பு[illegible]ங்கள்[illegible]குது (கெண்டா)
செனனமாறுதிகள் [illegible]ர்ந்தது (கெண்டா)

சிந்து

கெண்டாமணியோசை-காதில்-கேட்குதென்றாரதைப் பார்க்க வென்றே, கொண்டாட்டமாகிவந்தார் - கையைக் - கும்பிட்டேன் நமக்கம்பிட்டதோ, வென்றேமனமகிழ்ந்தார் - திரு வீதியிலேவந்து காதலுடன், கண்டார்களையாழி - இரு-கண்களிலானந்தம் பொங் கிடவே, நின்றார்மதிற்புறத்தே வெகு-நேத்தியென்றாரிதைப்பார்த்த தில்லை, பணிந்தார்பரவசமாய் நல்ல பாக்கியசாலிகளாக்குமென்றார் இதுதானோதில்லைப்பதி

நந்தனார் தில்லையைக்கண்ட ஆனந்த அனுபூதியைச் சொல்லு கின்றார்.

இராகம்-தெண்டகம்-ஆதிதாளம்.

தில்லைத்தலத்தைக் கண்டார் - அதுசித்துவிலாசமென்றார்-அந்த
எல்லையிலே நின்றார் - மனதேகமாக்கிகொண்டார்
இருகண்கள்நீர் வடித்தார் - கொடுங்காமவலைவயபறுத்தார்
இருகையைதூக்கிக்குவித்தார்-தன்காலைக்கோணிக்குதித்தார்-இந்த
ஐம்புலன்களை மறந்தார் - பரமானந்தக்கடலுளுறைந்தார்
தன்தேகபாவ மறந்தார் - தில்லைச்சிவனேயென்றிருந்தார்.

இராகம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

இதுதானோதில்லைத்தலம்-இத்தனைநாளுமறியேன்
இதுதானோதில்லைத்தலம்.

அதுவோவிதுவோவென் றலைந்திடும்பேயனைக்
கதிதருவேனென் றுகைகாட்டியழைத்திடும் (இது)

காசினியிலிதைக் கயிலையென்றெல்லோரும்
பேசக்கேட்டதேயன்றி பேணிப்பார்த்தறிந்திலேன். (இது)

இராகம்-அசாவேரி-திசரமதாளம்.

பல்லவி.

ஆடியபாதத்தைத்தாரும் - உம்மைத்
தேடிவந்தேன் - இதோபாரும்பாரும். (ஆடிய)

அனுபல்லவி

நாடிபுகழ்ந்துதொழும் சிவகாமிமனோகரரே
தில்லைநடராஜரே யுமதுகையைவிடமாட்டேன். (ஆடிய)



சரணங்கள்.

பாத்திரமல்லவோ பாலகிருஷ்ணன்பணிபரனே
சிதம்பரக்ஷேத்திரதெரிசனம் வீடுசேர்க்குமென்றறியேனோ
மாத்திரப்பொழுதும்மை மறக்கவென்மனதுவராதென்றுமநவி
தோத்திரம்பண்ணமாட்டேன் சுவாமி அதிலென்னசுகம் அம்பலந்
[தனில். (ஆடியபாதத்தை) *

---

வசனம்.

நந்தனார், தில்லையைக்கண்டு ஆனந்தங்கொண்டாடுவார்.

இந்துஸ்தான்-காபிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

தில்லைத்தில்லையென்றாற்பிறவி
இல்லையில்லை யென்றுமறைமொழியும்.

தொல்லைத்தொல்லையென்றகொடுவினை
வல்லைவல்லையென்றகலுந்திருத் (தில்லைத்)

கற்றோருங்கற்றோருங்களங்கமறிந்திட
பெற்றோரும்பெற்றோரும்பேசாப்பெருமையி
லுற்றோருமுற்றோரும்பொன்னம்பலந்தனில்
தத்தோந்தத்தோமென் றுநடனமிடும் (தில்லைத்)

வாடிவாடியேமாலயனிருவரும்
கூடிக்கூடிக்கொண்டல்லும்பகலுந்தான்
தேடித்தேடித்திருவடிமுடிகளைப்
பாடிப்பாடிக்கோபாலகிருஷ்ணன்தொழும் (தில்லைத்)

---

துக்கடா-இராகம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

இதுவோதில்லைச்சிதம்பரக்ஷேத்திரமீசனிருப்பிடமோ.

சரணங்கள்.

மதுரம்பொழிந்திடும் மறையோரிருப்பிடம்
மாமுனிவர்தவம் வாழும்பெருமிடம்
பதவிபெறுந்தொண்டர் பணிந்துவருமிடம்
பலதெய்வமுந்தொழும் பரகதிதருமிடம். (இது)

இராகம்-பியாகு-ரூபகதாளம்.

பல்லவி.

ஆடுஞ்சிதம்பரமோ-வையன் கூத்-தாடுஞ்சிதம்பரமோ
ஆடுஞ்சிதம்பர மன்பர்களிக்கவே
நாடுஞ்சிதம்பரம் நமச்சிவாயப்பொருள். (ஆடுஞ்)

ஆருமறியாமல் அம்பலவாணனார்
சீரடியார்பார்க்கச் சேவடி தூக்கியே (ஆடுஞ்)

பாலகிருஷ்ணன்போற்றும் பனிமதிச்சடையினார்
தாளமத்தளம்போட தாதெய்தெய்யென்று. (ஆடுஞ்)

*இராகம்-தன்னியாசி-திசரஜாதிதாளம்,

பல்லவி.

திருவாதிரைதெரிசனத்திற்குவந்தேன்-உந்தன்
திருவாதிரைதெரிசனத்திற்குவந்தேன்.

அநுபல்லவி.

திருவாய்திறந்துறவாயினி பிரவாவரந்தருவாயென்று (திரு)

சரணங்கள்.

கங்குகரையேதுபவக் கரைதாண்டவேயுனதுசிவ
கங்கைதனில்மூழ்கிப்பவக் கடலுங்குளப்படியாகவே (திரு)

அல்லும்பகலுனதுசபை அருகில்நின்றுகூத்தாடினால்
கல்லாமனமுருகும் பரகதியுங்கைவசமாகுமே (திரு)

ஆலந்தனைக்கண்டோடிய வமரர்துயர்கெடகாத்தவன்
பாலகிருஷ்ணன்பணியுந் திருப்பாதங்கனகசபாபதி (திரு)*

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தில்லையைக்கண்டபோதே தெளிந்ததென்னுள்ளமெல்லாம்
பல்லூழிகாலஞ்செய்த பாழ்வினைதொலைந்துபோச்சு
நல்லருணடனங்காட்டும் நாயனார்சிற்சபைக்குள்
செல்லுவார்மகிமைசெப்ப சேடனாலாகாதன்றே.

வசனம்.

இப்படி தில்லையைக்கொண்டாடி இதைப் பாராதவரே பாவி யென்பார்.



இராகம் - சவாயி, சாப்புதாளம்.

பல்லவி,

மார்கழிமாதத்திலா திரைநாளையில்வந்துசிதம்பரதேசிகனை
பாராதபாவிகட்கேதுமில்லையிந்தப்பாரில்வந்துபிறவாதவரே
வானிற்றொடுந்திருமாளிகைமண்டபமாமதிலுந்தில்லைமாநகரம்
காணக்கிடைக்காதப்பாயிந்தபாக்கியங்காதில்கேட்டவண்ணங்கண்
[டதுவே

ஆதிபராபரமாகியதில்லைப்பொன்னம்பலவன்வளர்சந்நிதியில்
நாதமுங்கீதமுங்கேட்குதுவானந்தநாடகவேளையைநானறியேன்.

வசனம்.

நந்தனார் சிதம்பரங்காணுததாற் சிவலோகங் காணேனென்பார்.

இராகம்-சாவேரி, ரூபகதாளம்.

பல்லவி.

சிதம்பரம்வந்துதெரிசியாதசென்மம்வீணென்றுபேசி
மனதிலெண்ணினார் பாதகமலத்தியானம்பண்ணினார்

பறையனுக்குமிந்தத்தலத்தைப்பார்த்தபின்புமோட்சபதவி
பலித்ததல்லவோபாவிசெனனமலுத்ததல்லவோ
தொண்டுகொண்டதங்களையர்பெருமையெல்லாஞ்சொல்லிச்சொல்லித் (
துள்ளித்தாவினார்ஞானவிரையையள்ளித்தூவினார்
பூதலத்தினிலிதுவேதெய்வமென்றுநந்தனானந்தக்கடலில்
பொங்கிப்பாடினார்புண்ணியத்தலமென்றுதேடினார்.

இராகம்-தண்டகம், சாப்புதாளம்,

அரகரசங்கரவண்ணலேயம்பலத்தானே
நானுந்தனடைக்கலமென்று
உருகித் துதியாரோ - ஆனந்தம்
பெருகிப் பதியாரோ
முத்தியளிக்குந்திருமூலத்தானரைக்கண்டு
பத்திபண்ணுதவன்பாமரனல்லவோ
பாருககுச்சுமையாச்சு - அவனிருந்து
மாருக்குச் சுகமாச்சு
மங்கையர்மோகமாய்மயங்கித்தினந்தோறும்
அங்கப்புளகிதமாயவரிடுமேவல்

கொண்டாழிக்குழைத்தாரே - அன்யாயமாய்
நாளையும் கழித்தாரே
வீசிநடைநடந்தமெய்யும்பொய்யாகவே
ஓசையடங்கும்போதொருவருமங்கில்லைத்
தூசியும்போகாதே காதலுந்த
ஊசியும் வாராதே
சிவசிதம்பரமென்றுதில்லைவெளியினின்றி
பவசாகரம்வென்றுபரமபதமடையுந்
தவநெறிபொருந்தாரே - பொருந்தின
ர்வரையும்வருந்தாரே
சாத்திரங்கற்றாலுஞ்சதுர்மறையுணர்ந்தாலுஞ்
சூத்திரம்பெற்றாலுஞ்சொன்னேனகங்கார
மாத்திரம்போகாதே - கருணைக்குப்
பாத்திர மாகாதே
சரணாகதமென்றுசார்ந்தடிபணியாமல்
வருணாச்சிரமவிதிவழுவாதிருக்கினுஞ்
செனனாதிகள்விடுமோ - சிரவண
மனனாதிகள் படுமோ
அட்டசித்திகள்பெற்றுவாண்டாயிரங்கால
மட்டிருந்தாலுமென்மரணபயமெய்திடு
கட்டசென்ம மாச்சே - மனிதசென்ம
மெட்டிவீணாய்ப்போச்சே
மூப்பாழுந்தாண்டிமூலத்தீமூட்டிக்கொண்
டப்பாலேநின்றாலானந்தங்காணலா
மொப்பாரில்லையடா - ஊடுருவி
நிற்பா ரில்லையடா
ஆலமிடறடக்கியம்பலக்கூத்தன்கோ
பாலகிருஷ்ணன்தொழும்பரமசிவனேயென்று
பாடிப்படி யாரோ - பருவத்தில்
தேடிப்பிடியாரோ.

வசனம்.

நந்தனார் சிவபத்திபண்ணாதவனை நிந்தனைசெய்து இன்னமுஞ் சொல்லுகின்றார்.



இராகம்-சுருட்டி-சாப்புதாளம்.

வானோர்புகழ்தில்லைவனநாதர்வாழும்
ஞானசபையைப்போற்றிநமச்சிவாயவென்று
சொல்லாதவன்-கல்விகல்லாதவன்-வெகுபொல்லாதவன்.
காசினிபுகழ்சிவகாமவல்லியைக்கண்டு
பாசமகலும்நெறிபாராதவன்சுத்தப்
பதராச்சு-ஆட்டினதராச்சு-கிருமிக்கெதிராச்சு.
ஆட்டுக்காலைச்சற்றேகேட்டுவாங்கியுள்ளே
நாட்டிக்கொள்ளாதவன்மாட்டுக்குவமையென்று
நாடாரே-கண்டுகூடாரே-என்றுந்தேடாரே.
அம்பலவாணனருகில்வந்துகையால்
கும்பிட்டிறைஞ்சாதகுருடர்களுக்குத்திற
மதியேது-பரகதியேது-பண்ணும்விதியேது.
நாக்கிருந்துஞ்சிவநாமத்தைநவிலாமல்
சாக்குப்போக்குப்பேசுஞ்சண்டியவனைக்கால
னடியானோ-கட்டிப்பிடியானோ-கையாலடியானோ.
வேதாந்தநூற்களைவிவரித்துணர்ந்தாலு
மேகாந்தபத்தியொன்றில்லாதவனுள்ள
முருகாது-கள்ளங்கருகாது-வெள்ளம்பெருகாது.
ஆத்திமதியஞ்சடையழகனடியகூத்தைப்
பார்த்துக்களிக்காதபாவி மனிதர்க்கொன்றும்
பலியாது-வினைசலியாது-சீலம்பொலியாது.
பாலகிருஷ்ணன்தேடும்பாதரசத்தைக்கண்டு
சீலமுடனேயுண்டுசெபிக்காதவன்துன்பம்
தொலையாது-இன்பம்நிலையாது-கன்மம்கலையாது.

வசனம்

நந்தனார், சிதம்பரம் பாராதகண்படைத்தாரை முகத்தைக்கெடுக்கவந்த புண்படைத்தவரென்று சொல்லுவார்.

இராகம்-ஆனந்தக்களிப்பிலே-ஒருபேதம்.

காணாதகண்ணென்னகண்ணே
வீணானகண்மயில்கண்ணதுபுண்ணே (காணாத)

சொல்லும்பொருளிறந்ததுரியவடிவமாகி
யல்லும்பகலுமற்றவானந்தப்பேரொளி (காணாத)

பசியாமருந்தளிக்கும்பரமரகசியத்தி
லசையாமலேயாடுமம்பலநாதனைக் (காணாத)

ஊராருமறியாமலொளிகண்டுபிசகாமல்
ஈராருகாற்கொண்டுயெழும்பியமண்டபம் (காணாத)

அண்டத்துளடங்காதவாசைவலைப்பூட்டி
பிண்டத்துளடங்கியபேரின்பதெப்பத்தைக் (காணாத)

நாசிநடுவிருந்துநாதனேதானென்று
பேசாமற்பேசியபெருமையையொருநாளும் (காணாத)

என்னையானறியேனென்றிகழ்ந்திடும்பேயனை
தன்னந்தனியனுக்கித்தருவனென்றழைத்தாரைக் (காணாத)

சோற்றுத்துருத்தியிதைச்சுமந்ததினாலென்ன
ஆத்திமதியஞ்சடையழகனமருங்கோயில் (காணாத)

சீலக்கமலமுகச்சிவகாமிமனமகிழ
கோலக்கனகன்றில்லைக்குழகனுடையகூத்தைக் (காணாத)

பாலகிருஷ்ணன்றொழும்பாதத்தைப்பணிந்தொரு
நாளிலும்பிறவாதநலமிக்கமவழிதேடிக். (காணாத)

---

வசனம்.

நந்தனார், பத்திபண்ணாதவன் முத்திபெறானென்று சொல்லுகின்றார்.

இராகம்-தெண்டகம்-ஆதிதாளம்.

வேதம்படித்ததும்சாத்திரங்கற்றதும்மெய்யினில்நீறுபூசுவதும்
ஆதிசிதம்பரதேசிகன்றிருவடிக்காளானாலன்றானந்தம்
உடனேதலையும்பவபந்தஞ்சொன்னேன்சொன்னேன்சொன்னேன்
ஊனுறக்கமுதலாகியநான்குமுண்டேயுலகில்யாவருக்கும்
ஆணவமலநீத்தர்களறிவாகத்தைச்சுருக்கிக்கொள்ளுவரே [னேன்
சகத்தைப்பொய்யாத்தள்ளுவரேசொன்னேன்சொன்னேன்சொன்
அருந்தவமாமுனியாகிலும்நல்லாராசைபொல்லாரறியாரோ
வருத்தப்படுத்திமனதைமயக்கிவைத்திடுமன்னமயக்கோசம்
உற்றுப்பார்த்தாலதுநேசச்சொன்னேன்சொன்னேன்சொன்னேன்
அரவணைகோபாலகிருஷ்ணனல்லும்பகலும்பணிந்தேத்தும்
திருவடிசரணாகதமென்றெண்ணித்தெளிந்தார்க்கன்றோபரபத்தி
நுழைந்தார்க்கன்றோவரமுத்தி சொன்னேன் சொன்னேன் சொன் [னேன்.

---



## திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

இப்பரிசாயிருக்கவெனக்கெய்தலரிதென்றஞ்சி
பப்பதியின்மதிற்புறத்தினாராதபெருங்காத
லொப்பரிதாய்வளர்ந்தோங்கவுள்ளுருகிக்கைதொழுதே
செப்பரியதிருவெல்லைவலங்கொண்டுசெல்கின்றார்.

வசனம்.

நந்தனார், இந்தத் தில்லைவாழந்தணர்களுடைய வீடுகள் இத்தன்மையாயிருக்க, எனக்கு அவ்விடத்திற்குப்போகுத லடாதெனப் பயந்து அந்தத்தலத்தின் மதிலின்புறத்திலிருந்து அளவற்ற பேரன்புடன்மனமுருகிக் கும்பிட்டுக்கொண்டு சொல்லுதற்கரிய எல்லைவலஞ்செய்கின்றார்.

விருத்தம்.

அம்மையாந்தில்லைமாநகர்மருங்கிடையணைந்து
சும்மையிட்டிருவிழிகளில்நீரறச்சொரிந்து
விம்மியேசிவனார்சரிதங்களைவிரித்து
கொம்மைவிட்டவர்பாடியுமானந்தங்கொண்டார்.

வசனம்.

நந்தனார், தனக்கிந்த பாக்கியங்கிடைத்ததென்று கொண்டானடிக்கின்றார்.

இராகம்-உசேனி-ரூபகதாளம்.

பல்லவி.

கொண்டானடிக்கின்றார்-தில்லைக்-கோயிலைக்கண்டுதாவிதாவி ()

அண்டரண்டந்தொழுமம்பலநாதனைக்
கண்டாரைக்கண்டுகொண்டோமென்றுநன்றாய்க் (கொண்)

அஞ்சலிகொண்டுகளித்து அரகரவென்றுசெபித்து
குஞ்சிதபதத்தைத்துதித்துக்குரவைகள்வாடிக்குதித்து (கொ)

அங்கம்பரவசமடைந்து ஆனந்தக்கடலில்விழுந்து
பொங்கிச்சிவமென்றறிந்துபுவியதிர்த்துபணிமிகுந்து (கொண்)

இருகண்களில்நீர்பெருக யிறைஞ்சிமனதுருக
அருமைச்சிவகதிதருக அம்பலவாணன்வருக. (கொண்)

இதுவுமது.

இராகம்-சௌராஷ்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கொண்டானடித்தாரே — நந்தனர் கோவிலைக்கண்டு தாவித்தாவி
கொண்டானடித்தாரே.

அநுபல்லவி.

அண்டர்மகிழ்ச்சியாலே-அரனேயென்றுமென்மேலே. (கொ)

சரணங்கள்.

பண்டுநான்செய்தபே யோகம் - அதனுலுருக்
கொண்டுவந்தேன்மானிட தேகம் - ஆகவேயிந்த
புண்டரீகப்பதவை போகம் - கண்டேனென்போல
மண்ணிலெவர்க்குண்டு யோகம் - என்றுதுதிந்துக்
கொண்டாடுமிவர்புகழைக்
கூறுவதுவேயுற் சாகம் (கொண்)

வஞ்சமனதையொரு மித்து - நினைத்தொழாத
பஞ்சபாதகப்பேரெ டுத்து - உலுத்தர்களைக்
கெஞ்சியவர்களைய டுத்து - உழலாமே
கஞ்சமலர்ப்பதங்கொ டுத்து - ஆண்டருளென்று
வஞ்சிசிவகாமிதொழும்
மணவாளனைத் துதித்துக் (கொண்)

ஒருநாற்புறமதில் சொலிக்க - ஊரெல்லைச்சுற்றி
வருவார்திரும்புவார் களிக்க - சி. சின்மேலே
இருகைகுவித்துவாழ் வளிக்க - வேண்டுவாரிந்தத்
திருநாளைப்போவார்தான் மிகுக்க - ஆகையாலிந்தப்
பெருவாழ்வடைவாரிவர்
பேதமில்லையே யுரைக்க. (கொண்)

வசனம்.

இப்படி நந்தனர் வீதியைச்சுற்றி சந்நிதிமுன்வந்து தண்டாகாரமாய் விழுந்து பணிந்து புழுதிபடப்புரண்டு ஆனந்தமடைந்து சித்தசபைதெரிந்து தெரிசனம்பண்ணுவார்.



இராகம் - லாவணி, ஆதிதாளம்.

சபாதெரிசங்கண்டான்-நந்தனுஞ்-சுபாவமுடனேநின்றான்
சபாதெரிசனங்கண்டான் - கனிதப்பிரபாவமாகியசபாபதியிருக்கும்
சதாகாலமும்வேதங்கள்மொழிந்திடுஞ் — சிவாகாரமாய் செழித்து
வளர்த்திடும், தில்லைமூவாயிரமுனிவர்கள்கூடுமல்லும்பகலுமவரவர்
[நாடும். (சபா)

வசனம்.

நந்தனர், தெற்கு கோபுரவாயினின்று சபாபதியைநோக்கித் துதிபண்ணுவார்.

இராகம்-செஞ்சுருட்டி, ஆதிதாளம்.

பல்லவி.

ஜெயஜெகதீசா-அதிசுந்தரகுஞ்சிதபாதா-ஓ-ஜெயஜெகதீசா.
தில்லையைக்கண்டேன் தேறித்தெளிந்தேன்
எல்லையில்நின்றே னினிப்பிறவேன்காண்
மனக்கினியாரீடு-கரும்புபோலினிக்குதுபார்வீடு
ஆசாபாசத்தைவேரறவெட்டியானந்தத்தின்முழுக்காட்டி
வைக்குமிதுயாருக்குங்கிடையாது-இந்தசுகம்-பாருக்குளிணையேது
சரணந்தமென்றிங்கே வந்தேன்சாமிபராக்கு
உமையடைந்தேன்ஜெனனதிகளான்மிகநொந்தேன்
வேறொருதெய்வங்களைவருந்தேன் (ஜெய)

தென்றிசைக்கோன்வந்தழைத்திடும்வேளையில்
பெண்டுபிள்ளைகள்பேயோட்டம்
கூட்டத்திலேறியபெருங்கூட்டம்
நானும்நமனுந்திண்டாட்டம்ஒருநம்பிக்கைதாரும்
நானுனக்கருள் புரிந்தாளுவேனென்று
கனவிலாகிலும்வாருந்தட்டி யெழுப்பிக்கவலைகளைத்தீரும்
அடிமையென்றுமனதுமகிழ்ந்துபாரும்
தில்லைவெளியில்வாடாவென்றுசேரும்-ஓ (ஜெய)

அரகரசங்கரனேபொன்னம்பலத்தாண்டவனே
பரமதயாபரமூர்த்தியென்றபடிபணிந்தேன்மனங்கனிந்தேன்
சாதியில்சின்னவனைல்முன்வீதியில்வந்தேனைகாதோ
பாதஞ்செய்யி னஞ்சிதம்பரமென்று

பகர்ந்தால்பழைவினைபோகாதோ
தீதில்லாதபெருந்தவத்தோர்வந்தால்
தெரிசனஞ்செய்வேன்போதாதோ
ஆதிபராபரமாகியவுனைக்கொண்டாடுவேன்
பாடுவேன்தேடுவேன்நாடுவேன் (ஜெய)

அபாரமாசியசமுசாரம்சதாவிஷயகாமாதிகோரம்
உபாயமறிந்துகரையேறப்படாதுஜெகதீசுரமாயா
விலாசகரபிதமிந்தஜெகம்அனேகசஞ்சிதவாசனைகள்
சிவோகமென்கிறபாவனையால்நிவாரணம்பண்ணும்பெரியோர்கள்
பண்ணியதொழிலின்பயனறிவார்பாலகிருஷ்ணன்தொழுங்கலழலணி
வார், எண்ணியபடியேதவமுறுவார் என்துனதென்றுமுறையிடு
வார் சமாதிபண்ணியகம்மாதிக்கிருத்தியமறுபடாதபேதைகைவிடா
தேயும்நீர், சபாபதிவெகுகிருபாநிதியுன் பிரதாமறியேன் சுபா
[வம்பறையன். (ஜெயஜெக)

விருத்தம்.

வாட்டுவாருடல்வேர்படச்சழலிடைவருத்தி
மூட்டுவார்மூலக்கனல்மதிமண்டலமுகட்டில்
மாட்டிறைச்சியையருந்தியபுலையன்றன்மனத்து
ளாட்டுக்கால்சற்றேறந்தியம்பலத்தரசே.

இராகம்-இந்துஸ்தான் காபி, ஆதிதாளம்.

பல்லவி.

தாதாதாநீயாடியபாதம்தத்தித்தெய்தத்தித்தெய்யென்றாடியபாதம்
ஆதரவாகபதஞ்சலிமாமுனிக் கானந்தநாடகமாடுந்திருவடி (தா)
ஆகமவேதபுராணங்களோதிய யோகிகளாலேதேடுந்திருவடி (தா)
சிந்தைமகிழ்ந்துகுனிந்திடவே யதிசுந்தராஞ்சிதகுஞ்சிதபாதம் (தா)
பாரளந்திடும் கோபாலகிருஷ்ணன்துதி பாடிப்பரவிப்பணியும்பா
[தம். (தா)

* இராகம்-ரீதிகௌளை, ஜம்பைதாளம்.

பல்லவி.

தாண்டவதரிசனந்தாரும்-தாமதம்பண்ணவேண்டாம் – இதுசமயந்
தாண்டவதெரிசனந்தாரும்.

அநுபல்லவி.

ஆண்டவனேயுன்பெருமையை யாரறிந்துரைசெய்வார்
நம்பியிருக்கிறேன்பேதையெந்தனுக்கொருதரம். (தாண்



சரணங்கள்.

ஆசைவலைக்குள்தங்கிபொங்கி மயங்கித்தடுமாறிமும்மதங்கள்மீறி
யானெனதென்றுரைக்கும் பாசம்கலநெறிகிறுத் திட
மாயவன்கோபாலகிருஷ்ணன் பணிந்திடும்உன்திருவடி
தாகிதகுகுஜெம் தரிதகணந்தரி திரிகுதிரிகுதீம்தீம்தக்கிடத்தக்தோ
[மென்றாடிய. (தாண்ட)*

வசனம்.

நந்தனார், பிறவிப்பிணிக்கஞ்சித் துதிபண்ணுவார்.

இராகம் - லாவணி, ஆதிதாளம்.

அம்பலவாணாஉன்சரணமடைந்தேனுனைமை
ஆதரித்தாளுவதுன்பாரமல்லவோசொல்லவோ
எடுத்திடுஞ்செனனங்கணக்கெழுதக்தலையாதென்பாடு
இன்னமும்பிறந்திடுவேனோநடேசனேயீசனே
ஆசையெனும்பெருங்காட்டிலேயாற்றும்முழுமூடன்
அகலவிடாதேயும்நம்பினேனுன்னையையனேமெய்யனே
பாரளந்தகோபாலகிருஷ்ணன்பணியுமலர்ப்பாதம்
பாவியென்னுள்ளுறவேகருணைபாருமேவாருமே.

வசனம்.

அம்பலத்திலாடும் நடனத்தைவருணித்துச் சொல்லுவார்.

இராகம் - சங்கராபரணம், ரூபகதாளம்.

பல்லவி.

ஆடியபாதா - இருவர்கள் - நாடும்வினோதா. (ஆடிய)

அநுபல்லவி.

ஆடியபாதாவயனுமாலுந்தினம்
தேடியுங்காணமற்றிரைமறைவாக
தித்தித் தித்தித் தித்தித்தியென் (ஆடியபாதா)

சரணங்கள்,

...ண்டையஞ்சிலம்பசைந்திட மேவுஞ்சடையம்புலியசைந்திட
...ந்தொண்டர்கள்மனங்குவிந்திடச் சாலோகாதிபதவியுந்
...ந்தோந் தந்தோந் தந்தோந் தந்தோமெனநடனம் (ஆடிய)

வேதமுனிவர்கள்பாடவுஞ் சனகாதியோகிகள்கூடவும்
வெகுநாதமெங்கினுமூடவுந் திருநந்திமத்தளம்போடவுந்
தகுந் தகுந் தகுந் தகுமென்று (ஆடிய)

பாலகிருஷ்ணன் துதிகள்செய்திடப் பண்ணவர்கள்பூமாரிபெய்திட
சீலமுள்ளசிவகாமிமகிழ்ந்திடத் திருச்சிற்றம்பலத்தாசனுந்
தாந் தாந் தாந் தாந் தாந் தாமென்று. (ஆடிய)

## வசனம்.

நந்தனார், அடிமைத்திறங்காட்டிச் சொல்லுகின்றார்.

இராகம்-தண்டகம் - ஆதிதாளம்.

அறிந்தறியாமலேசெய்ததபராதமையா-என்னை
ஆண்டவனே தில்லைத்தாண்டவராயா அடிமையுன்சரணம்
பருகியவண்டபகிரண்டங்கள்கடந்திடுமத்தாவுன்சரணம்
பதஞ்சலிக்காகநடம்புரியுந்திருவம்பலக்கூத்தாவுன்சரணம்
நடுவுமாதியுமந்தமுமொன்றுமிராதநிராமயனேசரணம்
பொங்குமாநந்தக்கடலேவொளியேயறிவின்னறிவேயுன்சரணம்
என்றுமந்தநிரஞ்சனநிட்களநிற்குணரூபாவுன்சரணம்
கருதிநின்மகிமைகண்டோரறியாதகடையேனுன்சரணம்
எள்ளுக்குளெண்ணைபோலெங்குநிறைந்தயீசாவுன்சரணம்
எட்டிரண்டுமறியாதவன்கனகசபேசாவுன்சரணம்.

## வசனம்.

நந்தனார், இப்படிவேகவிதமாய்க் கொண்டாடி உட்புகுந்து தாண்டவம்பாராத மனக்குறைவுகொண்டு சுவாமியை நாலுள்ளே வரலாமோவென்று கேட்கின்றார்.

இராகம் - மாஞ்சை, ரூபகதாளம்.

பல்லவி.

வருகலாமோவையா-உந்தனருகில்நின்றுகொண்டாடவும் பாடவுநா
ன், பரமகிருபாநிதியல்லவோவிந்தப்பறையனுபசாரஞ்சொல்லவோ
உந்தன்-பரமாநந்தத்தாண்டவம்பார்க்கவேநானங்கே (வருகலா)

பூமியில்புலையனாகப்பிறந் தேனே -
புண்ணியஞ்செய்யாமலிருந் தேனே
சாமியுன்சந்நிதிவந் தேனே - பவ
சாகரத்தையுமிழந் தேனே

# நந்தனார்சரித்திரக்கீர்த்தனை.

கரைகடந்தேனேசரணமடைந்தேனே - தில்லை
வரதாப்ர தாபமும் பாபமுந்தீரவே. (வருகாலமோ)

## வசனம்.

இப்படிநந்தனார் தில்லையில்வந்து கொண்டாடிப் பின்பு பத்தி மார்க்கத்தையெடுத்துப் பேசுகின்றார்.

சிந்து

இதுதானேதில்லைப்பதி-என்று-எக்கலித்தாராடிக்கொக்கலித்தார்
ஐயாவுன்சந்நிதியைக்-காண-வாசைகொண்டுவந்தேனேசமூடன்
தெருவில்பொடித்தூளை-அள்ளித்-தேகமுழுதிலுந்தாகமுடன்
தரித்தார்திருநீறுய்-நாலு-சாஸ்திரவேதங்கள்பார்த்துணரும்
பெரியோரிருக்குமிடம்.

## வசனம்.

நந்தனார், தில்லைத்தலம் இப்படியிருக்குதென்று சொல்லுகின்றார்.

இராகம்-செந்தக்கடுக்கா, தண்டகம் - ஆதிதாளம்.

ஆகமங்கள்பலவேதியங்கள்சிவனடியார்கள் கூட்டம் - மன
தேகமாகியெப்போதுமவினைகின்றயோகிமுனிக ணூட்டம் - பூ
லோகமிதுகைலாசமென்றுமிதைப்போற்றுவார்க ளாட்டம் - அதி
வேகமாகவெங்கேயாகினும்வெளியேபோகவேணு மையே
இங்கிருக்கலாகாதையே இங்கிருக்கலாகா தையே
பாவிப்பறையனிங்கேவரலாமோசுவாமிதரிசனந் தரலாமோ
பாதகமலங்களைத்தொடப் போமோ
பாவமெனைப்பிரிந்துதொலை போமோ
இங்கே ஆகாதாகா தையே
வேள்விசெய்யும்புகைமேலுலகெழும்பிப்போகு தையே
புண்ணியவான்கள்புரியுந்தவமுடன்
அரகரசிவனென்று ஆடிப்பாடிக்கொண்டு
அடியவுடன்றனைப்பிரதட்சணம்வருமிடம்ஆகாதாகா தையே
யாடுதுவெகுசெனங்கூடுது வீதிவலமாகுது திருப்பதம்பாடுது
ளாநடமாடுதுபணிவிடைபோகுதுபரவசமாகுது மெத்தப்பய
மாகுது இங்கே ஆகாதாகா தையே
வேண்டாதேஇங்கேவேண்டாதேசுப்மாயிறையாதே இங்கேதரியாதே

என்னைப்பாராதே படியேறாதே உள்ளேபோகாதே வரலாகாதே யென்பார் ஆகாதாகா ளைதயே.

சிந்து.

பெரியோரிருக்குமிடம் இந்தப்-பேயனிருப்பதுஞாயமல்ல
நானோபறைச்சாதி-இல்லை-நான்றெரிசனமாதரவாய்ப்
பண்ணுப்படுபாவி-இந்தப் பாரிலிருப்பதுசீரலவே
என்றேகுளத்தோரம்-புக்கி-எங்கிகின்றார்துயர்நேங்கிகின்றார்
ஓயாப்பெருங்கவலை-கொண்டு-உள்ளங்குழைந்திட-வெள்ளமெனக்
கண்ணீர்கரைபுரள-இரு-கைதொழுதாரவர்மெய்தொழுதார்
கீழேபுரண்டழுதார்.

## திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

செல்கின்றபோழ்தந்தத்திருவெல்லைபணிந்தெழுந்து
பல்குஞ்செந்தீவளர்த்தடயிக்கேள்வியெழும்புகையு
மல்குபெருங்கிடையோதுமடங்கணெருங்கினவுங்கண்
டல்குந்தங்குலநினைந்தேயஞ்சியணைந்திலர்நின்றார்.

வசனம்.

திருநாளைப்போவார் சிதம்பரத்துப் போனபொழுது அதனெல்லையைக்கண்டு நமஸ்கரித்து எழுந்து விருத்தியாகச் சிவந்த அக்கினியைவளர்த்து ஆகுதிசெய்கின்றயாகத்தாலுண்டாகியபுகையும்மிகுந்த பிராமணர்களின்கூட்டம் வேதமோதுகின்ற திருமடங்களையுங்கண்டு குறைவாகிய தம்முடைய குலத்தைநினைந்து உள்ளே போவதற்குப் பயந்து நின்றுவிட்டார்.

இதுவுமது - விருத்தம்.

நின்றவரங்கெய்தரியபெருமையினைநினைப்பார்முன்
சென்றிவையுங்கடந்தூர்சூழெயிற்றிருவாயிலைப்புக்கார்
குன்றனையமாளிகைகடோறுங்குலவும்வேதிகைக
ளொன்டியமூவாயிரமங்குளவென்பாராகுதிகள்.

வசனம்.

சிதம்பரத்தெல்லையில் நின்றுக்கொண்டிருந்த திருநாளைப்போ வார் தாம் உள்ளேயடைக்கூடாத அக்கோயிலின் பெருமைை



னைப்பாராகி முதலில் அந்த எல்லையைக்கடந்து ஊரைச்சுற்றி யிருக்கும் மதிலின் திருவாயிலையடைந்தார். அங்கே திண்ணைகள் பொருந்திய மலைகள்போலுயர்ந்த மூவாயிரம் வீடுகள்தோறும் ஓமங்கள் செய்யப்படுகின்றனவென்று சொல்லிக்கொள்ளுவார். சுவாமியைப் பூசிக்கின்ற தில்லை மூவாயிரவருடைய மாளிகைகள் மூவாயிரமென்றார். வேதவிதிப்படி ஆகுதிசெய்யும் பிராமணர்களுடைய வீதியில் தாம்போகக் கூடாதபடியால், அதைநினைந்து தன்குலத்தை யிகழ்ந்து இங்கிருக்கலாகாதென்று அவ்விடம்விட்டு ஒரு குளத்தருகில் வந்து சுவாமி உன்னைப் பாராதசென்மத்தை யேன்படைத்தாயென்று தாழப்புரண்டழுவார்.

இராகம்-சரசாங்கி-ரூபகதாளம்.

பல்லவி.

இந்தச்சடலம்வந்தவாறேதென்றறிகிலேன் நானேதென்றறிகிலேன்

அநுபல்லவி.

சந்ததமுந்தில்லையம்பலத்தானை
சிந்தித்துமாயச்சிக்கறுக்காமல். (இந்தச்)

சரணங்கள்.

அங்கமலங்களைப்போக்கிடுஞ்சிவ
கங்கையிலாடிக்களக்கமறாமல் (இந்தச்)

ஆடும்நடனங்கண்டானந்தமாகி
பாடிபடித்துப்பணிந்துகொள்ளாமல் (இந்தச்)

அஞ்சக்கரத்தையெடுத்துருவேற்றி
வஞ்சப்பிறவியின்மயக்கறுக்காமல் (இந்தச்)

பாலகிருஷ்ணன்றொழும்பாதத்தைக்கும்பிட்டு
சீலமுள்ளமுத்திசித்திபெறாமல். (இந்தச்)

*இராகம்-கமாஸ்-திசரமதாளம்.

பல்லவி.

கனகசபேசன்சேவடி நான்கண்டதில்லை-தில்லைக்
கனகசபேசன்சேவடி.

அநுபல்லவி.

னகசபாபதியைக் கண்டபேரைக்கண்டால்போதும்
னமரணமோகந்தீர்ந்துசிவனைச்சேரவே

தகணகசெம்தரி நம்தரி தோந்தோம்தரிகிடதாதா
ததிமிதகிடஜெணு கிடதகததிகணத் தோமென்றுடியதில்லைக்

அல்லும்பகலுமிந்த விஷையானந்தத்தில்மூழ்கி
அறிவுகெட்டமாடதுபோல் ஆனதுபொய்யோ
பல்லுயிரிலும்நிறைந்த பரமசிவஞானிகளே
பார்த்ததில்லைக்கேட்டதில்லை கோபாலகிருஷ்ணன்கவி
மானிடசாதியில்பிறந்து மங்கையர்மோகத்தில்வீழ்ந்து
தானுந்தவமுறையிழந்து தன்னரசுநாடாய்த்திரிந்து. (கனக)*

இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

கனகசபாபதி-தரிசனம் ஒருநாள்-கண்டால்கலிதீரும்.

அநுபல்லவி.

ஜனகமகாமுனிகைதொழுதேத்திய
தினகரகோடிதேசோன்மயமாகிய. (கனக)

சரணங்கள்.

மனதிலொடுங்கியகல்மிஷம் போக்கும்
மாயப்பிணியதனைமறுவடி வாக்கும்
செனனமரணசமுசாரத்தை நீக்கும்
திருவடிநிழலிலேகூடிய யார்க்கும் (கனக)

சுருதிமுடிகளிலுஞ்சொல்லிக்கொண் டாடும்
தூயவெளியையொளியாகவே கூடும்
தருமநெறியுந்தவறுதுள நாடும்
த்திங்கணத்தோமென்றுதாண்டவ மாடும் (கனக)

பற்பலயோசனைசெய்வதுந் தொல்லை
பரகதியடையவுபாயமு மில்லை
அற்புதமாகவேதாதொரு சொல்லை
அணியுங்கோபாலகிருஷ்ணன்பணியுந் தில்லைக். (கனக)

இராகம்-காகரப்பிரியை-சாப்புதாளம்.

பல்லவி.

கட்டைக்கடைத்தேறவேணுமே-கனகசபாபதிநடனங்
கண்டுகளிக்கவந்தநந்தனர் (கட்டை)



கட்டைக்கடைத்தேறட்டுமோசென்மம்
கெட்டதல்லவோயிட்டமறியேன் (கட்டை)

முத்தியளிக்கும்பத்தியிலேயென்
சிற்றம்பலவனேசித்தமறியேனே (கட்டை)

வசனம்.

தேகம்படைத்தால் சிவபத்தி பண்ணவேண்டுமென்று நந்தனர் சொல்லுகின்றார்.

இராகம்-தண்டகம், ரூபகதாளம்.

தேகம்வந்தவாறுசொல்லவோ-சிதம்பரேசனடியைத்
தினமுந்தொழுதிருப்பதல்லவோ
இந்தவிஷயசுகத்தை நாடுமோ-பாவி
மனக்குரங்குமிருப்பிடங்காணும லோடுமோ
தில்லைத்தலத்தைக்கண்டு மாச்சுதே-உள்ளே
சென்றுநடனதெரிசனம்பண்ணுமற் போச்சுதே
பறையனென்றசென்மம் போகுமோ-பாழ்
வினையாலின்னம்பாரில்வந்துபிறக்க லாகுமோ
அடிமையென்றுவந்தே னுய்யுமோ-ஒன்றையும்
நாறியேனம்பதெய்வமென்ன செய்யுமோ
பார்த்ததெல்லாமழிந்து தோணுமோ-கோ
பாலகிருஷ்ணன் பணியும்பரமன்கருணைவேணுமோ

வசனம்.

சிதம்பரதெரிசனங் கண்டபேர்க்குச் சென்மமில்லையென்பார்,

இராகம்-மோகனம்-ரூபகதாளம்.

பல்லவி.

தெரிசனங்கண்டார்க்குமறுசென்ம மில்லை
வரிசையுடனம்பலவன்வாழ்கின்ற தில்லை (தெரி)

இரவுபகலிடைவிடாதேகரசரண பத்தி
இன்பமுறுமானந்தம்பொங்கிவரும் நத்தி
பரவிவருமவனருகிலணிமாதி சித்தி
பணிந்துவந்துசிற்றம்பலத்தைவலஞ் சுற்றி (தெரி)

சொர்ப்பனமென்றிவ்வுலகம்தோன்றிவரும் வேதம்
சொன்னததுநீயென்றபடியாகும் போதம்
அற்புதமிர்தங்கமொடுநாளவகை கீதம்
அனவரதந்திருநடனமாடிவரும் பாதம் (தெரி)

அல்லும்பகலோயாதுவடியார்கள் கோஷ்டி
அரகரர்வென்றமிர்தபானமதைப் போட்டி
தில்லைவாழந்தணர்கள்கைபிடித்துக் கூட்டி
சிக்கெனவேதிரைதிறந்துபறவெளியைக் காட்டி (தெரி)

நஞ்சுண்டகண்டனுக்குக்கொன்றைமலர் சாற்றி
நல்லதிருச்சாந்தணியுமம்பிகையைப் போற்றி
குஞ்சிதபதந்தனதுமனதிலுரு வேத்திக்
கோபாலகிருஷ்ணன்றொழும்நடராஜ மூர்த்தி (தெரி)

---

வசனம்.

நந்தனார், தனக்கு தெரிசனங்கொடுக்க அம்பலவாணவர் எப்போது வருவாரோவென்று விசாரப்படுவார்.

இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

எப்போவருவாரோ-எந்தன்கலிதீர-எப்போவருவாரோ

எப்போவருவாரோ எந்தன்கலித்தீரத்
செப்பியதில்லைச் சிதம்பரதேவன் (எப்போ)

நற்பருவம்வந்து நாதனைத்தேடும்
கற்பனைகள்முற்ற காட்சிதந்தாள (எப்போ)

அற்பசுகவாழ்விலானந்தங்கொண்டேன்
பொற்பதத்தைக்காணேன்பொன்னம்பலவாணன் (எப்)

பாலகிருஷ்ணன்போற்றிம்பணிந்திடுமீசன்
மேலேகாதல்கொண்டேன்வெளிப்படக்காணேன் (எப்)

---

இராகம்-தக்கடா, ஆதிதாளம்.

வருவாரோ அருள்புரிவாரோ-எந்தன்
மனதுசலிக்குதானென்னசெய்வேன்
அரகரசங்கரவம்பலவாணவன்
ஆதரிக்காதிருப்பாரோ ஒருக்கால்வருவாரோ.



வசனம்.

நந்தனார், தான் சின்னசாதியானதால் வருவாரோ வாராரோவென்று சஞ்சலப்படுவார்.

இராகம்-சுருட்டி, ஆதிதாளம்.

பல்லவி.

வாராமலிருப்பாரோ-ஒருக்கால்-வருவாரோவறியேன்.

பாராமலிருப்பேனோபதஞ்சலிமுனிக்குப்பொற்
பாதங்கொடுத்தபரமேஸ்வரனானென்று (வாராம)

கனவினில்வந்துசழணிமுழுகும்நட்டு
மனதுமகிழ்ந்துயென்னைவாவென்றுசொன்னவர் (வாராம)

கலக்கமறவேயவர்காலுக்கும்பிட்டு
குளத்தங்கரையிநின்றுக்கூப்பிடும்வேளையில் (வாராம)

அல்லலறுத்துப்பரமானந்தமேதருந்
தில்லைத்தலத்தைக்கண்டுதெரிசனம்பண்ணியும். (வாராம)

வசனம்.

நந்தனார், இதுவரையில் வாராதபடியால் இனிமேல் தில்லைத் தலத்தை விடாமற் சுற்றிவந்து தேகத்தைத் தள்ளுவோமென்று நிச்சயம் பண்ணுவார்.

இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னம்வரக்காணிலென்-என்னசெய்குவேனவர் (இன்ன)

இன்னம்வரக்காணிலேன் தில்லைம் பொன்னம்பலவாணன்பண்ணை
யும்-நட்டென்னையுமிங்கேவாவென்னசொன்னவர்மறந்தாரே (இன்)

சொல்லும்பொருமிந்தச் சோதியேமகிழ்ந்துவாழுந்
தில்லையைவிடாமற்சுற்றித்தேகத்தைமாற்றிக்கொள்வதுநன்று (இ)

பாலகிருஷ்ணன்போற்றும்பாதச்சிலம்புகுலுங் ககோலமுடநடனங்
கண்டேன்குறைகள்தீர்ந்துதென்றுசொல்லவுந்தான். (இன்ன)

---

வசனம்.

நந்தனார், இப்படிசொல்லிக்கொண்டு கண்ணீர்சொரிந்து புரண்டழுவார்.

சிந்து.

கீழைப்புரண்டழுவார்-ஒன்றுங்-கேள்விமுறையில்லையோநாதா
வென்றேதலைகுனிந்தார்-எந்தன்-வேதனையைக்கண்டியாதரிக்குந்
தெய்வங்கிடையாதோ-பாவி-சித்தந்தெளியவிரத்திதந்து
வாவென்றழையாரோ-விண்ணில்-வானவர்கள்போற்றுமூனமிலா
கனகசபைநடனங்-கண்டு-காயங்களித்திடானடியேன்
வருந்தித்துதியேனே-எந்தன்-வாறுருகுதுவினையே
அடடாயிதென்னசென்மம்.

விருத்தம்.

சாதிபேதமுங்குணங்குறியாவையுந்தள்ளி
ஆதியாகநான்கூவினேன்றிசைதனிலணைந்தும்
மாதவம்புரிதொண்டர்கள்பணிதிரண்மறைக்கக்
கோதிலாதொருதொண்டுமிப்பாவிக்குறையோ.

வசனம்.

நந்தனார், சுவாமி உன்னை சரணாகதமென்று நம்பிவந்து துன்பப்படலாமோ சிவனே சிவனேயென்று பெருங்கூரவிட்டு தனக்கு சென்மம் போதும்போதுமென்று சொல்லுகின்றார்.

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

போதும்போதுமையா-எடுத்தசென்மம்-போதும்போதுமையா.

மாதவமுனிவர்கள்வந்திக்குந்தில்லை
வனத்திலனுதினமும்வளரும்பலவா (போது)

கோத்துநெளியும்புழுவூத்தைநரம்புகளும்
நாத்தமலங்களுறுமூத்திரக்கும்பியும் (போது)

சந்ததமடியேன்யந்திரம்போலே
வந்தெழும்வகையிலும்நொந்துமிகுந்தேன் (போது)

கொழுத்தவாணிகள்போலேயுறுத்துமிரும்புமன்னை
வயிற்றிலிருந்துபடும்வருத்தமென்னசொல்வேன் (போது)

மாதர்கள்மீதினில் மையல்கொண்டேங்கினுள்
வேதனைகொண்டவெறும்பயலானேன் (போது)

அண்ணல்கோபாலகிருஷ்ணன் பணியுந்திரு
வம்பலமேவும்பொன்னம்பலவாணா. (போது)

---



வசனம்.

சென்மமே கஷ்டம் அதிலும் புலையனாய்ப்பிறப்பது மிகவும் கஷ்டம் என்று நந்தனார் சொல்லுகின்றார்.

இராகம் - கரகரப்பிரியை, ரூபகதாளம்.

பல்லவி.

இந்தசென்மம்-இனி-எந்தஜென்மம்வந்தாலும்வரட்டும்
இந்தசென்மம்வேண்டாம்.

நந்திநடுவினில்மந்திரங்கள்சொல்லி
வந்தனைகள்செய்துசிந்தைமகிழாத (இந்த)

வேதமறிந்தவர்பாதம்பணிந்தவர்
போதமடைந்திடாதீதடைந்தேன்பாவி (இந்த)

பாவிப்பறையாநீதூரவிலகென்று
ஆவிதவித்திடப்பாரிலுரைத்திடும். (இந்த)

---

* இராகம் - கௌரிமனோகரி, சாப்புதாளம்.

பல்லவி.

எப்போதுலையுமிந்த துன்பம் - ஜெகதீசன்
கருணையிருந்தாலன்றோ இன்பம். (எப்போ)

அநுபல்லவி.

கெற்பவாசதுக்கம் ஆனாலும் கேடு
கௌரிமனோகரனை நினைம் நாடு. (எப்போ)

சரணங்கள்.

ஆசையுடனையாதவிடங்களுமுண்டோ
அனவரதமும்சுகலேசமுமில்லை தெரியாமலேபோனதன்றோ
பாலகிருஷ்ணதாசன்தொழும்நடராஜமூர்த்தியை
பூசைகள்செய்யாமற்போனது பாசமறவழியில்லை
பஞ்சகோசங்களைநானென்றுநம்பினது. (எப்போ)*

---

இராகம்-ஆஹிரி, ரூபகதாளம்.

பல்லவி.

தில்லைவலஞ்சுற்றினார்-திதப்பர-தொல்லைவலஞ்சுற்றினார்.

அநுபல்லவி.

தில்லைவலஞ்சுற்றினார் தேவருமறியாத
எல்லைவாசல்கா ந்தன்னிருளறவேண்டி. (தில்லை)

சரணங்கள்.

சாதிக்குறையைத்தானேசந்ததமுநினைந்து
வேதனைகொண்டுள்ளம்வெதும்பியேவாடி
பாதிப்பிறைபணியும்பரமசிவனைக்கண்டு
போதமடைந்துபரிபூரணமாகத் (தில்லை)

மோகவலைக்குட்சிக்கிமுழுமூடனாகவே
போகமேநிலையென்றுபுத்திகெடாமலுமை
பாகனைவேண்டிநற்பரவசமாகியே
ஏகரசத்திற்றனையிருத்திச்சுகிக்கவே (தில்லை)

ஓராறுதாண்டியேயுண்மணிக்கோட்டைகள்
சீராறுங்காணுதசிதம்பரரகசியம்
ஈராறுகால்கொண்டியிருத்திப்புலனைந்தும்
பேராறுபெருகியேபெருவெளிகாணத் (தில்லை)

---

வசனம்.

இப்படித் தில்லைத்தலத்தை விடாமல் சுற்றிவந்தால் தன்னிடம் சுவாமி வருவாரென்று மனதைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

இராகம்-யமுனாகலியாணி, ஆதிதாளம்.

பல்லவி.

வருவார்வருவார்மனமேநீமயங்காதிருசொன்னேன்சொன்னேன்.
வேணதுதருவார்கருணைபுரிவார்தில்லைத்திருவம்பலவர்
பரகதியுந்தருவார்சாதிபறையனென்றுபாரார்நீயதை
உறுதிகொள்ளவேணும்மெய்யன்புடனே
அரகரவென்றொருதரஞ்சொன்னாலும்போதும். (வருவார்)

---

வசனம்.

நந்தனார், தன்னை இரட்சிக்கும் சமையம் இதுதானென்று சொல்லுகின்றார்.



இராகம்-தனாசரி, ஆதிதாளம்.

பல்லவி.

இதுநல்லசமையமையா-இரட்சிக்க இதுநல்லசமையமையா.
இதுநல்லசமையமையா என்னைரட்சித்தாளும்
ஈச மகேச நடேச சபேசா (இதுநல்ல)

பாலகிருஷ்ணன்போற்றும்பாதங்களைக்காட்டி
சீலமுள்ளமுத்திசேருவதற்காக. (இதுநல்ல)

---

வசனம்.

நந்தனார், இவ்வளவுசொல்லியும் சுவாமி இரங்காமல் போக வேண்டியதென்னவென்று சொல்லுகின்றார்.

இராகம்-பியாகு, ரூபகதாளம்.

பல்லவி.

இரக்கம்வராமற் போனதென்ன காரணம்.

அநுபல்லவி.

கருணைக்கடலென்றுன்னைக் காதில்கேட்டுநம்பிவந்தேன். (இ)

சரணங்கள்.

ஆலமருந்தியண்டருயிரையாதரித்தவன்கீர்த்தி
பாலகிருஷ்ணன்பாடித்தினமும்பணிந்திடும்நடராஜமூர்த்தி
பழியெத்தனைநான்செய்கினும்பாவித்திடுஞ்சிதம்பரமென்று
மொழிகற்றவர்வழிபெற்றவர்கனகசபாபதியின்னும். (இரக்க)

கலித்துறை.

அண்டமானதியாவையும்வேழ்விகளனைத்தும்
குன்றிலாத்தவப்புண்ணியமாமலைகுவித்தும்
வின்றிடாமலேயீசனுட்களித்தவிவேகம்
மன்றுளாடியபதத்திலேமனம்வருமே.

---

வசனம்

நந்தனார், மகாபுண்ணியசாலிகளுக்கு முத்திவருமேயன்றி னக்குவாராதென்று சொல்லுகின்றார்.

இராகம்-தனாசி, ஆதிதாளம்.

சாதியில்தாழ்ந்திடும்புலையனுக்குப்பர — கதியோ - வேத
சாஸ்திரநான்கினுமோதயாதது — விதியோ
நண்டுநந்தைகளைவதைசெய்தருந்திய — தேகம் - மன்றுள்
நடனதெரிசனங்காணவென்றலதி — மோகம்
எந்தவழியைக்கண்டுபேடுவது — ஞாயம் - செக
தீசனுக்கன்றோதெரியுமந்த — பாயம்
சிதம்பரம்போவேனென்றுரையாத — பாவி - இந்த
சென்மமெடுத்துவீணாகத்தவிக்குதென் — னாவி.

வசனம்.

நந்தனார், இப்படி நான் ஈனசாதியாயிருந்தாலும், உம்முடைய சரணாரவிந்தபத்தியை மறந்தவனல்லவென்று சொல்லுகின்றார்.

இராகம் - மணிரங்கு, ரூபகதாளம்.

பல்லவி.

எப்படிகெட்டாலுமுந்தன் பொற்பதமறவேனானையா.
அற்புதமாகியதில்லையம்பலவாணனேயென்
சொற்பனத்திலுமுண்மையன்றி மெய்ப்பொருளையும்வேண்
தப்பிதமெத்தனைசெய்கினும் [டேன்
கைப்பிடித்தாண்டுகொள்ளும். (எப்படி)

## திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

இவ்வண்ணமிரவுபகல்வலஞ்செய்தங்கெய்தரிய
வவ்வண்ணம்நினைந்தழிந்தவடித்தொண்டரயர்வெய்தி
மவ்வண்ணத்திருப்பிடற்றார்மன்றுள்நடங்கும்பிடுவ
தெவ்வண்ணமெனநினைந்தேசாரிநெடுந்துயிலார்.

வசனம்

இந்தப்பிரகாரம் இராப்பகலாக வலம்வந்துகொண்டு உள்ளே போகக்கூடாத தன்மையைநினைந்து வருத்தப்பட்டயர்வுபொருந்தியநந்தனார், கனகசபையில் ஆடுகின்ற நடனத்தை எப்படிதரிசிக்கலாமென்று விசனத்தோடும் நித்திரைசெய்து மறுபடியும் எழுந்து சொல்லுகின்றார்.



இராகம்-கன்னடபியாகு ஆதிதாளம்.

பல்லவி.

விருதாச்சென்மமாச்சே-வந்தும்-விருதாச்சென்மமாச்சே
சதாகாலமுமையன் சந்நிதானத்திலிருந்து நிதானம்பெறாமல்(விரு)

முத்தியளித்திடும்மூர்த்தியைக்கண்டு
பத்தியைப்பண்ணிப்பதமடையாமல் (விருதாச்)

பொற்சுழலசையப்பொதுவிலிருந்து
தக்கவாராடுந்தன்மையைப்பாராமல் (விருதாச்)

தில்லைக்கதிபதிதெரிசனங்கொடுத்து
எல்லையில்லாவென்றிரங்கியழைத்தும் (விருதாச்)

இராகம்-தேவகாந்தாரி ஆதிதாளம்.

பல்லவி.

என்னேரமுமுந்தன்-சந்நிதியிலேநா-னிருக்கவேணுமையா

அநுபல்லவி.

தென்னஞ்சோலைதழைக்கும் தென்புலியூர் பொன்னம்பலத் தரசே
யென்னரசே (என்னேர)

சரணங்கள்.

திசையெங்கினும்புகழுஞ்சிவகங்கையுந் தேவசபையுஞ் சிவகாமிதெரிசனமும், பசிகொடாதுபார்த்தபேர்க்குக் கலக்கங்கள்பறந்திட மகிழ்ந்துன்னைப்பாடிக்கொண்டு (என்னேர)

பஞ்சாக்ஷரப்படியுங்கொடிக்கம்பமும் கோவிலழகும்அரிதானரகசியமும், அஞ்சல்கூறும்வீரமணிகளோசையும் அந்தக்கரணமயக்கந்தீர்ந்துபாடிக்கொண்டு (என்னேர)

சிலமருவுந்தெருவுந்திருக்கூட்டமும் தேவருலகில்கிடையாத வதிசயமும், பாலகிருஷ்ணன்பணியும்பாதம் பவமெனும்பயங்கள்தீர்ந்து மலர்கள்தூவிதொழுதுகொண்டு (என்னேரமு)*

வசனம்.

நந்தனார், தனது பதவிக்கு யோக்கியமல்லவென்று தள்ளுவாரோ, கொள்ளுவாரோ அப்படித் தள்ளினாலும் தில்லையிலேதானே

தேகத்தை விடுவதேயன்றி திரும்பிப் போகமாட்டேனென்று சொல்லிப்புலம்புவார்.

இராகம்-புன்னாகவராளி, ரூபகதாளம்.

பல்லவி.

தள்ளுவாரோ-எந்தனைக்கைக்-கொள்ளுவாரோ

தள்ளிவிட்டால்நான்போகேன் தனித்திருக்குஞ்சமையமல்ல
அள்ளிவிட்டேனன்பையேனம்பலவாணனொருக்கால் (தள்)

எனதனதென்றபிமானவிச்சைபறும்நிஷ்டைபண்ணி
மனமிறந்ததுவெளியில்மருவாதபாவியென்று (தள்)

நாறுமிந்தபொய்யுடலைநாளையெண்ணிநான்சுமந்து
நாறுபட்டதுன்பமெல்லாந்தொலைந்ததென்றுயிங்கேவந்தும் (தள்)

பாலகிருஷ்ணன்தேடிவரும்பாதமலர்நான்காணேன்
வேல்விழியார்மோகங்கொண்டவிவேகமற்றமூடனென்று (தள்)

சிந்து.

அடடாஇதென்னசென்மம்-என்று அத்தனாருமெல்லைசுற்றிவந்தார்
இரவும்பகலோயா-இதை-ஈசன்கண்டுவிசுவாசமுடன்
பாலகிருஷ்ணன்பணியும்-திருப்-பாதமுள்ளதில்லைநாதனவன்
கனவிலுருவாகி.

## திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

இன்னல்தருமிழிப்பிறவியிதுதடையென்றேதுயில்வா
ரன்னிலைமையம்பலத்துளாடுவாரறிந்தருளி
மன்னுதிருத்தொண்டரவர்வருத்தமெலாந்தீர்ப்பதற்கு
முன்னணைந்துகனவின்கண்முறுவலொடுமருள்செய்வார்.

வசனம்.

இப்படி நந்தனார், இரவுபகலோயாமல் தில்லைத்தலத்தைச் சுற்றிவருவதால் தேகவருத்தமடைந்து வருத்தத்தினால் மயங்கிச்சாய்ந்துநித்திரையடைந்தார். அந்தநித்திரையிலே நடராஜமூர்த்திவந்து காட்சிதந்து சொல்லுவார். எமதன்பிற்சிறந்த நந்தனாரே உம்மிடத்தில் நமது பத்தர்களாகிய வேதியர்களை வரச்சொல்லுவோம், அவர்கள் முன்பாகநீர் அக்கினிப்பிரவேசமாகியெழுந்து வேதியர்களுடனே சபாப்பிரவேசம் பண்ணுமென்றுரைபகர்ந்து ஐயன் அந்தர்தானமானார். நந்தனார் கனவில் காட்சியானதைக்கண்டு களித்து விழித்தெழுந்து அளவில்லாத சந்தோஷங்கொண்டு நன்றியறிந்து சுவாமியைத்தோத்திரம்புரிந்து சொல்லுகின்றார்.



*இராகம்-அரிகாம்போதி-திசாம்புதாம்

பல்லவி.

பார்க்கப்பார்க்கத்திகட்டுமோ-உன்பாததெரிசனம்
பார்க்கப்பார்க்கத்திகட்டுமோ.

அநுபல்லவி.

ஆர்க்குமானந்தம்பொழியுந்தில்லைத்தாண்டவராயா (பார்க்)

சரணங்கள்.

தில்லைமூவாயிரமுனிவர்கள் தினமும்பூசித்திடும்பதம்
சிற்சபையில்நின்றிமிதிமிதோமென்றாடியபாதம்,
எல்லையில்லாதயின்பம் எந்தனுக்கருள்செய்திடும்பதம்
இரவும்பகலுமாயன்கோபாலகிருஷ்ணனேத்தும்பாதம். (பா)*

இராகம்-தண்டகர், ஆதிதாளம்.

பல்லவி.

சந்நிதிவரலாமோ-சுவாமி-தெரிசனந்தரலாமோ. (சந்நிதி)

| | |
|---|---|
| இல்லறவாழ்வாம் | பனிமூடி |
| இருந்தேனன்றோ | மிகவாடி |
| அல்லும்பகலுங் | கொண்டாடி |
| அடியேன்கனக | சபைநாடி (சந்நிதி) |
| வீதியிலேசற்றே | வந்திருந்தேன் |
| வேடிக்கைப்பார்த்துக்கொண் | டிருந்தேன் |
| ...தியிற்முழ்ந்தவனென் | றறிந்தேன் |
| ...த்திருப்போமென்றிங்கே | வந்தேன் (சந்நிதி) |
| ...லால்விசிக்கனல் | மூட்டி |
| கலைமதிமண்டபமே | லோட்டி |
| பாலாறுபெருகவேயெனைக் | கூட்டி |
| பார்த்ததுமில்லைநான் | தோட்டி (சந்நிதி) |

வசனம்.

நந்தனார், தான்கண்ட சொர்ப்பனத்தைக் கொண்டாடுவார்.

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

சொர்ப்பனங்கண்டுகொண்டேன்-அதிசய
சொர்ப்பனங்கண்டுகொண்டேன்.

சொர்ப்பனங்கண்டுகொண்டேன் எல்லாங்கற்பனையென்றறிந்தேன்
வேத-தற்பதவாக்கியமேயுருவாகியவற்புதநடனம்புரியஇன்று (சொ

அம்பிகைமணவாளன் மான்மழு வணிந்திடுஞ்செந்தோளன் - செம்
பொன்னம்பலந்தனிலாட மத்தளம்போட மறைபாடக் கொண்டா
[ட (சொர்)

மண்டலத்தோராசைதீர்ந்து மண்டபமணியோசை நேர்ந்து
மனதுகனிந்துருகமறலிகருகவரந்தருகவருக (சொர்)

மங்கையர்மோகமில்லாதாரையும் வருந்தியழைக்கும்பொல்லா-தாகி
ய-மாயப்பிணியைவெல்லமருந்துசொல்லவழிபிற்செல்ல நல்ல ()

பண்ணவர்முரசடிக்கபதஞ்சலி வியாக்கிரமர்பதந்துதிக்க - மாயன்.
கோபாலகிருஷ்ணன் களிக்கவுடுக்கையெடுக்கவுலகந்துறக்கசிறக்க ()

வசனம்.

நந்தனார், தான் கண்டகனவு நிசமோ பொய்யோவென்று சந்தேகப்படுவார்.

இராகம்-சூரியகாந்தம், சாப்புதாளம்.

பல்லவி.

கனவோநினைவோ கண்டதுவ்வேறோ
மனதிலுறுதிகொள்ளவழியொன்றுங்காணேன் (கனவோ)

நித்திரைதனிலொருசித்தனுருவாய்வந்து
முத்திதருவேனென்று நத்திப்பேசினதுண்டு (கனவோ)

ஆருமிகழ்ந்துதள்ளும் நாறும்புலையனென்னை
வாரும்பரமபதஞ் சேரும்மென்றழைத்தது (கனவோ)

கிட்டநெருங்கிவந்து தட்டியெழுப்பியொரு
வெட்டவெளியைக்காட்டிகட்டிறேயிட்டது. (கனவோ)



வசனம்.

நந்தனார், தான் கனவில் கண்டதுபோலே சுவாமிவருவாரோ வாராரோ வென்று சஞ்சலப்படுவார்.

இராகம்-சாமராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

வருவாரோ வரந்தருவாரோ-எந்தன்
மனதுசஞ்சலிக்குதையோ வெப்போது. (வருவா)

திருவாருந்தென்புலியூர்திருச்சிற்றம்பலவாணர்
குருநாதனாகவந்து குறைதீர்க்கக்கனவுகண்டேன்
இருவினைப்பிணிகளைக்கருவறுத்திடுகிறேன்
பயப்படாதேயென்றுசொல்ல (வருவா)

மறைபாலும்வழுத்தறியாமகிமைபெறுநடராஜன்
நறையூறுஞ்சேவடியைநம்பினவனல்லவோ
அனுதினஞ்சிவசிதம்பரமென்ற
வடிமையென்றருள்புரிந்திடவிங்கே (வருவா)

பணிமார்புஞ்செஞ்சடையும்பார்க்கமனமுவந்து
பணியுங்கோபாலகிருஷ்ணன்துதிபரமதயாநிதி
பவக்கடலடிக்கடிபெருகுதுநிலைக்குமோ
மலைக்குதுகரையேற்ற. (வருவா)

வசனம்.

நந்தனார், இப்படி அநேகவிதமாய் வருவாரோ வாராரோவென்று பலவிதமாய்க் கொண்டாடுகின்றார்.

## திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

இப்பிறவிபோய்நீங்கவெரியினிடைமூழ்கி
முப்புரிநூன்மார்பருடன்முன்னணைவாயெனமொழிந்த
வப்பரிசேதில்லைவாழந்தணர்க்குமெரியமைக்க
மெய்ப்பொருளானாரருளியம்பலத்தேமேவினார்.

வசனம்.

நந்தனார், கனவிலேவந்து சொல்லிய நடராஜமூர்த்தி தில்லை மூவாயிரம்பேர்கள் கனவிலேசொல்லுவார். பத்தர்களே? எனக்கு

மிகவும்பிரியமுள்ள திருநாளைப்போவாரென்னும் நாமத்தைக்கொண்டு யென்னைக்காணவேண்டுமென்று தவ்வேளைகாணிக்கைக்கொண்டு சாதியிற்றாழ்ந்தவனென்று பயந்துகொண்டு யென்னைத்தவிர மற்றதெல்லாம் அநித்தியமென்று பக்தி பண்ணிக்கொண்டு முத்தியடையவேண்டுமென்று தில்லையைச் சுற்றிக்கொண்டு தெற்குகுளத்தங்கரையில் நின்றுக்கொண்டு இருக்கிறார். அவரை என்னைப்போல் நினைத்து நீங்களெல்லோரும்போய் அவரை அக்கினியில்மூழ்கச்செய்து அழைத்துவாருங்க ளென்றுசொல்லி சுவாமி மறைந்தார். இப்படிக் கண்டகனவை மூவாயிரம்பேர்களும் பேரம்பலவாசலில் வந்து ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளுகின்றார்கள்.

இராகம் - சங்கராபரணம், அடதாளம்.

கண்ணிகள்.

அதிசயமொன்றுகேளப்பா தீட்சதரே
பார்த்தாத்திரிப்போதி லென்னே-என்றான்
மதிபரவசமாகத்திருவம்பல
வாணன்கனவில்வந்தா னென்னை
வாஸ்தவமெனக்குமிந்தவண்ணமாகக்கனவில்
வந்துரைத்தாரறிந்தேன் நாடி-உந்
யாமத்தமயமாகுமுன்னமப்படிக்கு
வமைப்பாதுத்தமமென்று ஓடி
அப்போதங்குவந்தவப்பண்ணதீட்சதர்
அமாமிதுவுங்கிர் சமந்தான்-என்றோன்
செப்பியசொற்படிச்செந்தீவளர்த்திட்டுச்
செய்யவேண்டுமென றியந்தான்
அவசியமென்கிறீர்காரியந்தெரியாமல்
ஆருக்கடுக்குமோர் பறையன்-சிறந்த
தவசிரேஷ்டர்சூழ்ந்தலத்தில்வருவதற்குத்
தலைபத்தோவவன்வந்தா லெல்லையல்
பத்தியுள்ளவனேபரமனுக்குரியதோமல்
பதஞ்சலிபுலிப்பாதர் சாட்சி-சிவன்
சித்தத்தின்படிசெய்துசெனனக்கரைகடப்போம்
தெளிவீர்நீங்களிந்த சூட்சி
என்றாங்குசிவசங்கரதீட்சதர்
இன்னமுந்தாபஸ மேதேதா-சீரான்



ஒன்றுந்திருச்சந்நிதிக்குவருவதற்கு
வொருநாளுங்கட்டுத் தகாதே
சொல்லுமென்றாரவராமென்றாருங்கட்குச்
சித்தந்திலுள்ளசந் தேகம்-தெளிய
அல்லும்பகலுமோயாமலேசாஸ்திர
மாராய்ந்தவதற்குமறைச் சாகம்
தரும்படிப்பேசிச்சந்தேகந்தெளிவது
தக்கதென்றுரைத்த மொழியே-நம்பி
பெருங்கூட்டமாகவேகூடிச்சென்றாவர்
பேதமறத்தக்க வழியே

---

வசனம்.

தில்லை மூவாயிரவர்கள் சாஸ்திரிமார்களிடத்திற் சந்தேகந்தெளிதல்.

விருத்தம்.

மறைக்கிழவரிவ்விதஞ்சென்றார்களாங்கே
மனுவிக்கியானிகளாசிர்வாதஞ்செய்து
வந்தகாரியமேதோவுரைப்பீரென்ன
மன்றாடுவார்தங்கள்கனவிலிற்றோன்றி
குறைந்தமதிப்புலைச்சாதிவந்துதித்தோன்
சோதிநாமந்தனென்போனவனல்லன்பன்
கூறுமில்லூரெல்லைவலம்வருவான்நாளை
கொணர்ந்தவனைத்தீமூழ்கச்செய்தேயப்பால்
முறைமையொடுசந்நிதியில்நம்முன்னாக
விடுங்களென்றுவருளிச்செய்தவர்மறைந்தார்
மூதுணர்ந்தோர்க்கிதுதெரியச்சொல்லவந்தோம்
மொழியுமாறுத்தரம்யாதென்றார்நீதி
அறிந்தவன்றோமந்தப்படிக்கேசெய்வ
தழகாகுமென்றனர்பின்மகிழ்ச்சியாலே
அந்தத்தில்லைமாநகரத்தெல்லைசுற்றி
யாடுவார்நந்தனரைத்தேடுவாரே.

## திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

தம்பெருமான்பணிகேட்டதவமறையோரெல்லாரு
மம்பலவர்திருவாயின்முன்பட்சமுடனெய்தி

யெம்பெருமானருள்செய்தபணிசெய்வோமென்றேத்தி
நம்பியுபெருகவாநந்திருக்கொண்டாய்பாற்றார்த்தார்.

வசனம்.

தமதுபிரானுடைய, சபாநாதரிட்ட கட்டளையைக்கேட்ட தவம் பொருந்திய பிராமணர்களெல்லாரும், அம்பலவாணரது கோயிற் றிருவாயிலின் முன்புகுந்தப்பத்தோடு நம்முடைய ஆண்டவரருள் செய்த ஆழியத்தைச்செய்வோமென்று வணங்கித்திருநாளைப்போவா ரைத் தில்லைமூவாயிரவர்களே நடவருகின்றார்கள்.

இந்துஸ்தான்-நாதநாமக்கிரியை- ஆதிதாளம்.

பல்லவி.

தொண்டரைக்காண்கிலேமே-தில்லையில்வந்த-தொண்டரைக் காண் [கிலேமே.

அண்டசராசரமெங்கும்படியளந்து
மன்றுளாடியமன்னவர்க்கடிமைத (தொண்)

சொல்லும்பொருளுமற்றப்போதமயங்கிமான்
டல்லும்பகலுமற்றவம்பலவாணன் (தொண்)

அஷ்டதிசையும்பரிபூரணமாகவே
மட்டிலாதுவளர்ந்தோங்கியநாதன் (தொண்)

வாசியடங்கிநடுவணைவழிகண்டால்
தேசிகவடிவுடன்தெரிசனந்தந்திடும் (தொண்)

பாலகிருஷ்ணன்பணிந்தேத்தியபாதன்
கோலச்சிலம்பணியுங்குண்டலநாதன். (தொண்)

இராகம்-இந்துஸ்தான்காபி, ரூபகதாளம்.

பல்லவி.

திருநாளைப்போவார்தெரிசனங்காணத்
தில்லைமூவாயிரமுனிவர்கள் வருகிறார். (திருநாளை)

பத்திவெள்ளமதுகரைபுரண்டோடும்
பரமானந்தக்கடல்முழுக்காட்டும் (திருநாளை)

அரகரசங்கரசிவனென்றுசொல்லும்
அநித்தியசடத்தக்காயத்தைவெல்லும் (திருநாளை)

அடியவரேமெத்தப்பெரியவரென்று
அம்பலவாணரருள்விடைகொண்டு. (திருநாளை



இதுவுமது சிந்து.

இராகம்-சௌராஷ்டிரம், ஆதிதாளம்.

பல்லவி.

தேடித்தேடித்திரிந்தார் பாரும்-நந்தனார்தம்மைத்
தில்லைமூவாயிரவர் யாரும்

அநுபல்லவி.

நாடுஞ்சதுர்வேதப்பிர காசனை
நங்கைசிவகாமிப்பிரா ணேசனை
ஆடும்பதநடன சபேசனை
ஆவலாகத்தொழுவோர்க்கருள் நேசனைத் (தேடி)

சரணங்கள்.

தண்டாமரைமலர்த் தடமும்-மாதர்களாடிக்
கொண்டாடிக்கொண்டாடித் திடமும்-அன்னமளிக்க
உண்டானத்தங்கு மடமும்-சோரர்பரவுஞ்
சண்டாளர்வாழுங்கா டிடமும்-அன்றிச்சூத்திர
சாதிமுதலானபல வாடை-பல்லாண்டு
ஓதியுலாவிவரு மேடை-மனுவிக்கியான
நீதியுணர்ந்தோர்தெரு மாடை-இன்னமும்பல
பாதிரிகளாகுந்தின்னை மேடை உன்னதமாகக்
கொங்குமிகுத்ததருசெங்குமணத்திடுஞ் சோலை-கருப்பஞ்சோலை
தங்குமுபார்ந்துசகித்திடும்வாழையின் சோலை-தாழையின்சோலை
தெங்குமிலுப்பையுமொன்றுபொருந்திய சோலை-மாவினச்சோலை
துங்கமதானபலாக்கமுகோங்கிய சோலை-மற்றுளசோலை
எங்குஞ்சுற்றிப்பார்த்துமறையோர்கள்தங்கள் தங்க-ளங்கமேங்க

நதிதவழும்
பொங்கலரணிந்தசிவசங்கரன்கிருபையிதென்றே யோங்க

கூக்குரலிட்டுச்
சங்கையறச்சென்னியிற்கரங்களைக்குவித்தெங்களைத் தாங்க

மனமுவந்து
அங்கேயெங்கள்பங்கினிலிருந்துமேழைகள்வருத்தம் நீங்க

கிருபைசெய்வதற்கு
உன்னைத்தேடவென்றுவந்துகொண் டாடி
உரியவேதமந்திராதிகள் பாடி
முன்னஞ்சொன்னநந்தனார்வாவை நாடி
மூளுங்கோட்டைக்காற்றெனவிரைந் தோடி
தேடித்திரிந்தார்.

வசனம்.

இந்தப்பிரகாரம் தில்லைமூவாயிரவர்களுக்கும் தடி அனுத்து ஓரிடத்தில் யாவருங்கூடி சுவாமியைத் துதிசெய்வதாக நிச்சயஞ்செய்து தோத்திரஞ்செய்கிறார்கள்.

இராகம்-கல்யாணி, அடதாளம்.

பல்லவி.

உன கிமை யைஒருவருமறியார்
உலகிலுள்ளோ ரையனே

அநுபல்லவி.

பன்னகசயனனும்பதுமாசனவேதனும்
பார்க்கவவர்க்குமெட்டாத — யோகனே
பகரரியமலைமகளோர் — பாகனே (உன)

சரணங்கள்.

கனவினிலேவந்ததெங்களுக்குச்சொன்ன — அந்த
காரணமறிந்திநாலையிலே — யெழுந்த
இனத்தார்நாங்கள்யாருமிசைந்தொருமித் — திந்த
எல்லைமுழுதுந்தேடியிளைத்தோமெங்களுக் — கந்த
இணையில்லாநந்தனரு — மகப்பட
இல்லையென்னசெய்வோம் — ஸ்திரப்பட்ட(உனது)

அடையலர்திரிபுரமனலாகவே — முத்து
வான்பாகமான்மழுவுங்கையிலே — பிடித்த
விடைப்பாகனேகாளிவெட்கும்படி — நடித்த
மெய்யாதுயர்தவிர்த்தாளையாவென்றே — படித்த
வாறுநீயறிந்தருள்செய் — பையனே
வனசநிகர்பதசரணத் — தய்யனே(உனது)

அன்னைசிவகாமியனுதினம்வளர் — தில்லை
யம்பொன்னகர்வருவோர்க்காங்கொருதுய — ரில்லை
உன்னையன்றியுலகத்தாக்குப்பொரு — ளில்லை
யுத்தமனேயெங்கட்குரியதுணையு — மில்லை
ஓதுநந்தனார் தம்மைவசச் — செய்யும்
ஊழின்வினைதவிர்த்தவர்க்கு அருட் — செய்யும்(உனது)



வசனம்.

இவ்விதமாகச் சுவாமியைத்துதித்துத் தில்லை மூவாயிரவர்களனைவரும் நந்தனைத்தேடி யலுக்துவருமார்க்கத்தில், ஒதுப்புறமாக நின்றுக்கொண்டிருந்த நந்தனார் வேதியர்களைக்கண்டு தூரவிலகிநின்று தலைவணங்கிச் சொல்லுகின்றார்.

விருத்தம்

திட்டமுடனடிபணிந்துமனமொடுங்கித்தவம்புரியுந்தில்லைமன்று
ளட்டமிடுநடராஜன்கனவின்கண்சொன்னமொழிநம்பிக்கொண்டு
இட்டமுடன்றிருநாளைப்போவாரிடம்வேதியர்களேகும்போது
கிட்டநெருங்காதேயுமென்றேவிலகியோர்வார்த்தைக்கேளீரென்றார்.

இராகம்-செஞ்சுருட்டி, ரூபகதாளம்.

பல்லவி.

கிட்டநெருங்கிவரவேண்டாஞ் சுவாமிகாள் - காதில்
கேட்டபேர்க்குப்பாவம்வருமெனதுசென்மம். (கிட்ட)

சிட்டர்களெழுந்தில்லைதன்னில்செழித்துவாழும்வேதியர்கள்
இஷ்டமிதுவல்லவேயென்றுசொல்லவேணுமோ — புலையன்(கிட்ட)

உலகினில்கடைச்சாதியெந்தனுக்குவகையாருமில்லையே
பலவிதகுஷ்கருமஞ்செய்துபாரில்வந்த — புலையனையே(கிட்ட)

வேலைசெய்துவு...ம்புவளர்க்கவவனுநிந்தநாயடியேன்
தோலுமெலும்புமுதுகில்சுமந்துவலையும் — புலையனையே(கிட்ட)

செக்கமாடிழுப்பதெனதுசேவகம்பாம்படித்துமெல்லை
சுற்றிவந்துகழுக்கடித்துச்சுடலைகாக்கும் — புலையனையே (கிட்ட)

வசனம்.

இப்படி வணங்கிச்சொல்லிய திருநாளைப்போவாராகிய நந்தனைப்பார்த்து வேதியர்கள் சொல்லுகின்றார்கள்.

இராகம்-சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

சாதியிலுயர்ந்தாலென்ன-இந்தப்-பேரும்பெருமையுமில்லையே.
பெருமைகொண்டதாலே சங்கரனு — ருகில்வந்து
...ராவுடன்வரங்களீய்ந்து அழைப்பாரோ — சேர்ப்பாரோ
அளிபெருகவேயீசன்கழலைபறிகிலுன்னி — யடிபணிந்து
தெளிந்திடாதபேரைமுத்திகூடுமோநாடுமோகூடுமோ. (சாதியி)

வசனம்.

இப்படிச்சொல்லிய வேதியர்கள் தாங்கள்வந்த காரியம்பேசுவார்.

## திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

ஐயரேயம்பலவரருளாலிப்பொழுதணைந்தோம்
வெய்யவழலமைத்துமக்குத்தரவேண்டியெனவிளம்ப
நையுமனத்திருத்தொண்டர்நானுய்ந்தேனெனத்தொழுதார்
தெய்வமறைமுனிவர்களுந்தீயமைத்தபடிமொழிந்தார்.

வசனம்.

ஐயரே, நடேசருடைய கட்டளையால் இப்போது வெவ்வி தாகிய அக்கினியைமூட்டி உம்மை அதில் மூழ்கும் படிக்குச் சொல்ல வந்தோமென்றுசொல்ல, இளகியமனதையுடைய திருநாளைப்போவார் அடியேன் கடைத்தேறினேனென்றும் அவர்களைத்தொழுது நானின்றைக்குத்தான் முத்தனானேனென்றும் வேதியர்களைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

இராகம் - பியாகு, ஆதிதாளம்.

பல்லவி.

கண்டேன்கலிதீர்ந்தேன்-பவக்கடற்கரையேறிவந்தேன்.

சோதிமறைமுடியுஞ்சொல்லிறந்திடுமீசன்
பாதம்பணிவிடைசெய்பாக்கியம்பெறுமுடம்மைக் (கண்)

எல்லையைக்காணுமுன்னேயிருள்விலகுமுங்கள்
சொல்லிக்கேட்குமுன்னேதுன்பங்கள்தீர்ந்திடும் (கண்)

கள்ளங்கருகச்செய்புங்கல்லுறு தலையுங்கள்
உள்ளங்குடியாய்க்கொண்டாருங்கள்தெரிசனம். (கண்)

வசனம்.

நந்தனார், தான் ஈனசாதியாயிருந்தபோதிலும் தெய்வமிரங்கிற்றேவென்று சந்தோஷங்கொண்டு சொல்லுகின்றார்.

இராகம்-தனுசரி, ஆதிதாளம்.

எனக்குமிரங்கிற்றோ-நான்மெத்த-ஏழைச்சாதியல்லவோ.

தனக்குள்தானயிருந்தகிலப்பிரபஞ்சமுந்
தன்னுள்ளடக்கியபொன்னம்பலவன்கிருபை (எனக்கு



அன்னும்பசுவுமருந்தவஞ்செய்தறு
மறியாரொருவருமம்பலத்தெய்வம் (எனக்கு)

நான்மறைமுடிவும்நானறியேனென்று
வோதியவுண்மையையுலகமறிய. (எனக்கு)

வசனம்.

நந்தனார், என்னதவம்செய்தேனோ இவ்வுலகின்கண்யாருக்கும் கிடைக்காதபாக்கியம் தனக்குக்கிடைத்ததென்று சொல்லுவார்.

இராகம்-ஆஹிரி, ரூபகதாளம்.

அம்பலவாணனைத் தென்புலியூரானை நம்பிப்பணிந் தேனே
அர்ச்சனைசெய்து குப்பிட்டிருந் தேனே
தில்லைப்பதியில்வந்துயெல்லைக்கடந்தேனென்று
அல்லலறுத்தேனே சஞ்சிதவினை யெல்லாம்வறுத் தேனே
தாண்டவமாடின ஆண்டவன்சேவடி
வேண்டித்துதித்தேனே முக்குணங்களைத் தாண்டிக்கதித் தேனே
எந்தனைதென்றெந்தவேளையுமாயுஞ்
சிந்தைதநழுவிற்று சேர்ந்தவனென்று தந்தைதழு விற்றே
தெள்ளுதமிழ்ப்பாடியுள்ளமுருகியுன்னில்
கள்ளங்காருகிற்று கருத்தில்லட்டா வெள்ளம்பெரு கிற்றே
ஆசைவலைபோட்டுமோசப்படுத்துஞ்சீவ
பாசங்குலைத்தாரோ அளவிடாத கிலேசத்தொலைத் தாரோ
பெண்ணாசிடுமாலுக்கொண்ணாதெனச்சடைத்
தண்ணுத்தனைத்தாரோ கருணைபொங்குங் கண்ணாலணைத் தாரோ!
அடுத்துவந்தவனென்றுபிடித்தபேய்களையோட்டி
அடுத்தாளக்கொண்டாரோபரமபதங்கொடுத்தாளக்கொண்டாரோ.

## திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

மறையவர்கள்மொழிந்ததற்பின்றென்றிசையின்மதிற்புறத்துப்
பிறைபுரிஞ்சுர்திருவாயின்முன்னாகப்பிஞ்ஞகர்தன்
மறையருளான்மறையவர்களெருப்பமைத்தகுழியெய்தி
இறையவர்தாண்மனங்கொண்டேயெரிசூழவலங்கொண்டார்.

வசனம்.

நந்தனார், இப்படி பிராமணர்கள் சொல்லியபின்பு தெண்டிசை …ன்ன மதிலின்புறத்திலே சந்திரனைத தவழ்ந்துபோகும்

உயர்ந்திருக்குந் திருக்கோபுரவாயிலுக்கு முன்னே சுவாமியின் நிறைந்த கிருபையோடு கூடியகட்டளையால் வளர்ந்திருக்கின்ற நெருப்பின்குழியை அடைந்து நடேசருடைய திருப்பாதத்தை மனதில் தியானித்து அக்கினியைச்சுற்றி வலமாகவந்தார்.

இதுவுமது - விருத்தம்.

கைதொழுதுநடமாடுங்கழலுன்னியழல்புக்கார்
எய்தியவப்பொழுதின்கண்ணெரியின் மாயமாயப்
பொய்தகையுருவொழித்துப்புண்ணியமா முனிவடிவாய்
மெய்திகழ்முந்நூல்விளங்கவேணிமுடிக்கொண்டெழுந்தார்.

வசனம்

நந்தனர் கையினற்கும்பிட்டு, நடனஞ்செய்கின்ற நடேசரது திருப்பாதங்களை மனதில் உறுதியாகநினைத்து அக்கினியிற்புகுந்து அந்த நெருப்பிலிருந்து இந்தவுலகசம்பந்தமாகிய நிலையில்லாத சடலத்தையொழித்துப் புண்ணியஞ்செய்கின்ற பெருமைபொருந்திய பிராமணமுனிவடிவமாய்த் தேகத்தில் பூணூல்விளங்கச் சடைமுடியோடும் வெளியில்வந்தார்.

இராகம் - மோகனம், ஆதிதாளம்.

பல்லவி.

யாகோற்பவமானர்-நந்தனர்-அரனருளால்
யாகோற்பவமானர்.


அநுபல்லவி.

யோகமாதவரும் போகவாழ்வினரும்
வேகமாய்ச்சுகமாகவந்துதொழ, (யாகோ)

சரணங்கள்.

சிவனருரைத்த வாக்கியம் - சித்தத்திலெண்ணி
சிறந்ததேமிக சிலாக்கியம்
தவருவநேக பாக்கியம் - பொருந்தவேடந்
தன்னைக்கொண்டதே யோக்கியம்
தபனனேடுவுயர் சவனமேவிவரு
மெவருங்காந்தருவரெவருங்கண்டுதொழ (யாகோ)

கையைச்சிரமேற் பதித்து - சிவனேயென்று
கனகசபையைத் துதித்து
செய்யகுண்டத்தை வெடித்து - கதிரவன்போற்
செனித்தாரதிலே நடித்து



சிதம்பரத்தில் நந்தனர் அக்கினிகுண்டத்தில் யோகமடைந்தது.

சித்தியாகியபத முற்றும்பாம்புபுலி
பத்தியாய்த்தொழும் பதத்தைக்கண்டுதொழ (யாகோ)

காதிற்குண்டல மிலங்க-முப்புரிநூலும்
கதித்துமார்பிட மலங்க
ஓதுஞ்சடைகள் துலங்க-அவரைவிட்டு
ஓடியேவினை கலங்க
ஏதமற்றனர் வேதமோதிவரும்
நீதவேதியர்கள் பேதமின்றித்தொழ. (யாகோ)

## திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

செந்தீமேலெழும்போதுசெம்பலர்மேல்வந்தெழுந்த
அந்தணன்போற்றோன்றினாரந்தாதுந்துபிநாதம்
வந்தெழுந்ததிருவிசும்பில்வானவர்கண்மகிழ்ந்தார்த்துப்
பைந்துணர்மந்தாரத்தின்பனிமலர்மாரிகள்பொழிந்தார்.

வசனம்.

சிவந்தநெருப்பில்நின்று எழுந்தபொழுது செந்தாமரைப்புட்பத்தின்மேல் உதயமாயெழுந்தருளும் பிர்மாவைப்போல் பிரகாசித்தார். பெருமைபொருந்திய ஆகாசத்தில் அந்தர துந்துபியின் கோஷ்டமானது உண்டாயிற்று, தேவர்கள் சந்தோஷமாய் ஆரவாரித்து அழகாயிருக்கின்ற கற்பகவிருட்சத்தின் குளிர்ச்சிபொருந்திய மலர்களை வருஷமாகச்சொரிந்தார்கள்.

விருத்தம்.

திருவுடையதில்லைவாழந்தணர்கள்கைதொழுதார்
பரவரியதொண்டர்களும்பணிந்துமனங்களிபயின்றார்
அருமறைசூழ்திருமன்றுளாடுகின்றகழல்வணங்க
வருகின்றார்திருநாளைப்போவாராம்மறைமுனிவர்.

வசனம்.

ஞானசம்பத்தையுடைய தில்லையில்வாழும் பிராமணர்கள் கைகூப்பினார்கள், பரவுதற்கரிய மற்றைச்சிவபத்தர்களுந் தொழுதுமனதில் களிப்படைந்தார்கள், வேதங்கள்முழங்குகின்ற கனகசபையில் ஆடுகின்ற பாதத்தைவணங்கும் பொருட்டுத் திருநாளைப்போவாராகிய ஒருவேதமுனிவர் தான்கண்ட ஆனந்ததாண்டவத்தை வருணித்துச் சொல்லுகின்றார்.



இராகம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

தாதெய்யென்றாடுவார்-அவர்-தத்தித்தெய்யென்றாடுவார்

ஆதிபராபரமாகியசித்து
ஆனந்தங்கொண்டொருகாலையெடுத்துத் (தாதெய்)

அண்டசராசரமெங்குநடுங்க
ஆதிசேடனார்முடிகணெருங்க (தாதெய்)

சிலம்பெருகியமுனிவர்கொண்டாட
திங்களுஞ்சூடியசெஞ்சடையாட (தாதெய்)

பார்புகழுந்தில்லைசிதம்பரநாதன்
பாலகிருஷ்ணன்பணிந்தேத்தியபாதன் (தாதெய்)

இராகம்-பந்துவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

குஞ்சிதபாதத்தைதாரும்-சஞ்சலபாலத்தைதீரும்

அநுபல்லவி.

செஞ்சிலம்பசையக்கனகசபைதனில்
ஜெணுதக்கஜெணு-தத்திமிதிமிதத்-தோமென்றாடிய. (குஞ்சித)

சரணங்கள்,

நெஞ்சிற்கவலையை யாற்றும்-இந்த
வஞ்சப்பிறவியை மாற்றும்-நாளும்
வஞ்சிசிவகாமிவல்லி மகிழ்ந்திடும்
தஜ்ஜெம்தக-ஜெம்தரிகடதக்கிட தோமென்றாடிய (குஞ்சித)

சரணமென்றிங்கேநான் வந்தேன்-ஜனன
மரணத்தினால்மிக நொந்தேன்-அந்தக்
கரணக்கல்மிஷங்கள்போக்கியே காத்திடும்
இந்திரர்வானவர்-மாமுனிவந்து நிதந்துதிசெய்திடும் (குஞ்சி)

பாலகிருஷ்ணன்றொழும் பாதா-முத்தி
நால்வர்க்குதவிய நாதானந்தன்
மேலேகிருபைசெய்துவெற்றி யளித்திடும்
அத்தனேகர்த்தனே-சுத்தனேயித்தனை-நிர்த்தனஞ்செய்திடும். (கு)

இராகம்-மாயாமாளவகௌளை-திசரதாளம்,

பல்லவி.

நடனமாடினார்-ஐயர்-நடனமாடினார்.

அநுபல்லவி.

நடனமாடினார்தில்லை நாயகம்பொன்-னம்பலந்தனில். (நட)

சரணங்கள்.

முக்திமடந்தை சித்திக்க சித்திக்க
மோகவலைகள் பத்திக்க பத்திக்க
பக்தர்கள்மனது தித்திக்க தித்திக்கப்
பாதச்சிலம்பு சத்திக்க சத்திக்கப்
பனிமதிசடையாட பதஞ்சலிமா முனிமறையாட
பண்ணவர்கள்கொண்டாட பாலகிருஷ்ணன்மத்தளம்போட(ந)*

இராகம்-யமுனாகல்யாணி, அடதாளம்.

பல்லவி.

ஆனந்தக்கூத்தாடினார்-அம்பலந்தனிலே-பொன்னம்பலந்தனிலே

ஆனந்தக்கூத்தாடினார்-அயனும்மாலும்பாடினார்
அந்தரங்கமாகசிந்தித்தபேர்க்கருள்
தந்தோந்தந்தோமென்று-தொந்தோந்தொந்தோமென்று (ஆன)

பதஞ்சலிமாமுனியை நோக்கிப்
பார்த்தபேர்கள்குறையைப் போக்கி
இதமகிதமென்றறிவை நீக்கி
ஏகமாகக்காலைத் தூக்கி (ஆன)

மத்தளதாளமதிர முழங்க
வளரும்பிறமதகணங்க விலங்க
தந்திமிதக்கிடதோமென் றிலங்க
சடையுந்துலங்கச்சதங்கை குலுங்க (ஆன)

பாலகிருஷ்ணன்பணியும் பாதன்
பார்த்தபேர்கள்வரப்பிர சாதன்
ஞாலம்புகழுஞ்சீல போதன்
சுந்தராதாதன்அம்பிகை நாதன் (ஆன)

வசனம்.

இப்படி ஆடிய தாண்டவதெரிசனங்கொடுக்க இன்றைக்குத் தான் சித்தமிரங்கிற்றோ வென்று சொல்லுவார்.

இராகம்-யமுனாகல்யாணி-ஆதிதாளம்.

சித்தமிரங்கிற்றோ யான்முன்செய் தவமுந்திற்றோ
அந்தபரிசுத்தாவுன்னாடல்காணவந்தேன்
என்னையாண்டுகொள்ளிதுவேசமையமுன்னாடல்காணவந்தேன்
சதிமுறைமைபோக்கும் என்னைச்சதுர்மறையவராக்கும்



போதாதில்லைநாதாவுன்னாடல்காணவந்தேன்
என்னையாண்டுகொள்ளிதுவேசமையமுன்னாடல்காணவந்தேன்
பாலகிருஷ்ணன்போற்றும்பாதாபதஞ்சலியாரேத்துஞ்
சீலாதிரிசூலாவுன்னாடல்காணவந்தேன்
என்னையாண்டுகொள்ளிதுவேசமையமுன்னாடல்காணவந்தேன்

சிந்து.

கனவிலுருவாகி வந்து-காட்சிக்கொடுத்துக்கடாட்சித்தபின்
எரியினிடைமூழ்கி வெகு இன்பம்பெருகியவன்பருடன்
வேதமுனிவடிவாய்த்-தில்லை-வேதியர்கைதொழுதாதரவாய்
அங்கப்புளகிதமாய்ச்-செம்பொன்.

வசனம்.

திருநாளைப்போவாராகிய முனிவர் அக்கினியில் குளித்தெழுந்து கனகசபையில்வந்து மனமுருகி ஆனந்தம்பெருகி நமது ஆண்டவராகிய நடேசமூர்த்தியைத் தோத்திரம் செய்கின்றார்.

இராக-சாரங்கி, ஆதிதாளம்.

பல்லவி.

உனதுதிருவடிநம்பிவந்தேன்-எனக்
கொருவருமில்லைநானேழை (உனது)

அநுபல்லவி.

அநுதினமும் பொன்னம்பலந்தனிலே
ஆடியபாதரே யென்சுவாமி.

சரணங்கள்.

இரவும்பகலும்விஷயாதிகளென்னை யிழுக்கும்நாணதை
மரித்துமிப்படி பரதவித்திடலானேன்
பார்க்கலாமோபாலகிருஷ்ணன்போற்றும்பரனே
பரமதயாநிதியேநின் பக்தியைத்தந்து
சித்தமகிழ்ந்திடகரையேற்றிடுவதுன்பாரஞ்
சொன்னேன் கைவிடவேண்டாம் சரணம்சரணம் (உனது)

இராகம்-சக்கரவாகம், மிசுரஜாதி-ஜம்பைதாளம்.

பல்லவி.

அறிவுடையோர்பணிந்தேத்துந்தில்லைக்
கனகசபாபதியே என்னைவந்தாளும் (அறி)

அநுபல்லவி.

மனமுடியுந்தேடியறியாதவுன்றன்
திருவடியைமாணிக்கவாசகரறிந்ததெப்படி. (அறி)

சரணங்கள்.

கனவிலும் நினைவிலும் விஷயாதி சம்சாரக்கடலி
லழுந்தினேன் கரையேறவும் வழிகாணேன்
மனமிரங்கி கிருபைசெய்திடவேணும்-மாயன் கோபாலா
கிருஷ்ணன் தொழுதேத்தும்-அம்பலவாணா
உனைமறந்திடப்போமோ-உன்னடியார்களைப்
பணிவீரென்றுரைத்திடுமுண்மையையின்னமுமறியேன்
மனைவிமக்கள் தனதானியமென்றிந்த-மாயவலைக்குள்
சிக்கிமயங்கினேன் தயங்கினேன்.

இராகம்-நவரோஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

தில்லைநடராஜரைப்போலே வேறேதெய்வங்கிடைக்குமோ.

அநுபல்லவி.

பதஞ்சலிவியாக்கிரபாதருக்கன்றுபாதமெடுத்தாடவே
பாதமெடுத்தாடவே-அவாள்-பரமபதத்தைச்சேரவே. (தில்

சரணங்கள்.

காளியுடன்வாதுமாடியே கனகசபையில்நின்றநீ
கனகசபைதனில்நின்று-ஒற்றைக்-காலைத்தூக்கிக்கொண்டாடிய (தி
பொங்கவேபரமானந்தரூபம் பூரணகும்பத்தில்வருகவே
பூரணகும்பத்தில்வருகவே-ஐயன்-பொன்னம்பலத்தைச்சேரவே.(
குடத்தில்கெங்காதீர்த்தமெடுத்துத் கும்பாபிஷேகம்பண்ணவே
கும்பாபிஷேகம்பண்ணவே-அப்பன்-குளிர்ந்தமனதாய் ஆகவே. (தில்
அத்தர்புனுகுவாசனையுட ஞகுதிஹோமம்பண்ணவே
ஆகுதிஹோமப்பண்ணவே-ஜகதீசன்-சிற்சபைதனைச்சேரவே.(தில்

இராகம்-சுருட்டி-ஜம்பைதாளம்.

பல்லவி.

கனகசபைதிருநடனம் கண்டுகளித் தானந்தமடைந்தேன்.

அநுபல்லவி.

ஜெனகஜெனந்தன முனிவர்கள்பாட
சதுர்முகதேவனும் தாளங்கள்போட
தினமுமூவாயிரம் பேர்களுங்கூட
தக்கிடத்தைய்தை தத்தோமென்று. (கனக

சரணங்கள்.

நந்திபிருங்கிசிவகணங்கள் கொண்டாட
நாரதர்தும்புருசங்கீதம் பாட
பந்திபந்தியாயந்தணர் மறைபாட
பாலகிருஷ்ணனும்மத்தளம் போட. (கனக



இராகம்-பூரணச்சந்திரிகை-ஆதிதாளம்.

பல்லவி.

பாதமேதுணை ஐயனே-நின்
பாதமேதுணை ஐயனே

அநுபல்லவி.

பாதமேதுணையல்லால் வேறொரு
சேதிகளுநானறிந் திலேன். (பாத)

சரணங்கள்.

பாலனுக்கருள் செய்தபராபரன்
பாலகிருஷ்ணன் கவிக்குதயாகரன்
சீலமுள்ளசிவ காமிமனோகரன்
கோலநடம்புரி ரஞ்சிதகுஞ்சித. (பாத)

இராகம்-பெலஹம்ஸ-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தாலும்-வரட்டும்-ஜெனனம்
தந்தாலும் தரட்டும்-சாமி

அநுபல்லவி.

செந்தாமரைப்பதமே கதிநம்பினேன்
சிதம்பரநாதன் சிவசாயுச்சியம். (வந்தா)

சரணங்கள்.

சிவன்செயலன்றி வேறொருசெயலும்
சிந்தையிலறியேன் பாலகிருஷ்ணன்தொழும்
அவனுருவன்றி வேறுருவுண்டோ
ஆகமமறியாதோ,
தவமேவுந்தென் புலியூர்வாழும்
தாண்டவனேயென் னாண்டவனே-இந்த
பவக்கடல்தாண்டி விடுவாயதுவொரு
பாரமல்லவெகுதூரமல்லமுத்தி. (வந்தா)

இராகம்ஆபி-ஆதிதாளம்.

பல்லவி.

பிறவாதவரந்தாரும்-என்னையா
பிறவாதவரந்தாரும்.

அநுபல்லவி.

அறிவுடையோர்தொழு தேத்தியதில்லைப்பொன்
னம்பலவாயின் னம்பலயோனியில். (பிற)

சரணங்கள்.

எண்பத்துநாலுலட்சம் ராசிகளில்
எடுத்தெடுத்துப்பிறந்திறந்ததோ

புண்பட்டதுபோதும்போதும் - இனிமேல்
புத்திதெரிந்ததையே,
நண்பற்றிடுமனைவிமக்கள்வாழ்வினில்
நாள்கடோறும்மனவிலாசங்கழிந்ததும்
இன்பந்தருமெய்கோபாலகிருஷ்ணன்றொழு
தேத்திய ஜெகதீசனே நடராஜனே. (பிற

தேவாரம்.

பாளையுடைக்கமுகோங்கிப்பன்மாடநெருங்கியெங்கும்
வாளையுடைப்புனல்வந்தெறிவாழ்வயற்றில்லைதன்னு
ளாளையுடைக்கழற்சிற்றம்பலத்தாடல்கண்டாற்
பீளையுடைக்கண்களாற்பின்னைப்பேய்கொண்டார்காண்பதென்னே.

பொருவிடையொன்றுடைப்புண்ணியமூர்த்திபுலியதள
னாருவுடையம்மலைமங்கைமணாளனுலகுக்கெல்லாந்
திருவுடையந்தணர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
றிருவடியைக்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே.

தொடுத்தமலரொடுதூபமுஞ்சாந்துங்கொண்டெப்பொழுது
மடுத்துவணங்குமயனொடுமாலுக்குங்காண்பரியான்
பொடிக்கொண்டணிந்துபொன்னாகியதில்லைச்சிற்றம்பலவ
னுடுத்ததில்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே.

வைச்சபொருணமக்காகுமென்றெண்ணிநமச்சிவாய
வச்சமொழிந்தேனணிதில்லையம்பலத்தாடுகின்ற
பிச்சன்பிறப்பிலிபேர்நந்தியுந்தியின்மேலசைத்த
கச்சினழகுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே.

செய்ஞ்ஞின்றநீலமலர்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
மெய்ஞ்ஞின்றவொண்கண்மலைமகள்கண்டுமகிழ்ந்துநின்ற
நெஞ்ஞின்றெரியும்விளக்கொற்றநீலமணிமிடற்றான்
லையஞ்ஞின்றவாடல் கண்டாற்பின்னைக்கண்கொண்டு காண்பதென்னே.

ஊனத்தைநீக்கியுலகறியவென்னையாட்கொண்டவன்
தேனைத்தெனக்கினியான்றில்லைச்சிற்றம்பலவனெங்கோன்
வானத்தவருய்யவன்னஞ்சையுண்டகண்டத்திலங்கு
மேனத்தெயிறுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே.

தெரித்தகணையாற்றிரிபுரமூன்றுஞ்செந்தீயின்மூழ்க
வெரித்தவிறைவனிமையவர்கோமானிணையடிக
டரித்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
சிரித்தமுகங்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே.



தருக்குமிகுத்துத்தன்றோள்வலியுன்னித்தடவரையை
வரைக்காளாலெடுத்தார்ப்பமலைமகள்கோன்சிரித்து
வரக்கன்மணிமுடிபத்துமணிதில்லையம்பலவ
னொருக்கமிதித்தவிரல்கண்டகண்கொண்டுகாண்பதென்னே.

வேற்றாகிவிண்ணாகிநின்றாய்போற்றி மீளாமேயாளென்னைக்கொ
ண்டாய்போற்றி, யூற்றாகியுள்ளேயொளித்தாய்போற்றி யோவாத
சத்தத்தொலியேபோற்றி, யாற்றாகியங்கேயமர்ந்தாய்போற்றியாறங்
கநால்வேதமானாய்போற்றி, காற்றாகியெங்குங்கலந்தாய்போற்றிகை
லைமலையானேபோற்றிபோற்றி.

சுற்றுமமரர்சுரர்பதிநின்றிருப்பாதமல்லாற்
பற்றொன்றிலோமென்றழைப்பப்பாவையுணஞ்சையுண்டாற்
செற்றங்கனங்களைதீவிழுத்தான்றில்லையம்பலவன்
னெற்றியிற்கண்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே.

சித்தத்தெழுந்தசெழுங்கமலத்தன்னசேவடிகள்
வைத்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
முத்தும்வயிரமுமாணிகமந்தனுள்ளடங்கியதூ
மத்தமலர்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே.

பிச்சாடல்பேயோடுகந்தாய்போற்றி பிறவியறுக்கும்பிரானே
போற்றி, வைச்சாடனைநான்முகந்தாய்போற்றி மருவியென்சிந்தை
புகுந்தாய்போற்றி, பொச்சார்புரமூன்றுமெய்தாய்போற்றி போகா
தென்சிந்தைபுகுந்தாய்போற்றி, கச்சாகநாகமசைத்தாய்போற்றி
கைலைமலையானேபோற்றிபோற்றி.

மருவார்புரமூன்றுமெய்தாய்போற்றி மருவியென்சிந்தைபுகுந்தா
ய்போற்றி,யுருவாகியென்னைப்படைத்தாய்போற்றியுள்ளாவிவாங்கி
யொளித்தாய்போற்றி, திருவாகின்றதிறமேபோற்றி தேசம்பரவப்
படுவாய்போற்றி, கருவாகியோடுமுகிலேபோற்றி கைலைமலையா
னேபோற்றிபோற்றி.

வானத்தார்போற்றுமருந்தேபோற்றி வந்தென்றன்சிந்தைபுகுந்
தாய்போற்றி, யூனத்தைநீக்குமுடலேபோற்றியோங்கியழலாய்நிமி
ர்ந்தாய்போற்றி, தேனத்தைவார்த்ததெளிவேபோற்றி தேவர்க்குந்
தேவனாய்நின்றாய்போற்றி,கானத்தீயாடலுகந்தாய்போற்றிகைலைம
லையானேபோற்றிபோற்றி.

ஊராகிநின்றவுலகேபோற்றி யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி
பேராகியெங்கும்பரந்தாய்போற்றி பேராதென்சிந்தைபுகுந்தாய்போ
ற்றி,நீராவியானநிழலேபோற்றி நேர்வாரொருவரையுமில்லாய்போ
ற்றி,காராகிநின்றமுகிலேபோற்றிகைலைமலையானேபோற்றிபோற்றி

சில்லுருவாய்ச்சென்றுதிரண்டாய்போற்றி தேவரறியாததேவே போற்றி, புல்லுயிர்க்கும்பூசுவிபுணர்ந்தாய்போற்றி போகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி பல்லுயிராய்ப்பர்ந்தோறும்நின்றாய்போற்றி பற்றியுலகைவிடாதாய்போற்றி, கல்லுயிராய்நின்றகனலேபோற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி.

பண்ணினிசையாகிநின்றாய்போற்றி பாவிப்பார்பாவமறுப்பாய் போற்றி, யெண்ணு மெழுத்துஞ்சொல்லானாய்போற்றி யென்சிந்தை நீங்காவிறைவா போற்றி, விண்ணுநிலனுந்தீயானாய்போற்றிமேலவர்க்குமேலாகிநின்றாய்போற்றி, கண்ணின்மணியாகி நின்றாய்போற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி.

இமையாதுயிராயிருந்தாய்போற்றி யென்சிந்தைநீங்காவிறைவா போற்றி, யுமைபாகமாகத்தணைந்தாய்போற்றியூழியேழானவொருவாபோற்றி, யமையாவருநெஞ்சமமர்ந்தாய்போற்றியாதிபுராணனாய்நின்றாய்போற்றி, கமையாகிநின்றகனலேபோற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி.

மூவாப்பிறவாயிறைவாய்போற்றிமுன்னமேதோன்றிமுளைத்தாய் போற்றி, தேவாதிதேவர்தொழுந்தேவேபோற்றி சென்றேறியெங்கும்பரந்தாய்போற்றி, யாவாயடியேனுக்கெல்லாம்போற்றியல்லலகலவைத்தேன்போற்றி, காவாய்கனகத்திரளேபோற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி.

நெடியவிசும்பொடுகண்ணேபோற்றி நீளவுலகமுடையாய்போற்றி, யடியுமுடியுமிகலிபோற்றியங்கொன்றறியாமைநின்றாய்போற்றி கொடியவன்கூற்றமுதைத்தாய்போற்றி கோயிலாவென்சிந்தைகொண்டாய்போற்றி, கடியவுருவமொடுமின்னேபோற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி.

உண்ணாதுறங்காதிருந்தாய்போற்றியோதாதேவேதமுணர்ந்தாய் போற்றி, எண்ணிலங்கைக்கோன்றன்னைப்போற்றி யிறைவிரலால்வைத்துகந்தவீசாபோற்றி, பண்ணாரிசையின்சொற் கேட்டாய் போற்றி பண்டேயென்சிந்தைபுகுந்தாய்போற்றி, கண்ணாயுலகுக்குநின்றாய்போற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி

சிந்து.

அம்பலமேவியசம்பிரமத்தைக்-கண்டாரறிந்திலரால்.

---



திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

தில்லைவாழந்தணருடன்செல்லச்சென்றெய்திக்
கொல்லையான்மறிக்கரத்தார்கோபுரத்தைத்தொழுதிறைஞ்சி
ஒல்லைபோயுட்புக்காருலகுய்யநடமாடும்
எல்லையினைத்தலைப்பட்டார்யாவர்களுங்கண்டிலரால்.

வசனம்.

திருநாளைப்போர் நாயனாரென்றும், இடையில், நந்தாமுனியென்றும் வழங்குகின்ற நாளைப்போவார் தில்லைமூவாயிரமுனிவர்களோடுபொன்னம்பலத்துக்குவந்தார். அதற்கபால் அவரைக் கண்டபேர்களில்லையென்று பெரியபுராணம் பாடியருளியசேக்கிழார்சுவாமிகள்சொல்லியிருப்பது அந்தத் திருநாளைப்போவாரென்னு முனியானவர், புரட்டாசிமாதம் ரோகணிநட்சத்திரத்தில் கனகசபையில்வந்து கற்பூரசோதியைப்போற்றேன்றியசிவசாரூபியத்தை யடைந்தாரென்று உபமன்னியமகாரிஷிபண்ணிய பக்தவிலாசத்திலேயும் சொல்லப் பட்டிருக்கின்றது,

இதுவுமது - விருத்தம்.

அந்தணர்களதிசயித்தாருமுனிவர்துதிசெய்தார்
வந்தணைந்ததிருத்தொண்டர்தம்மைவினைமாசறுத்து
சுந்தரத்தாமரைபுரையுந்துணையடிகடொழுதிக்க
வந்தயில்லாவானந்தப்பெருங்கூத்தரருள்புரிந்தார்.

வசனம்.

மறையோர்கள் ஆச்சரியப்பட்டார்கள், அரியமுனிவர்கள் ஸ்தோத்திரஞ்செய்தார்கள், முடிவில்லாத ஆனந்தத்தாண்டவஞ்செய்தருளுகின்றசபாநாதர் தமதுகட்டளையால் வந்தடைந்த திருநாளைப்போவாருக்குத் தீவினையாகிய களங்கத்தை நீக்கி அழகாகிய செந்தாமரைமலரையொத்த இரண்டுபாதங்களையுந் தொழுதிக்கும் படியாகத் திருவருள் புரிந்தார்.

விருத்தம்.

மாசுடம்புவிடத்தீயான்மஞ்சனஞ்செய்தருளியெழுந்
தாசின்மறைமுனியாகியம்பலவர்தாளடைந்தார்
தேசுடையகழல்வாய்த்துத்திருநாளைப்போவாரும்
மாசகலமுயன்றுதிருத்தடங்கண்டுமகிழ்வுற்றார்.

வசனம்.

தமக்குமுன்னிருந்த உடலமாகிய மாசுதீரும்பொருட்டு அக்கினியாகிய திருமஞ்சனமாடியெழுந்து குற்றமற்ற பிராமண முனிவடிவமாகி ஸ்ரீநடேசப்பெருமானுடைய திருவடியை அடைந்தவராகிய சுயிறு அறும்படி தில்லை மூவாயிரமுனிவர்கள் போற்றிசெய்துகொண்டிருந்தார்கள்.

வாழ்த்து-விருத்தம்.

பங்கயமாதவர்வாழி பார்மகளுமையாள்வாழி
செங்கண்மாலயனும்வாழி தேவர்கந்தருவர்வாழி
தங்குநான்மறைகள்வாழி தாரணியரசர்வாழி
பொங்குநூல்வல்லார்வாழி புண்ணியரென்றும்வாழி.

மங்களம்.

இராகம்-அசாவேரி, ஆதிதாளம்.

பல்லவி.

திருநாளைப்போவாருக்கு ஜெயமங்களம்-எங்கள்
தில்லைமூவாயிரவர்க்குச் சுபமங்களம்

அநுபல்லவி.

இருடிகளிதுவரி தரிததிசயமென
விருகரமுடிமிசை மருவத்துதிசெய்கன
பரவும்பர்சம்பிரமங்கள் துதித்திடும்
பரமனுடமம்பலத்தில் சுதித்திடும். (திருநா)

சரணங்கள்.

திருவாசகமுந்திருக் கோவைபாடினவர்க்கும்
சீர்காழியிலுதித்த சிறந்தசம்பந்தருக்கும்
ஒருமாதிடத்திற்றூதுக் குவந்துவிடுத்தவர்க்கும்
ஒருவரொப்பில்லாத் திவநாவுக்கரசருக்கும்
உரியமறைக்கு-முயர்கலைகட்கும் உரகர்பதிக்கு-முவணபதிக்கும்
ஓதுசந்திரசூரியர் முனிவர்களுக்கும்
தீதிலாதபாவலர் முதலனைவர்க்கும். (திருநா)

திருநாளைப்போவாரென்னும்
நந்தனார்சரித்திரக்கீர்த்தனை
முற்றிற்று.

சிவமயம்.



# சிதம்பரக்கும்மி.

விநாயகர் துதி.

சீர்மேவுர்தில்லையம்பலத்தில்அன்பு
சேரக்கும்மித்தமிழ்பாடக்
கார்மேவுமேலைக்கோபுரவாசல்
கற்பகப்பிள்ளையார்காப்பாமே.

முக்குறுணிவிநாயகர் துதி.

சர்க்கரைமோதகந்தேங்காயுங்கொண்டு
சந்நிதிமுன்பாகத்தான்படைத்து
முக்குறுணிப்பிள்ளையாரைவேண்டி
முழங்கிக்கும்மியடியுங்கடி.

சுப்பிரமணியர் துதி.

கோலமயிலின்மீதேறிவந்து
கும்பமுனிக்குவருட்செய்யும்
பாலசுப்பிரமணியன்பீஜாக்ஷரத்தைப்
பாடிக்கும்மியடியுங்கடி
கங்காதேவிச்சுக்கைகூப்பியாரும்
கையிலெடுத்துள்ளேபானம்பண்ணி
தங்காமற்சிவகாமிசந்நிதி
சார்ந்துகும்மியடியுங்கடி.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# நடராஜப்பத்து.

மண்ணாதிபூதமொடு விண்ணாதி அண்டம்நீ மறைநான்கின் அடிமுடியும்நீ, மதியும்நீ ரவியும்நீ புனலும்நீ அனலும்நீ மண்டலமிரண்டேழும்நீ பெண்ணும்நீ ஆணும்நீ பல்லுயிர்க்குயிரும்நீ பிறவும்நீ யொருவநீயே, பேதாதிபேதம்நீ பாதாதிகேசம்நீ பெற்றதாய் தந்தைநீயே, பொன்னும்நீ பொருளும்நீ யிருளும்நீ ஒளியும்நீ போதிக்கவந்தகுருநீ, புகழொணாகிரகங்களொன்பதும் நீயிந்த புவனங்கள் பெற்றவனும்நீ, எண்ணரியஜீவகோடிகளீன்றவப்பனே என்குறைகளார்க் குரைப்பேன் யீசனே சிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 1

மானாடமழுவாட மதியாட புனலாட மங்கைசிவகாமியாட, மாலாடநூலாட மறையாட திரையாட மறைதந்தபிரமனாட, கோனாட வானுலகு கூட்டமெல்லாமாட குஞ்சரமுகத்தனாட, குண்டலமிரண்டாட தண்டைபுலியுடையாட குழந்தை முருகேசனாட, ஞானசம்பந்தரொடு யிந்திரர்பதினெட்டு முனியட்ட பாலகருமாட, நரைதும்பை யறுகாட நந்திவாகனமாட நாட்டியப்பெண்களாட, வினையோட உனைபாட யெனைநாடியிதுவேளை விருதோடி ஆடிவருவாய் யீசனே சிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 2

கடலென்ற புவிமீதில் அலையென்ற வுருகொண்டு கனவென்ற வாழ்வைநம்பி காற்றென்ற கும்பிக்கு உணவென்றயிரைதேடி ஓயாமலிரவு பகலும், உண்டுண்டுறங்குவதை கண்டதேயல்லாது ஒருபய னடைந்திலேனே, தடமென்றமிடிகரையில் பந்தபாசங்களெனும் தாபரம் பின்னலிட்டு, தாயென்றுசேயென்று நீயென்று நானென்று தமியேனை யிவ்வண்ணமாய், இடையென்று கடைநின்று யேனென்று கேளாதிருப்பதுன் னழகாகுமோ, யீசனே சிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 3

பம்புசூனியமல்ல வைப்பல்லமாரணந்தம்பனம் வசியமல்ல, பாதாளவஞ்சனம் பரகாசபுரவேச மதுவல்லசாலமல்ல, அம்புகுண்டுகள் விலகமொழியு மந்திரமல்ல ஆகாயகுளிகையல்ல, அன்போடுசெய்கின்ற வாதமோடிகளல்ல அழியமோகனமுமல்ல, கும்



பமுனி மச்சமுனிசட்டமுனி பிர்ம்மரிஷி கொங்கணர் புலிப்பா[illegible]யும் கோரக்கர்வள்ளுவர் போகமுனிவரெலாங் கூறிடும் வயித்தி[illegible]மல்ல, எம்மனதுன்னடிவிட்டு நீங்காது நிலைநிற்கயேதுளவு புகலவருவாய், யீசனே சிவகாமிநேசனை யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 4

நொந்துவந்தேனென்று ஆயிரஞ்சொல்லியும் செவியென்ன மந்தமுண்டோ, நுட்பநெறியாத பிள்ளையைப்பெற்றபின் நோக்காததந்தையுண்டோ, சந்ததமுந் தஞ்சமென் றடியைபிடித்தபின் தள்ளாதநெஞ்சமுண்டோ, தந்திமுகனறுமுகன் யிருபிள்ளை யில்லையோ தந்தைநீமலடுதானோ, விந்தையுஞ்சாலமும் உன்னிடமிருக்குதே வினையொன்றுமறிகிலேனே, வேதமும்சாஸ்திரமும் உன்னையே புகழுதே வேடிக்கையிதுவல்லவோ, யிந்தவுலகீரேழு மேனளித்தாய் சொல்லுயினி யுன்னைவிடுவதில்லை, யீசனேசிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ்நடராஜனே. 5

வழிகண்டு உன்னடியை துதியாதபோதிலும் வாஞ்சையில்லாதபோதும் மாலாயமாய்க்கோயில் சுற்றாதபோதிலும் வஞ்சமே செய்தபோதும், மொழியெகனைமொகனை யில்லாமலேபாடினும் மூர்க்கனே முகடாகினும், மோசமேசெய்யினும் தோமேகவரினும் முழுகாமியேயாகினும், பழியெனக்கல்லவே தாய்தந்தைக்கல்லவோ பார்த்தவர்கள்சொல்லார்களோ, பாரறியமனைவிக்கி பாதியுடலீந்தநீ பாலனைக்கார்க்கொணாதோ, யெழில்பெரிய அண்டங்களடுக்காயமைத்தநீ யென்குறைகள் தீர்த்தல்பெரிதோ, யீசனே சிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 6

அன்னைதந்தைகளென்னை யீன்றதற்கழுவனோ அறிவிலாதற்கழுவனோ, அல்லாமல்நான்முகன் தன்னையேனோவனோ ஆசைமூன்றுக்கழுவனோ, முன்பிறப்பென்னவினைவந்து மூளுமென்றழுவனோ முத்திவருமெனறுணர்வனோ, தன்னைநொந் தழுவனோ உன்னைநொந்தழுவனோ தவமென்னவென்றழுவனோ, தையலர்க்கழுவனோ மெய்வளர்க்கழுவனோ தரித்திரதிசைக்கழுவனோ, இன்னமென்னப்பிறவி வருமோவென்றழுவனோயெல்லா முரைக்கவருவாய், யீசனே சிவகாமி நேசனேயெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 7

காயமுன்மரமீது பூபிஞ்சறுத்தனோ கன்னியர்கள் பழிகொண்டனோ, கடனென்று பொருள்பறித்தே வயரெறித்தனோ கிளைவழியில் முள்ளிட்டனோ, தாயாருடன்பிறவி கென்னவினைசெய்தனோ தந்தைபொருளில்லையென்றனோ தானென்று கெர்வித்துகொலைகளவு

## நடராஜப்பத்து.

...ய்தனோ தபசிகளை யேசினேனோ வாயாரப்பொய்சொல்லி வீண் பொருள்பறித்தனோ வாணாளைப் பழித்திட்டனோ, வடவுபோலே பிறரை சேர்க்காதடித்தனோ வந்தபின் யென்செய்தனோ, ஈயாத லோபியென்றேபெயரெடுத்தனோ, யெல்லாம் பொருத்தருளுவாய், ஈசனே சிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 8

தாயாரிருந்தென்ன தந்தையு மிருந்தென்ன தம்பிரவியுரவு கோடி, தனமலை குவித்தென்ன கனபெயரெடுத்தென்ன தாரணியையாண்டுமென்ன, சேயர்க ளிருந்தென்ன குருவாய் இருந்தென்ன சிஷர்களிருந்துமென்ன, சித்தபலசைற்றென்ன நித்தமும் விரதங்கள் செய்தென்ன நதிகளெலலாம், ஓயாது மூழ்கிலும்என்னபலன் எமனோலை ஒன்றைகண்டுத்தடுங்க, உதவுமோயிதுவெலாம் சந்தை உறவென்றுதான் உன்னிருபாதம்பிடித்தேன், யார்மீதுவுன்மனமிருந்தாலுடன்கடைக் கண்பார்வையதுபோதுமே ஈசனேசிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 9

இன்னமுஞ்சொல்லவோ உன்மனங்கல்லோ இரும்போபெரும் பாரையோ, யிருசெவியுமந்தமோ கேளாது அந்தமோ யிதுவுனக் கழகுதானோ, யென்னன்னையோகமோ யிதுவென்ன சோபமோ யிதுவேவுன செய்கைதானோ, உன்னைவிட்டெங்ஙன்சென்றாலும் விழலாவனோ உனையடுத்துங் கெடுவனோ, தீசோவிதில் குற்ற மென் குற்றமொன்றுமில்லை யுற்றுபார், பெற்றவையா என்குற்றமாயினும் உன்குற்றமாயினும் யினியருளளிக்கவிலைவாய், ஈசனே சிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே 10

சனிராகுகேதுபுதன் சுக்கிரன் செவ்வாய்குருச் சந்திரன் சூர்யனுவரை, சற்றெனக்குள்ளாக்கி ருசிபனி ரெண்டையும்சமமாய் நிறுத்தியுடனே, பனியொத்த நக்ஷத்திரங்க ளிருபதேழும் பக்குவப்படுத்தி பின்னால், பகர்கின்ற கரணங்கள் பதினொன்றையும் வெட்டி பாரையும்அதட்டி யென்முன், கனிபோலவேபேசி கெடுநினைவினைக் கின்ற கசடர்களையுங்கசக்கி, கர்த்தனின் தொண்டராமதொண்டர்க்குத் தொண்டரின் தொண்டர்கள் தொழும்பனுக்கு இனியவள மழுவு சிறுமணவை முனிசாமி யெனையாள்வதினி யுன்கடன்காண் ஈசனே சிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 11

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## சிதம்பர நடராஜர்

# பஞ்சாட்சரப்பதிகம்.

வசியசிவசங்கரா வசியகெங்காதரா வசியகைலாசவாசா, வசியபணியணியுரா வசியமான்மழுகரா வசியசிவகாமிநேசா, வசியதிருநேத்திரா வசியபுவநேஸ்வரா வசியஓம்நடனபாதா, வரிசியகரியுரியழக வசியபுலியிடையழக வசியசிரமாலையழகா, வசியமதிமுடியழக வசியபசுபதியழக வசியவெண்மணதில்பாசா, வசியமுன்னூலழக வசியவெண்ணீரழக வசியமறைபரவுமழகா, வசியவெனயுனை யனுதினம் போற்றுமடி யார்க்குனருள் மறைதிரந்ததில்லை, அதிபதிஜனகாதி துதிபதிசிவகாமி அன்பிலுரை நடனபதியே. 1

சிவயநமவென்றுதின மூழ்கியுருவேற்றுவார் செய்தொழிலெ... வசியமாம், ஜெகவசியமாம்சகல முகவசியமாம்செய்த சித்துக... லாம் வசியமாம், வயநமசியென்றுவுரு மாட்டுவார்சத்ராதி வா... டைவிட்டபந்தாம், வடங்காதபூதபே தம்பசாசிவையெல்லாம் வள... குலாலன் திகிரியாம், யநமசிவ வயநமசி சிவயனம யெல்லாமுன் ...டலமன்றோ, யிவ்வுலகபொருளுதவி அவ்வுலகமருளுதவியீயவிரு ...தய்வமுளவோ, அவுணுதிபுவனுதி சௌனுதி முத்தர்க்கு அருள் ...திரந்ததில்லை,அதிபதிஜெனகாதிதுதிபதிசிவகாமி அன்பிலுரை ...தியே. 2

...ல்லாய்ப்பிரந்தாலு மிருகாதிஜெனனங்கள் பசியாரிமகிழுமன் ...ண்டாய்ப்பிறந்தா...ம் புலத்தியர்கள்கொண்டுசில பிணிதீர்த்து ...ரன்றோ, க...றந்தாலும் வல்லவர்கள் மிதிகொண்டு ...சிக்குருந்து ம... தையுருவந்தாலும் ஆவெனக்கத்தி ...ல் கைகண்ட சகுன... எல்லாமிலாமலே யிப்பிறவிதந் ...னை யெங்கவிட்டகலனி..., எத்தனை அன்னையின் எத்தனை ...தையின்எத்தனை பிறவிவருமோ, அல்லலெனு மாசறுத்தாட் ...காளுந்தெ...மே அப்பனே தில்லைநகர்வாழ், அதிபதிஜெனகாதி 3
...பதி சி...ரும், ...ன்பிலுரை நடனபதியே.

...சயஞ் ஜே... ...த் கயவரைக்காமுகரைக் கல்னெஞ்சவஞ் சரிவ... ...த மோஹமுடையக் கோழையைக் கார்க்கவைத் ...ல்லாத மூர்க்கரை மிருகங்கள் போன்றவரை ...பரை, பூமியிற்பிறருக்கு யிடுக்குமயல்வோர்

# அகராதி.


| பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| ...றமை | 39 | திருவுடையதில் | 142 | மறையவர்கண் | 136 |
| [illegible] | 54 | தில்லையில்போக | 49 | மனங்கண்ட | 67 |
| ...மூன் | 122 | தில்லையைக்கண்ட | 104 | மாசடம்பு | 151 |
| ...க்குப்பை | 97 | தில்லைவாழ்ந்த | 151 | மாவலர்தில்லை | 83 |
| ...ணிக்கிடும் | 76 | நாளைப்போவே | 101 | வக்கணைக்காரா | 84 |
| ...நிமே | 142 | நாற்பதுவேலி | 69 | வணக்கமாய்ச் | 71 |
| ...ரேறமிசை | 22 | நின்றவாங் * | 116 | வளம்பெருந் | 7 |
| ...செல்லினைறபோழ் | 116 | பகர்ந்துலகு | 13 | வாட்டொருடல் | 112 |
| சேரிவந்தவர் | 81 | பங்கயமாதவர் | 152 | வானமேவிய | 96 |
| தம்பெருமான் | 133 | படிபுகழ்தில்லை | 56 | வானிருந்த | 79 |
| தவம்பெறு | 37 | பண்பனையாவையும் | 87 | வேதமோடறஞ் | 95 |
| ...றில்லாத | 82 | பித்தமது | 68 | வதியரிப்படி | 81 |
| திட்டமுடனடி | 137 | புத்திசொல்லிக் | 64 | வேதியரே | 68 |
| திருமறையோர் | 8 | பொய்ச்சடலம் | 72 | | |
| திருப்புன்கூர்ச் | 19 | மறைக்கிழவ | 183 | | |


அகராதி - முற்றிற்று.

இப்புத்தகத்தில், * இக்குறிப்புள்ள கீர்த்தனைகள் இந்நூலாசிரியர் இயற்றி அச்சிடப்படாத நூதனகீர்த்தனைகளும், இந்நூற் பரிசோதகரியற்றியுள்ள சிவகாம சங்கீர்த்தனையிலுள்ள சில கீர்த்தனைகளும் சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டன.

67902

# அகராதி.


| பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அடக்கியாளுமை | 53 | ஐயாசொல்லுவே | 92 | ஜெயஜெகதீசா | 111 |
| அடடாநந்தனே | 76 | ஐயேமெத்தகடி | 95 | சேதிசொல்லவந் | 52 |
| அஷ்டமாசித்திகளை | 33 | ஐயோதெய்வமேயி | 82 | சேரிமுற்றுஞ்சிவ | 56 |
| அடித்ததுபோது | 80 | ஒருநாளும்வாராத | 22 | சொற்பணங்கண் | 130 |
| அம்பலவாணுவுன் | 113 | கட்டைசுடச்சோ | 118 | ஞாயந்தானேநீர் | 37 |
| அம்பலவாணனை | 139 | கண்டேன்கலிதீர் | 138 | தடாகமோனறுண் | 26 |
| அரகராதிரிபுரா | 21 | *கனகசபேசன் | 117 | தன்னுவாரோஎங் | 128 |
| அரகரவென்றொரு | 36 | கனவினில்கண்டா | 84 | தாண்டவதெரிசன | 112 |
| அரகரசங்கரவன் | 105 | கண்கோகிலோபோ | 110 | தாதாதாநீஆடிய | [illegible] |
| அறிந்தறியாமலே | 114 | கனகசபாபதிதெரி | 118 | தாதெய்தெய்யே | [illegible] |
| அறிவுடையோர் | 145 | கனகசபைதிரு | 116 | திருநாளைப்போவா | [illegible] |
| ஆனந்தங்கூத்தாடி | 70 | கிட்டநெருங்கிய | 137 | திருட்டுத்தன | 78 |
| ஆகமங்கள்வேதியர் | 115 | குஞ்சிதபாதத்தை | 148 | திருவாதிரைதெரி | 104 |
| ஆடியபாதாஇருவர் | 113 | குற்றமெத்தவேசெ | 39 | தில்லைவனஞ்சுற்றி | 123 |
| * ஆடியபாதத்தைத் | 109 | கெண்டாமணியாடு | 101 | தில்லைத்தில்லைய | 103 |
| ஆடியபாதத்தைக் | 54 | கொண்டாணடிக்கி | 109 | தில்லைச்சிதம்பர | 46 |
| ஆடுஞ்சிதம்பரமோ | 109 | கொண்டாணடித்தாக | 100 | தில்லைவெளியிலே | 50 |
| ஆண்டைக்கடிமைக் | 37 | கொள்ளிடக்கரை | 99 | தில்லைத்தலமென் | 50 |
| ஆதனூரிலொரு | 19 | கோபுரதெரிசனமே | 100 | தில்லையம்பலத்தல | 54 |
| *ஆருக்குத்தான்தெ | 93 | *சங்கரனைத்துதித் | 47 | தில்லைச்சிதம்பரத் | 68 |
| ஆருக்குப்பொன்ன | 94 | சந்நிதிவரலாமே | 120 | தில்லைத்தலத்தைக் | 102 |
| இதுநல்லசமய | 125 | சபாதரிசனங்கண் | 111 | தில்லைநடராஜ | [illegible] |
| இதுவோதில்லைச்சித | 103 | *சம்போசெங்கரதா | 24 | தெரிசனஞ்செய்தா | [illegible] |
| இதுதானேதில்லைத் | 102 | சற்றேவிலகியிரு | 22 | தெரிசனங்கண்டா | [illegible] |
| இந்தச்சடலம்வந்த | 117 | சாதியில்தாழ்ந்த | 126 | தெரிசிக்கவேணும் | [illegible] |
| இந்தஜன்மம்வே | 123 | சாதியிலுயர்ந்தா | 131 | தேகம்வந்தவாறு | 119 |
| இரக்கம்வாராம | 125 | சிங்காரமான | 20 | தேடித்தேடித்திரி | 185 |
| இலவுகாத்தகிளிபோ | 80 | சிதம்பரமேவிளை | 62 | தொண்டரைக்கா | 184 |
| இவர்சிங்காரமான | 20 | சிதம்பரம்வந்தவெ | 105 | *நடினமானார் | 143 |
| இனியன்குற்றத்தை | 77 | சிதம்பரதெரிசனங் | 97 | நட்டநடவுவிளையு | 67 |
| இன்னம்வரக்கா | 121 | சிதம்பரம்போய்நீ | 93 | நந்தன்சரித்திர | 18 |
| உத்தாரந்தாருமை | 55 | சிதம்பரம்போகாம | 69 | நந்தன்சிதம்பரம் | 98 |
| *உனதுதிருவடி | 145 | சிதம்பரதெரிசன | 61 | நந்தனுரேயுன்ற | 88 |
| உனதுமகிமை | 130 | சிதம்பரம்போகாதே | 59 | நந்தனைத்தபரித | 68 |
| எந்நேரமுநந்தனை | 98 | சிதம்பரதெரிசனங் | 39 | நந்தனும்வந்தார் | 54 |
| எப்படிகெட்டா | 128 | சிதம்பரம்போவே | 27 | நந்தாவொருசேதி | 58 |
| எப்போவருவாரோ | 120 | சித்தமிரங்கிற்று | 141 | நந்தாவுனக்கிந்த | 65 |
| *எப்போதுலையு | 123 | சிந்தனைசெய்துகொ | 50 | நந்தாவுனக்கிந்தமதி | [illegible] |
| எல்லோரும்வாரும் | 29 | சிவலோகநாதனை | 19 | நந்தாவுன்ஈனவினி | [illegible] |
| எனக்குமிரங்கிற | 138 | சின்னச்சாதியல்ல | 93 | நந்தாகேருவுபதே | 4 |
| *என்னேரமுமுன் | 127 | சுவாமிதெரிசனம் | 38 | *நமக்கினிநமபய | 47 |
| எதுக்கென்மீது | 70 | செந்தாமரைமலர் | 15 | நாம்எண்ணசெய் | 21 |
| ஐயாவுன்னடைக்க | 82 | செய்யமுபாயமறி | 83 | நாளைப்போகாமலி | |


# அகராதி.


| பெயர். | பக்கம். |
|---|---|
| நீசனுய்ப்பிதபறக் | 81 |
| பகதிசெய்துவீரோ | 41 |
| பத்திகள்செய்தாரோ | 43 |
| பத்திபண்ணிக்கொ | 65 |
| பத்தியாகஆண்டை | 70 |
| பறையாநீசிதம்பர | 51 |
| பாதமேதுணை | 148 |
| *பாடுவாய்மனமே | 67 |
| *பார்க்கப்பார்க்கத் | 126 |
| பார்த்துப்பிழையுங் | 46 |
| பித்தக்தெளியமரு | 68 |
| பித்தனுய்ப்போன | 67 |
| பிறவாதவரம் | 147 |
| புண்ணியவிர்தப் | 48 |
| பெரியகிழவன்வரு | 40 |
| பெரியோர்சினம் | 81 |
| போதும்போது | 122 |
| மற்றதெல்லாம் | 23 |
| மாங்குயில்கூவிய | 100 |
| மாதினைஞப்புலை | 76 |
| மார்கழிமாதத்திரு | 75 |
| மார்கழிமாதத்திலா | 105 |
| மீசைநரைத்துப் | 40 |
| வந்தாலும்வராட் | 147 |
| வருகலாமோவை | 114 |
| வருவாரோஅருள் | 126 |
| வருவார்வருவார் | 124 |
| வருவாரோவரம் | 131 |
| வழிமறைத்திருக்கு | 22 |
| வாராமலிருப்பா | 121 |
| வாரிருக்குதுதோலி | 17 |
| வானோர்புகழ்தில் | 107 |
| விருத்தாச்செனம | 127 |
| வேதம்புடித்ததம் | 108 |
| வேதியர்-எழைப்பா | 90 |
| **கடுக்கா.** | |
| அரஅரசிவ | 45 |
| குதித்தார் | 23 |
| வீரன் | 42 |
| **பெரியகடுக்கா.** | |
| ருநாளைப்போவா | 4 |
| **தண்டகம்.** | |
| த்திப்புலிப்போ | 44 |
| **சலோகம்.** | |
| மென்னப்பேசி | 73 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| தேவாரங்கள் | 148 |
| **தரு - அகராதி.** | |
| அதிசயமொன்று | 132 |
| கனநாதசரணம் | 6 |
| பொன்னம்பலவா | 72 |
| யாகோற்பவுமாஞ | 140 |
| **நொண்டிச்சிந்து.** | |
| ஐயேவொருசேதி | 51 |
| பழனமருங்கணையும் | 91 |
| **சிந்து.** | |
| அடடாஇதென்ன | 128 |
| அவர்காருமெதி | 15 |
| இதுதானேதில்லை | 1 5 |
| கனவிலுருவாகி | 145 |
| கெண்டாமணியோ | 102 |
| சிவன்-வேடிக்கை | 10 |
| நாளைப்போவே | 36 |
| பழனமருங்கணையு | 14 |
| பாப்பாரச்சாதி | 38 |
| பெரியோரிருக்குமி | 116 |
| பேணிச்சாரும் | 27 |
| **கண்ணி - அகராதி.** | |
| ஆசைகேசாரும் | 69 |
| களையெடாமல்சல | 84 |
| வாருங்கள் | 29 |
| **தோடய அகராதி.** | |
| திருவளர்தருமாதனு | 7 |
| **மங்களம்.** | |
| திருநாளைப்போ | 152 |
| ஆதிமத்தியாந்தனுக் | 8 |
| **சிதம்பரக்கும்மி.** | |
| சீர்மேவந்தில்லை | 153 |
| **ஆனந்தக்களிப்பு.** | |
| காணுதகண்ணென் | 107 |
| காணுமலிருக்கலா | 28 |
| நந்தாநீசிவபத்த | 91 |
| **இருச்சொல்லலங்காரம்.** | |
| நந்தனார்-சிவனே | 31 |
| நந்தனார்-சிவதலத் | 61 |
| நந்தனார்-தில்லைய | 30 |
| நந்தனார்-தில்லையை | 73 |
| **அகவல்.** | |
| புலையர்-எல்லைப்பிடா | 43 |
| பாக்கியமீதென்று | 34 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| **ஏ** | |
| புலையர்-பார்ட | |
| புலையர்-ஆண்டி | |
| **கலித்துறை.** | |
| அண்டமான | |
| **துக்கடா.** | |
| ஹரஹர | 6 |
| சட்டமாக | 23 |
| நந்திதுர | 23 |
| மாளாபிறவி | 24 |
| **சவாயி.** | |
| நலம்வந்து | 21 |
| சிவலோக | 21 |
| **கீர்த்தனைகள்-அகராதி** | |
| **முற்றிற்று** | |
| **விருத்தங்-அகராதி.** | |
| அடிமுடியொன்று | 82 |
| அடியவர்கள் | 79 |
| அந்தணர்கள் | 157 |
| அம்மையாந்தில்லை | 109 |
| அய்யரேவாரு | 85 |
| அல்லெனுங்குழ | 75 |
| அவப்பொழுது | 91 |
| அறிவுமிகும் | 84 |
| ஆதிகாண்முதத் | 83 |
| இத்தன்மையீசர் | 27 |
| இத்தனைகாட் | 44 |
| இப்பரிசாயிருக்க | 109 |
| இபபிறவிபோய் | 181 |
| இரவுபகல் | 51 |
| இவ்வண்ணமிரவு | 126 |
| இன்னல்தரு | 128 |
| ஊரில்விடும்படைத் | 15 |
| ஐயரேயம்பலவ | 138 |
| ஒதியடிவீரா | 58 |
| ஓங்காரமென்று | 49 |
| கடுவருந்தியம் | 88 |
| கதிரொருமுழமே | 67 |
| கழனியைத்தெய்வ | 38 |
| களைபடுங்கண்டன் | 89 |
| காலனுடல் | 28 |
| காலமேவந்தா | 53 |
| கைதொழுது | 140 |
| கொள்ளையெனும் | 46 |
| சங்கரன்றன | 8 |